# திருக்கோயில்


ஆகஸ்ட் 1978 ரு 1-25

124



COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
31 ஜூலை 1978
EGMORE, MADRAS 8.

தருமையாதீன குருபூசை விழாவில்
சீலத்திரு சண்முக தேசிகர்
அவர்கள் திருவோலக்கத்தில்
அமர்ந்து, திருப்பனந்தாள்
காசிமடத்தின் தலைவர்
தவத்திரு முத்துக்குமாரசுவாமி
தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்
கும், முன்னாள் அறநிலைய ஆணையர்
திரு. மா. சே. சாரங்கபாணி
முதலியார், பி. ஏ., பி. எல்.
அவர்களுக்கும், பொன்னாடை
போர்த்திச் சிறப்பித்து
அருளாசி வழங்குதல்.






தருமையாதீன குருபூசை விழாவில், சீலத்திரு சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்,
பட்டணப்பிரவேசம் புரிதல்

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
31 ஆக 1978

முகப்பு:
கூத்தப்பெருமான் திருவுருவம்,
அருள்மிகு
மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,
மதுரை.

# திருக்கோயில்

மாலை: 21 | காளயுக்தி ஆண்டு—ஆவணித் திங்கள் ஆகஸ்ட்—1978 | மணி: 11

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. **15—00** உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. **1—25** வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் *[PINCODE]* எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. **9—60** ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. **20—00**-ல் இருந்து ரூ. **25—00** ஆக ஜனவரி **1978** முதல் மாற்றி அமைக்கப்பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

அறிவிப்பு—ஆணையர்

தமிழகக் கோயில்கள், சில தகவல்கள்
—ஆசிரியர்

பிறப்பிலும் இறப்பிலும் உள்ள தெய்வ இரகசியம்
—மதுரை ஆதீனத் தலைவர்

சேக்கிழார் பெருமான் திருவுள்ளம்
—ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

நாயன்மார் தோன்றிய நற்பெருந் தலங்கள்
—ஆசிரியர்

அறத்தின் பெருமை
—திருமுருக கிருபானந்தவாரியார்

கொட்டுக்கு இசைந்த கூத்தன்
—திரு. எஸ். கே. சுவாமி

நான்கு சாதனங்கள்
—கவியோகி சுத்தானந்த பாரதியார்

பேராசை வாரியன்
—ஆசிரியர்

திருச்சிற்றம்பலக் கோவையார்
—ஆசிரியர்

தமிழின் நீர்மை
—திரு ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

கம்பராமாயணம்
—திரு ம. பொ. சிவஞானம்

சிவஞான போதத் தெளிபொருட் சுருக்கம்
—ஆசிரியர்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"**

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
158634
சென்னை-600 008

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
ஆணையர் அலுவலகம்,
சென்னை-34.

25—7—1978

# அறிவிப்பு

1. அறநிலையத்துறையில் எல்லாக் காரியங்களும் 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் கீழ் நடைபெறுகின்றன. ஆக எந்தக் கோரிக்கையும், பிரச்சினையும் இச்சட்ட விதிகளின் அடிப்படையில்தான், கவனிக்கப்பட்டு முடிவு செய்யப்பட வேண்டும்.

2. ஆகவே அறநிலையச் சட்டத்தின்படி உத்திரவு பெறவேண்டிய சகல காரியங்களிலும், முதற்கட்டமாக ஆலய நிர்வாகியை அணுகி, அவருடைய உத்திரவைப் பெற வேண்டும். ஆலய நிர்வாகியின் உத்திரவு பாதகமாக இருந்தால், உதவி ஆணையர் அல்லது துணை ஆணையரை அணுகி மனுக் கொடுத்து, உத்திரவு பெறல் வேண்டும். உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் உத்திரவிடுவதில் தாமதம் ஏற்பட்டாலோ அல்லது உத்திரவு பாதகம் எனக் கருதினாலோ, ஆணையருக்குச் சட்டப்பிரிவுகள் 21 மற்றும் 23ன்படி மனுச் செய்யவேண்டும், இம்மாதிரி முறைகளைக் கையாளாது, நேரடியாக ஆணையரிடம் மனு தாக்கல் செய்வதைத் தவிர்த்தல் வேண்டும். ஆணையரிடம் நேரடியாக முதலிலேயே கொடுக்கப்படும் மனுவில், ஆணையர் சட்டப்படியான உத்திரவு போட இயலாது. ஒவ்வொரு அலுவலர்க்கும் சட்ட ரீதியான அதிகாரங்கள் உள்ளன. அந்த அதிகாரங்களைச் சம்பந்தப்பட்ட அலுவலர் அமுல் செய்யும்போது, மேலதிகாரிகள் தலையிடுவது சட்ட விதிகளுக்கு விரோதமான காரியமாகும்.

3. மேல் முறையீட்டு மனுக்கள் பேரில் தான், கீழ் அதிகாரிகள் பிறப்பிக்கும் உத்திரவுகளை, ஆணையர் பரிசீலனை செய்து முடிவு செய்யலாமே தவிர, அவரே கோரிக்கைகளின் பேரில், முதலிலேயே உத்திரவு போட முடியாது. ஆக எக்காரியத்திலும் சம்பந்தப்பட்ட செயல் அலுவலரின் உத்திரவு ஒன்றை, முதலில் பெற வேண்டும். அந்த உத்திரவு சரியல்ல என்று கருதினால், அந்த உத்திரவின் பேரில், உதவி ஆணையருக்கோ அல்லது துணை ஆணையருக்கோ மனுக் கொடுக்கவேண்டும். அவர்களின் உத்திரவுகளைப் பெறுவதற்கு முன்னால், ஆணையரிடம் மனுக் கொடுப்பது சட்ட விதிகளுக்கு ஒத்ததாக இருக்காது.

4. ஆலய நிர்வாகம் குறித்துப் புகார் கூறவேண்டுமானாலும், முதலில் உதவி ஆணையர் அல்லது துணை ஆணையரிடம் மனுக்கொடுத்து, அவரால் எடுக்கப்படும் நடவடிக்கையைத் தெரிந்து கொள்ளவேண்டும். அவருடைய நடவடிக்கை போதிய திருப்தி அளிக்காமலிருந்தாலும், அவரிடம் சட்டப்படியான பரிகாரம் கிடைக்காமலிருந்தாலும், அதை ஆணையரிடம் மனு மூலம் தெரிவிக்கலாம்.

5. மனுக்களில் முத்திரை ஸ்டாம்பு ஒட்டுவது, ஆட்சேபிக்கின்ற உத்திரவு, நடவடிக்கை ஆகியவைகளின் விவரங்களைக் குறிப்பது சம்பந்தமான விதிகளை, அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

—ஆணையர்.

# தமிழகக் கோயில்கள், சில தகவல்கள்

## தமிழ்நாட்டிலுள்ள கோயில்களின் விவரம்

| | மாவட்டம் | | சிவன் கோயில்கள் எண்ணிக்கை | வைணவக் கோயில்கள் எண்ணிக்கை | இதர கோயில்களின் எண்ணிக்கை | மொத்தக் கோயில்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | ... | 47 | 120 | 538 | 705 |
| 2. | செங்கற்பட்டு | ... | 604 | 254 | 356 | 1,214 |
| 3. | தென்னாற்காடு | ... | 690 | 344 | 1,588 | 2,622 |
| 4. | வடஆற்காடு | ... | 1,054 | 374 | 90 | 1,518 |
| 5. | தஞ்சாவூர் | ... | 2,121 | 663 | 1,497 | 4,281 |
| 6. | திருச்சிராப்பள்ளி | ... | 950 | 362 | 1,074 | 2,386 |
| 7. | புதுக்கோட்டை | ... | 120 | 80 | 1,031 | 1,231 |
| 8. | இராமநாதபுரம் | ... | 829 | 87 | 481 | 1,397 |
| 9. | மதுரை | ... | 1,093 | 316 | 479 | 1,888 |
| 10. | திருநெல்வேலி | ... | 798 | 210 | 582 | 1,590 |
| 11. | கன்னியாகுமரி | ... | 398 | 33 | 20 | 451 |
| 12. | தர்மபுரி | ... | 405 | 638 | 643 | 1,686 |
| 13. | சேலம் | ... | 209 | 388 | 1,000 | 1,597 |
| 14. | கோயம்புத்தூர் | ... | 710 | 351 | 948 | 2,009 |
| 15. | நீலகிரி | ... | 5 | 6 | 19 | 30 |
| | | | 10,033 | 4,226 | 10,346 | 24,605 |

## தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான சில மடங்கள்

| | மடத்தின் பெயர் | | இருப்பிடம் | மாவட்டம். |
|---|---|---|---|---|
| 1. | வானமாமலை மடம் | ... | நாங்குனேரி | திருநெல்வேலி |
| 2. | திருக்குறுங்குடி மடம், நாங்குனேரி | ... | திருக்குறுங்குடி | ,, |
| 3. | திருஞானசம்பந்த சுவாமிகள் மடம், (மதுரை ஆதீனம்) | ... | மதுரை | மதுரை |
| 4. | திருவண்ணுமலை ஆதீனமடம் | ... | குன்றக்குடி | இராமநாதபுரம் |
| 5. | ஈசானிய மடம் | ... | திருவண்ணுமலை | வடஆற்காடு |
| 6. | ஞானியார்மடம் | ... | கடலூர் | தென்னுற்காடு |
| 7. | பொம்மபுர ஆதீன மடம் | ... | மயிலம் | ,, |
| 8. | திருவாவடுதுறை ஆதீனம் | ... | திருவாவடுதுறை | தஞ்சாவூர். |
| 9. | தருமபுர ஆதீனம் | ... | தருமபுரம் | ,, |
| 10. | காசி மடம் | ... | திருப்பனந்தாள் | ,, |
| 11. | உருத்திராபதி மடம் | ... | இராஜகோபாலபுரம் | ,, |
| 12. | சங்கராச்சாரியர் மடம் | ... | காஞ்சிபுரம் | செங்கற்பட்டு |
| 13. | தொண்டைமண்டல ஆதீன மடம் | ... | காஞ்சிபுரம் | ,, |
| 14. | சிதம்பரசுவாமிகள் மடம் | ... | திருப்போரூர் | ,, |
| 15. | அகோபில மடம் | ... | மதுராந்தகம் | ,, |
| 16. | திருவாலங்காடு இம்முடி அகோர தர்ம சிவாச்சாரியார் ஆயிர வைசிய மடம். | | நெருஞ்சிப்பேட்டை | கோயம்புத்தூர் |
| 17. | பேரூர் ஆதீன மடம் | ... | பேரூர் | ,, |
| 18. | கௌமார மடம் | ... | சிரவணபுரம் | ,, |

## சமண அறநிலையங்களின் பட்டியல்

1. திருலோக்யநாதசுவாமி ஆலயம், திருப்பருத்திக் குன்றம், காஞ்சிபுரம் நகர், செங்கற்பட்டு மாவட்டம்.
2. தர்மதீர்த்தங்கரர் ஜெயின் ஆலயம், அருங்குளம், திருத்தணி வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.
3. அருகர்கோயில், மேல்மலையனூர், செஞ்சி வட்டம், தென்னுற்காடு மாவட்டம்.
4. தீபநாயகசுவாமி ஆலயம், தீபங்குடி, நன்னிலம் வட்டம், தஞ்சைமாவட்டம்.
5. குன்றுநாதர் & தேவராசர் ஆலயம், கர்ந்தை கிராமம், செய்யாறு வட்டம், வடஆற்காடு மாவட்டம்
6. அருகர் ஜெயின் ஆலயம், மேல்கரம்பேடு, செய்யாறு வட்டம்.
7. அருகர் ஜெயின் ஆலயம், விருதூர், ,, ,,
8. அருகர் ஜெயின் ஆலயம், இராமசமுத்திரம் ,, ,,
9. அருகர் ஜெயின் ஆலயம், வெண்குன்றம் ,, ,,
10. வர்த்தமானீஸ்வரர் ஆலயம், தேசூர், வந்தவாசி வட்டம் வடஆற்காடு மாவட்டம்.
11. திருலோகநாதர் ஆலயம், தெள்ளாறு ,, ,,
12. அருகர் ஜெயின் ஆலயம், பூண்டி, ஆரணிவட்டம். ,,
13. அம்மணீஸ்வர சுவாமி ஆலயம், திங்களூர், ஈரோடு வட்டம், கோவை மாவட்டம்.
14. சந்திரப்பிரபாதீர்த்தங்கரர் ஆலயம், மேட்டுப்புத்தூர், ,, ,,
15. ஆதீஸ்வரசுவாமி ஆலயம், பஸ்தி ஆலயம், சீனுபுரம் ,, ,,
16. மணவாளநாதசுவாமி ஆலயம், அம்மந்தகுடி, திருவாடானை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

## அறநிலையத்துறையின் சார்பில் நடத்தப்படும் கல்லூரிகள் மற்றும் பள்ளிகள்

### கல்லூரிகள்

1. பழநியாண்டவர் கலைக்கல்லூரி (ஆண்கள்), பழநி, மதுரைமாவட்டம்.
2. பழநியாண்டவர் பண்பாட்டுக் கல்லூரி, பழநி.
3. பழநியாண்டவர் கலைக்கல்லூரி (பெண்கள்), பழநி.
4. பழநியாண்டவர் மகளிர் செந்தமிழ்க்கல்லூரி, பழநி.
5. தேவி குமாரி பெண்கள் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.
6. இராமநாதசுவாமி பள்ளி (இந்தியன் ஆர்ட்ஸ் & கல்ச்சர், டிப்ளமோ), இராமேசுவரம்.
7. பராசக்தி பெண்கள் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்
8. பூம்புகார் பேரவைக்கல்லூரி, காவிரிப்பூம்பட்டினம் தஞ்சாவூர்

(7, 8) இந்த இரண்டும் அறநிலையத் துறையின் பொருளுதவி கொண்டு தொடங்கப் பெற்றன.

### உயர்நிலைப்பள்ளிகள்

1. பண்மொழி,
2. காந்திமதி பள்ளி, பாளையம்கோட்டை.
3. திருவெண்காடு.
4. மதுரை.
5. திருப்பரங்குன்றம்
6. இராமேசுவரம்
7. மருதமலை.
8. அய்யம்பாளையம்
9. கல்லங்குறிச்சி
10. மண்டைக்காடு.
11. திருப்பரப்பு
12. கோவிலூர்
13. கீவளூர்.
14. திருவெண்காடு (பெண்கள்)
15. திருவிடைமருதூர்.
16. தருமபுரம்.
17. மயிலம்.
18. திருச்செந்தூர்.
19. கோட்டாறு.
20. சரவணம்பட்டி.
21. கணபதிபுரம்.
22. மெட்ரிக் ஸ்கூல், பழநி.

### நடுநிலைப்பள்ளி

1. அழகர்கோயில்
2. குழித்துறை.
3. திருவாவடுதுறை

### ஆரம்பப்பள்ளி

1. திருவெண்காடு.
2. திருவிடைமருதூர்.
3. பாளையங்கோட்டை.

## அறநிலையத்துறையின் சார்பில் நடத்தப்பெறும் சித்த வைத்தியசாலைகள்

1. வடபழநி.
2. மணவாளநல்லூர்
3. திருத்தணி
4. கல்லக்குறிச்சி
5. சங்கரன்கோவில்
6. வயலூர்
7. திருப்புகலூர்
8. பழநி
9. இராமேசுவரம்
10. இருக்கங்குடி
11. வீரவநல்லூர்
12. பண்பொழி
13. சமயபுரம்.
14. பன்ருரி
15. திருச்செந்தூர்.
16. வேதாரண்யம்.
17. மருதமலை
18. சிக்கல்
19. ரெட்டியார்சத்திரம்
20. திண்டுக்கல்
20. மதுரை
22. கொடுமுடி

அலோபதி: பழநி

ஆங்கில மருத்துவ மனைகள்

1. தியாகராச சுவாமி ஆலயம், திருவாரூர்.
2. இராமநாதசுவாமி ஆலயம், இராமேசுவரம்.
3. தியாகராசசுவாமி ஆலயம், திருவாய்மூர்.
4. சண்முகநாதர் ஆலயம், குன்றக்குடி.
5. சிவகெங்கை தேவஸ்தானம், சிவகெங்கை.
6. சுப்பிரமணியசுவாமி ஆலயம், திருச்செந்தூர்.
7. சங்கரநாராயணசுவாமி ஆலயம், சங்கரன்கோயில்.
8. திருமலைக்குமாரசுவாமி ஆலயம், பண்பொழி.

## அறநிலையத்துறையின் சார்பில் நடத்தப்பெறும் கருணை இல்லங்களின் விவரம்

| | ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர் | | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | கபாலீசுவரர் ஆலயம், மயிலாப்பூர் | ... | சென்னை |
| 2. | வடபழநியாண்டவர் ஆலயம், வடபழநி | ... | ,, |
| 3. | தேவிகருமாரியம்மன் ஆலயம், திருவேற்காடு | ... | செங்கற்பட்டு |
| 4. | சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை | ... | ,, |
| 5. | சக்திவிநாயகர் ஆலயம், செங்கற்பட்டு | ... | ,, |
| 6. | இலட்சுமிநரசிம்மசுவாமி ஆலயம், சோளிங்கபுரம் | ... | வடஆற்காடு |
| 7. | அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை | ... | ,, |
| 8. | சத்தியஞானசபை, வடலூர் | ... | தென்னாற்காடு |
| 9. | கொளஞ்சியப்பர் ஆலயம், மணவாளநல்லூர் | ... | ,, |
| 10. | அரங்கநாதர் ஆலயம், திருவரங்கம் | ... | திருச்சிராப்பள்ளி |
| 11. | சுப்பிரமணியசுவாமி ஆலயம், குமாரவயலூர் | ... | ,, |
| 12. | கல்யாணவேங்கடரமணசுவாமி ஆலயம், தாந்தோன்றிமலை | ... | ,, |
| 13. | மந்திரபுரீசுவரர் ஆலயம், கோவிலூர் | ... | தஞ்சாவூர் |
| 14. | பவஔஷதீசுவரர் ஆலயம், திருத்துறைப்பூண்டி | ... | ,, |
| 15. | சுவாமிநாதசுவாமி ஆலயம், சுவாமிமலை | ... | ,, |
| 16. | பரிமளரங்கநாதர் ஆலயம், திருஇந்தளூர் | ... | ,, |
| 17. | தியாகராசசுவாமி ஆலயம், திருவாரூர் | ... | ,, |
| 18. | சுவேதாரண்யேசுவரர் ஆலயம், திருவெண்காடு | ... | ,, |
| 19. | அக்னீசுவரர் ஆலயம், திருப்புகலூர் | ... | ,, |
| 20. | சுப்பிரமணியசுவாமி ஆலயம், எட்குடி. | ... | ,, |
| 21. | மீனாட்சிசுந்தரேசுவரர் ஆலயம், மதுரை | ... | மதுரை |
| 22. | கள்ளழகர் ஆலயம், அழகர்கோயில் | ... | ,, |
| 23. | பூலானந்தீசுவரர் ஆலயம், சின்னமனூர் | ... | ,, |
| 24. | இராமநாதசுவாமி ஆலயம், இராமேசுவரம் | ... | இராமநாதபுரம் |
| 25. | கொப்புடைநாயகியம்மன் ஆலயம், காரைக்குடி | ... | ,, |
| 26. | பூவணநாதசுவாமி ஆலயம், கோவில்பட்டி | ... | திருநெல்வேலி |
| 27. | சங்கரநாராயணசுவாமி ஆலயம், சங்கரன் கோயில் | ... | ,, |
| 28. | சுப்பிரமணியசுவாமி ஆலயம், திருச்செந்தூர் | ... | ,, |
| 29. | இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள், சுசீந்திரம் | | கன்னியாகுமரி |
| 30. | சுப்பிரமணியசுவாமி ஆலயம், மருதமலை | ... | கோயம்புத்தூர் |
| 31. | பொன்மலை வேலாயுதசுவாமி ஆலயம், கிணத்துக்கடவு | ... | ,, |
| 32. | பட்டீசுவரர் ஆலயம், பேரூர் | ... | ,, |
| 33. | சுப்பிரமணியசுவாமி ஆலயம், சென்னிமலை | ... | ,, |
| 34. | மகுடேசுவரர் ஆலயம், கொடுமுடி | ... | ,, |
| 35. | கொண்டத்துக்காளியம்மன் ஆலயம், பாரியூர் | ... | ,, |
| 36. | சித்தேசுவரர் ஆலயம், கஞ்சமலை | ... | சேலம் |

### அனாதை இல்லங்கள்

1. தண்டாயுதபாணி சுவாமி ஆலயம், பழநி, மதுரை மாவட்டம்.
2. மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம், ,, ,,
3. வாழைத்தோட்டத்து அய்யன்கோயில், அய்யம்பாளையம், கோவைமாவட்டம்.

### ஊமை, செவிடர் பள்ளிகள்

1. தண்டாயுதபாணிசுவாமி ஆலயம், பழநி, மதுரைமாவட்டம்.
2. மாரியம்மன் ஆலயம், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

### முதியோர் இல்லங்கள்

1. மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம், மதுரை, மதுரை மாவட்டம்.
2. தண்டாயுதபாணிசுவாமி ஆலயம், பழநி, ,, ,,
3. சுப்பிரமணியசுவாமி ஆலயம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாவட்டம்.

### குழந்தைகள் காப்பகங்கள்

1. தண்டாயுதபாணிசுவாமி ஆலயம், பழநி, மதுரை மாவட்டம்.
2. கலியுகவரதராஜப் பெருமாள் ஆலயம், கல்லங்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
3. சுப்பிரமணியசுவாமி ஆலயம், குமாரவயலூர், ,, ,,
4. வேதநாராயணப்பெருமாள் ஆலயம், திருநாராயணபுரம், ,, ,,

### வேதாகமப் பாடசாலைகள்

1. அல்லூர்.
2. தருமபுரம்
3. பழநி
4. திருச்செந்தூர்

### ஓதுவார் பள்ளிகள்

1. திருவெண்காடு.
2. திருப்புகலூர்
3. திருக்கடவூர்.
4. திருவாரூர்.
5. திருக்களர்.
6. பழநி
7. மயிலாப்பூர்.

### தேவார பாடசாலைகள்

1. திருவெண்காடு
2. திருப்புகலூர்
3. திருக்கடவூர்
4. திருவாரூர்
5. திருக்களர்
6. பழநி.
7. மருதமலை.

### சமயப்பரப்புநர்கள்

1. இராமேசுவரம்.
2. திருச்செந்தூர்.
3. சுசீந்திரம்.
4. திருவேற்காடு.
5. மணவாளநல்லூர்.
6. மதுரை.
7. மருதமலை.
8. திருத்தணி.

### நாதசுவரப் பள்ளிகள்

1. பழநி.
2. சிக்கல்.

—தொகுத்தவர், ஆசிரியர்.

—(தொடரும்)

### பிறப்பிலும் — இறப்பிலும் உள்ள

# தெய்வ இரகசியம்

[சீலத்திரு. சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்]

(மதுரை ஆதீனம்)

இவ்வுலகிலுள்ள உயிர் வர்க்கங்களில் ஆறுவது அறிவாகிய மனதைப் பெற்ற மனித இனத்திற்கு மட்டுமே, தனித் தனிப் பெயர்கள்சூட்டப் பெற்றிருக்கின்றன. மனிதரிடம் மட்டுமே ஒருவரை யொருவர் பெயர் சொல்லி அழைக்கின்ற பழக்கம் இருந்து வருகின்றது.

அவ்வாறு சூட்டப்பெற்றிருக்கிற பெயர், பாரமுள்ள சதை உடம்பிற்கே சூட்டப்பெற்றிருப்பதாகப் பெரும்பாலோர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் கண்ணுக்குத் தெரியாத உயிருக்கும் மனதிற்கும் சூட்டப் பெற்றிருக்கிறதென்று கருதி வருகிறார்கள். அல்லாமலும், ஒருவருக்கு இட்டிருக்கிற பெயர், பெற்றோராலேயோ, பிற பெரிய மனிதர்களாலேயோ, சூட்டப்பெற்றிருக்கிறதென்றும் கருதியிருக்கிறார்கள். மனிதருடைய பிறப்பில் குடும்ப ரகசியம் ஒன்றும், தெய்வ ரகசியம் ஒன்றும் இருக்கின்றன.

## குடும்ப இரகசியம் :

உலகிலுள்ள எல்லோரையும் தாய்மார்களே பெற்றிருக்கிறார்கள். அவர்களே பத்துத் திங்கள் குழந்தையைச் சுமந்து, அரும்பாடு பட்டுப் பெற்றெடுத்து, வளர்த்து வருகிறார்கள். ஆனால், யாரிடத்திலும் 'நீ யாருடைய குழந்தை?' என்று கேட்டால் ஆணாயிருந்தாலும், பெண்ணா யிருந்தாலும், ஈன்றெடுத்த தாயின் பெயர் சொல்லாமல், தந்தையார் பெயரையே சொல்லி அவருடைய மகன் அல்லது மகள் என்று சொல்லி வருகிறோம்.

அவ்வாறு சொல்லி வருவதில் என்ன நியாயம் இருக்கிறது என்று கேட்கலாம். அதற்குரிய உண்மையான காரணத்தில்தான், ஒரு சிறந்த குடும்ப ரகசியம் இருக்கிறது.

திருமணமான ஒரு பெண் தன்னுடைய கணவனது உடைமையாகிவிடுகிறாள். அதனாலேயே, அவள் தந்தையாருடைய விலாசத்தைப் போடாமல் கணவருடைய பெயரைச் சொல்லியே, தன் பெயரைச் சொல்லுகிற பழக்கம் உலகம் முழுவதிலும் இருந்து வருகிறது.

ஒருவருக்கு ஒரு தென்னந் தோப்பு சொந்தமென்று கருதிக் கொள்வோம். அதில் விளைந்து வருகின்ற மகசூல் அத்தோப்புக்குரிய சொந்தக்காரைச் சேர்ந்ததே தவிர, தோப்புக் குரியது அல்ல அல்லவா? தோப்புக்குரியவர் வித்திடுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தாரே தவிர, வெயிலிலும் மழையிலும் நின்று நீரையும் உரத்தையும் உண்டு, மகசூல் உண்டு பண்ணித்தந்தது தோப்பே ஆகும்.

அது போலவே, மனைவி, கணவனுடைய உடைமையாகிற படியாலும், குழந்தைக்குரிய வித்திட்டவர் கணவனே யாதலாலும், மனைவி, எவ்வளவு பாடுபட்டுக் குழந்தையைப் பெற்று எடுத்து வளர்த்து வந்திருந்தாலும், அக்குழந்தை, தந்தைக்கே சொந்தமாகிறது. தாயானவள், கற்புடையவளாக இருந்தாலன்றிக் குழந்தைக்கு அதனுடைய தந்தை இன்னார்தான் என்று சுட்டிக் காட்ட முடியாது. அதனாலேயே, எம்மதங்களிலும், மனைவி கற்புடையவளாகத் திகழ வேண்டுமென்று வற்புறுத்தப் பெற்றிருக்கிறது.

ஆனால், குழந்தைக்குரிய கருவை எந்தத் தந்தையாரும் உற்பத்தி பண்ணிக் கொள்ள முடிவதில்லை. அதனாலேயே, அரசர்களுக்கும் டாக்டர்களுக்கும் தங்களுடைய விருப்பம்போல் குழந்தைகளைப் பெற்றெடுக்க முடியவில்லை. ஆறாவது ஜார்ஜ் மன்னருக்கும், நேருஜிக்கும் ஆண் குழந்தைகள் கிடையா. பல செல்வந்தர்களுக்குக் குழந்தைகளே கிடையா. குழந்தைப் பேற்றுக்குரிய கருவைத் தந்தையாரிடத்தில் கடவுளே கொடுக்க வேண்டியதிருக்கிறது. எவ்வாறு ஒருவருக்குரிய நஞ்சை நிலத்தில் நாற்றங்காலும் வயலும் இருக்கின்றனவோ, அதுபோல, தந்தையார் குழந்தைக்குரிய நாற்றங்காலாகவும், தாயார் வயலாகவும், அவ்விருவரையும் சொந்தமாக உடையவராகக் கடவுளும் இருக்கிறார். குழந்தைக்குரிய உடல்களைக் கடவுளே கொடுக்கிறார். குழந்தைக்குரிய பெயரையும் கடவுளே சூட்டி விடுகிறார் என்ற பேருண்மையை விளக்குவதற்காகவும் அதில் உள்ள தெய்வ இரகசியத்தை வெளிப்படுத்துவதற்காகவும் நம்முடைய மடாலயத்திற்கு வருகின்ற எம்மதத்தவரையும் கீழ்க்கண்ட கேள்வி

களையும் அவற்றிற்குரிய விளக்கங்களையும் கொடுத்துக் கடவுளே எல்லா மக்களுக்கும் அம்மையப்பன் ஆகிறான் என்ற பேருண்மையை உணர்த்தி வருகிறோம்.

பிரபல விஞ்ஞானிகளையும் டாக்டர்களை யும் மனோதத்துவ ஆராய்ச்சியாளர்களையும், நாம் கேட்கிற முதல் கேள்வி :

ஒருவருக்கு இடப் பெற்றிருக்கிற பெயர் காணக் கூடிய பாரமுள்ள சதை உடம் பிற்கா?

அல்லது, காண முடியாத உயிருக்கும் மனதிற்குமா?

அல்லது ஆவி உடல் என்னும் சொப்பனத் தில் தொழிற்படுகின்ற சொப்பன சரீரத்திற்கா? என்பதாகும்.

இக்கேள்விக்கான விளக்கம் வருமாறு :

பாரமுள்ள சதை உடம்பை (இறந்த பின்) நான்கு பேர் தூக்கிக் கொண்டு, மயானத்திற்கு எடுத்துக் கொண்டு செல்லும்பொழுது, என்ன தான் அலங்காரம் செய்திருந்தாலும், அதைப் பிணம், சவம், மையத்து என்றே கூறுகிறோம், ஆனதால், சதை உடம்பிற்குப் பெயர் கிடை யாது என்பது, யாரும் மறுக்க முடியாத உண்மை யாகும்.

காண முடியாத உயிருக்கும் மனதுக்கும் உருவமும், ஆண் பெண் பாகுபாடும் இல்லாத தால் அவற்றிற்கு ஆண் பெயரும், பெண் பெயரும் இருக்க முடியாது.

சொப்பன உடம்பில்தான் ஆண் பெண் பாகுபாடும், அதற்கான உருவ அமைப்பும் சகல அவயவங்களும் அவற்றின் தொழிற்பாடும், ஐம் புலன்களும், ஐம்புல இன்பங்களும் இருக்கின் றன. உயிரானது சொப்பன உடலாலேயே, சதை உடம்பை விட்டுப் பிரிகிறது. அது பிரிந்த உடனேயே, ஒருவருக்குரிய பெயரும் போய் விடுகிறது. ஆனதால், ஒருவருக்கு இட்டிருக்கிற பெயர் சொப்பன சரீரத்திற்குத்தான் சூட்டப் பெற்றிருக்கிறது என்பதை அனுமானித்து உணர்ந்து கொள்ளலாம்.

மேலும், ஒருவர் தூங்கும்பொழுது, அவ ரது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால், அவ ருடைய காது கேட்பதில்லை. அவர் உடம்பைத் தொட்டாலும் அவருக்குத் தோலுணர்வு இல்லை. அதே சமயத்தில் உயிரானது சொப்பன சரீரத்தின் மூலம், நாம் சதை உடம்பு கொண்டு அனுபவிக்கின்ற சகல இன்ப துன்பங்களையும், கனவில் அனுபவிக்கிறதையும் யாரும் மறுக்க முடியாது.

சொப்பனத்தில் அனுபவிக்கப் படுபவை யெல்லாம், மனதில் அனுபவிக்கிற இன்ப துன் பங்களே என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறு வார்களானால், அவர்களிடம் நாம் ஒன்று கேட் கிறோம்.

கற்கண்டை நினைத்தால் (அந்த மன நினைப்புக் காரணமாக) நாவில் இனிப்பு ஏற் படுமா? இல்லை யல்லவா? ஆனால், உண்மையில் ஒரு கற்கண்டை வாயில் போட்டுச் சுவைக்கும் பொழுது நாவில் இனிப்பு உணர்வு வருகிற தல்லவா? அதே போன்று சொப்பனத்தில் கற்கண்டைச் சுவைத்துச் சாப்பிடுவதாக நாவில் இனிப்பு ஏற்படுகிறதும், அவ்வனுபவம் வெறும் மனதில் அனுபவிக்கப்படுவதில்லை என்பதும், அது ஒரு உடம்பின் அனுபவ நிகழ்ச்சியே என்பதையும், யாவரும் அனுபவத்தில் கண்டு வருகிறோம். மேலும், நாவு இன்றிச் சுவையை உணர முடியுமா? காதின்றிச் சப்தத்தைக் கேட்க முடியுமா? கண்ணின்றி எதையும் பார்க்க முடியுமா? தோலுணர்வின்றிச் சிற்றின்பம் (சொப்பனத்திலும்) அனுபவிக்க முடியுமா? ஆனால், சொப்பனத்தில் ஐம்புலன்களின் இன் பங்களும் ஏற்படுகின்றனவே? சொப்பன உட லில் கால்கள் இருக்கின்றன. அவை உதைக் கின்றன. கைகள் இருக்கின்றன. அவைகள் வேலை செய்கின்றன. வாய் இருக்கிறது. பேசு கின்றது. ஜலதாரை மலதாரை இருந்து வேலை செய்கின்றன.

அல்லாமலும், சொப்பனத்தில் கள்ளன் வருகிறதாகத் தோன்றுகிறது. உடனே அவ் வுடலில் உள்ள வாய் ''கள்ளன், கள்ளன்'' என்று கத்துகிறது. அதிலுள்ள வாய் அவ் வாறு கூக்குரலிடும் பொழுது, சதை உடம் பிலுள்ள வாயும் கூக்குரல் போட்டுப் பக்கத்தில் படுத்திருந்தவர்களை எழுப்பிவிடுகிறது. அது போல, சொப்பனத்தில் ஒருவர் ஒரு பாட்டுப் பாடினால், சதை உடம்பிலுள்ள அவரது வாயும் அவ்வாறு பாடி, பக்கத்தில் படுத்திருக்கின்ற வரை எழுப்பி விடுகிறது. தைரியசாலியாக இருந்தால், வலது காலாலோ, இடது காலாலோ வலது கையாலோ, இடது கையாலோ கனவில் கண்ட கள்ளனைத் தாக்கினால், சதை உடம்பில் உள்ள காலும், கையும் தொழிற்பட்டுக் கட்டி லில் அடிபட்டுச் சிலருக்கு நகம் பெயர்ந்து விடுவதையும் காண்கிறோம். சொப்பன சரீரத் தில் நெஞ்சு பதைபதைத்தால், சதை உடம்பில் நெஞ்சு பதைபதைப்பதையும் காண்கிறோம். அதில் கண்ணீர் வடித்தால் இதில் வடிவதை யும் காண்கிறோம். அதில் இன்ப அனுபவம் கண்டால், அது சதை உடம்பிலும் பிரதிபலிப் பதையும் அனுபவத்தில் யாவரும் அறிவர். இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவ்வித அனுபவங்கள் மக்களாய்ப் பிறந் திருக்கிற எம்மதத்தவருக்கும் எந்நாட்டவருக் கும் எம்மொழி பேசுகின்றவர்களுக்கும் எக்கா லத்திலும் இருந்து வருவதால், சொப்பன உடம்பின் தொழிற்பட்டாலேதான், ஒவ்வொ ருவருடைய சதை உடம்பின் அவயவங்களும் தொழிற்பட வேண்டியிருக்கின்ற பேருண்மை யையும், உயிரானது சதை உடம்பை நேரடி யாக இயக்காமல், சொப்பன சரீரத்தையே நேரடியாக இயக்கி, அதன் மூலம் சதை உடம்பை, சொப்பன நிலையிலும் விழிப்பு நிலையி லும் இயக்குகின்றது என்ற பேருண்மையும் புலனாகும்.

இவ்வுலகில் பேய் பிடித்து ஆடுவதைக் கிராமங்களில் வாழ்கின்ற வயது வந்தவர்கள்

எல்லோரும் கண்டிருப்பார்கள். அனுபவம் இல்லாதவர்கள் அனுபவம் உள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நாம் பேய்களை விரட்டக் கூடிய திருவருட் சக்தி பெற்று இருப்பதால் பல பிசாசுகளை விரட்டியிருக்கிறோம். நம்முடைய மடாலயத்திலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள நமது கிராமத்தில் மேலாளராக இருந்த இரத்தின முதலியார் என்பவர், ஒரு மழைக் காலத்தில் வாந்தியும் வயிற்றுப் போக்கும் இருந்ததன் காரணமாக மரணமடைந்தார். அதனைக் காலரா என்றும், அகால மரணமென்றும் எல்லோரும் கருதியிருந்தார்கள். அவர், நமது முந்தின சந்நிதானம் (ஆதீனகர்த்தருக்கு) அவர்களின் பூர்வாசிரம உறவினர் ஆகும். அவர் இறந்த இரண்டு வருடம் கழித்த பின்பு, அக்கிராமத்தில் விறகுச் சுள்ளிகள் சேகரித்து வந்த அடைக்கலம் என்ற 18 வயதுப் பெண்ணைப் பேயாகப் பிடித்துக் கொண்டார்.

அடைக்கலத்தினுடைய முந்திய நடையுடை பாவனை போய்விட்டதால், பேய் விரட்டும் நபரிடம் சென்று உடுக்கடித்துக் கேட்டார்கள். அப்பொழுது, அவள் தனது இயல்பான பெயரைச் சொல்லாமல், ''இரத்தின முதலியார்'' என்று சொல்லி, அவர் தான் கால மரணத்தினால் இறக்கவில்லை யென்பதையும், அவருக்கு நடந்த அகால மரணத்திற்கான விபரங்களையும் அவள் சொல்லி, அவையெல்லாம் சரிபார்க்கப்பட்டுச் சரியாக இருந்தன. அவள் சொல்லிய அந்த விபரங்களும் அவரது அகால மரணத்திற்குக் காரணமாக இருந்த இரகசியமும், இவர் சென்று வந்த ஊரும், ஊரின் பெயரும், அப்பெண்ணிற்கு அறவே தெரியாது. இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்ற பொழுதுதான், ''இறந்தவர்கள் பேசுவார்கள்'' என்ற நம்பிக்கை நமது குருநாதரான முந்தின சந்நிதானத்திற்கு ஏற்பட்டது. அந்தப் பெண்ணினது சொந்த சொப்பன உடலைப் பேச விடாமல் தடுத்து, சதை உடம்பு இறந்த பின், இறவாத சொப்பன உடலோடு வாழ்கின்ற இவர், அவளது சதை உடம்பைத் தனது சொந்த உடம்புபோல் பாவித்துக் கொண்டார் என்பது தெளிவாகும். அதிலிருந்து, பகுத்தறிவு உள்ளவர்கள் சதை உடம்புக்குப் பெயர் கிடையாது என்பதையும், ஞாபக சக்தியும் கிடையாது என்பதையும், உணர்ந்து கொள்ளலாம். சதை உடம்புக்குள்ளிருந்து அதனை இயக்கிவருகின்ற சொப்பன உடம்பிற்கே பெயரிடப் பெற்றிருக்கிறது என்பதையும், அதிலேதான் மனதும், உயிரும், ஞாபக சக்தியும் இருக்கின்றன என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

மரகதம் என்ற பெண்ணை, கொலையுண்டு இறந்து போன போலீஸ்காரராயிருந்த பொன்னுச்சாமி என்பவர் (பேயாகப்) பிடித்துக் கொண்டு, தனது மரண வரலாற்றையும், தனது பெயரையும் அறிவித்திருக்கிறார். மீனா என்ற தெலுங்கு தெரியாத ஒரு தமிழ்ப் பெண்ணைக் காமாட்சி என்ற தெலுங்கு பேசும் பெண் இறந்த பின் (பேயாகப்) பிடித்துக் கொண்டு மீனாட்சியின் சதை உடம்பு மூலம் காமாட்சி தெலுங்கில் பேசித் தன்வரலாற்றைக் கூறினாள். இவ்வாறு எத்தனையோ சம்பவங்களைக் கூறலாம். இவற்றிலிருந்து ஒருவருக்கு இடப் பெற்றிருக்கிற பெயர், சகல அவயவங்களும் உடைய சொப்பன உடலுக்கே என்பதை யாரும் மறுக்க முடியாது.

இவ்வுலக விஞ்ஞானிகளும், மனோதத்துவ ஆராய்ச்சியாளர்களும், பிற டாக்டர்களும் ஆராய்ந்து அறிந்திருக்க வேண்டிய பேருண்மைகளாவன :

(அ) சதை உடம்பின் அவயவங்களின் உதவியின்றிச் சொப்பனத்தில் சகல இன்ப துன்பங்களும் அனுபவித்து வருகிற ஆவி உடலே கடவுள் கொடுத்த நமது உண்மையான உடல் ஆகும்.

(ஆ) பெற்றோர்களைக் கொண்டு கொடுக்கச் செய்த உடம்பு, சொப்பன உடம்பிற்கு ஒரு கனத்த சட்டை போன்றதேயாகும்.

(இ) மேலும், சொப்பன உடலாகிய ஆவி உடம்பிலேயும், சதை உடம்பிலுள்ளது போலவே, தோலுணர்வும், நாவுணர்வும், மோப்ப உணர்வும், பார்வை உணர்வும், கேள்வி உணர்வும் ஆகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், கால், கை, வாய், ஜலதாரை, மலதாரை ஆகிய கன்மேந்திரியங்கள் ஐந்தும் இருக்கின்றன. (ஆக 10 இந்திரியங்கள்).

(ஈ) இவை தவிர, இதயத் துடிப்பு, உட்சுவாசம், வெளிச் சுவாசம், மலஜலம் கழித்தல், களைப்பு ஏற்படுதல், தாகம், பசி ஏற்படுதல், உணவை உதிரமாக்கி உடலை வளர்த்தல், இன்ப துன்பம் நுகர்வித்தல், விக்கல், கொட்டாவி, திடுக்கிடுதல், பயப்படுதல், கோபப்படுதல், தசைகள் பருத்தல், இளைத்தல் ஆகிய இவைகளைச் செய்கின்ற தச வாயுக்களும் தனித் தனிப் பெயர்களுடன் சொப்பன உடலாகிய ஆவி உடலிலேயே இருந்து அதனை இயக்கியே, அவ்வியக்கம் கொண்டு சதை உடம்பை இயக்குகிறது. (ஆக தச வாயுக்கள் 10).

(உ) மேற்கூறிய இந்திரியங்கள் 10, தச வாயுக்கள் 10 ஆக இருபதோடு, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அந்தக்கரணங்கள் நான்கும் உயிர் ஒன்றும் சேர்ந்து மொத்தம் (இருபத்தைந்து) தத்துவங்களும் சொப்பன உடலிலேயே இருந்து அதனை இயக்குமாறு கருணையுள்ள கடவுள் செய்திருக்கிறார்.

(ஊ) சதை உடம்பிலுள்ள எல்லா அவயவங்களையும், சொப்பன உடம்பே உண்டுபண்ணி வளர்க்கிறது. இறந்த பின்னரும் சொப்பன உடம்பு தொடர்ந்து வாழ்ந்தும், வளர்ந்தும், பேசியும் வருகிறது.

(எ) குழந்தை பிறப்பதற்கு 12 திங்களுக்கு (27 தினங்கள் கொண்டது ஒரு திங்களாகும்) முன்னரேயே, குழந்தையின் பெயரையும், அதற்குரிய கர்ம பலன்களையும் தீர்ப்புச் செய்து, அந்தத் தீர்ப்பை ஆண்களுக்கு வலது கரத்திலும், பெண்களுக்கு இடது கரத்திலும் இரேகைகளாகக் கருணையுள்ள கடவுள் பொறித்து விடுகிறார்.

(ஏ) பெற்றோர் கொடுத்த சதை உடம்பு இவ்வுலகில் அணு ஆயுதங்களாலும், மற்ற ஆயுதங்களாலும் அழியக்கூடியது. ஆனல், கடவுள் கொடுத்த சொப்பன உடம்பு இவ்வுலகில் உள்ள எதனுலும் அழியாததாகும்.

(ஐ) இறந்த பின் சொப்பன உடம்பு எவ்வளவு காலம் அங்கு வாழ வேண்டுமென்ற தீர்ப்புப் பெற்றிருக்கிறதோ, அவ்வளவு காலம் அருள் உலகிலோ, இருள் உலகிலோ வாழ்ந்து முடிந்ததும், அவ்வுடம்பு அங்கு அழிக்கப் பெறுகிறது. ஆவி என்பது அழியாத உயிரை மட்டும் குறியாமல் அழிகின்ற ஆவி உடம்பையும் குறிக்கிறது என்பதற்குப் பட்டினத்தடிகள் பாடல் சான்று தருகிறது. அதாவது,

ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவியென்ற நாமம் படையாதே—மேவியசீர்
வித்தாரமும் பகட்டும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலத் திரி

என்ற பாட்டில் ஆவி உடம்பும் சதை உடம்பும் அழியக் கூடியன என்பதும், ஆவி உடலோடு பலர் திரிகிருர்கள் என்பதும் பெறப்படுகிறது.

(ஒ) அவ்வாறு அழிக்கப் பெற்றதும், முந்தின பெயரும் உறவு முறைகளும் அழிந்து விடுகின்றன.

(ஓ) பள்ளிக்கூடத்தில் தேறியவன் மேல் வகுப்புக்குப் போவதும், தேருதவன் முந்தின வகுப்பிலேயே சேர்க்கப் பெறுவதும் போல, இவ்வுலக வாழ்வில் தேறியவன் பிறவாத மேல் நிலை எய்துவதும், தேருதவன், இப்பூவுலகிற்குத் திரும்பவும் ஒரு ஆளாய்ச் சொப்பன சரீரமோ, அல்லது சொப்பனப் பெண் சரீரமோ கடவுளால் கொடுக்கப் பெற்று, இப்பூவுலகில் பிறக்க வேண்டியதாக இருக்கிறது.

(ஔ) அகால மரணத்தில் சதை உடம்பு அழிக்கப் பெற்று, சொப்பன உடம்பு வெளியே வந்து விடுகிறது. அதுதான் இவ்வுலகில் பேயாகத் திரிந்து மற்றவர்களுடைய சதை உடம்பில் புகுந்து அந்த உடம்பைத் தனது சொந்த உடல் போல் பாவித்துக் கொள்ளுகின்றது. அவர்களுடைய மண்ணுலக வாழ்வு முடிந்ததும், எமதூதர்கள் அப்படிப்பட்டவர்களை விண்ணுலகிற்கு அழைத்துச் சென்று இருள் உலகில் சேர்த்து விடுவார்கள்.

(ஃ) காலமரணத்திலோ, சதை உடம்பிற்கு யாதொரு சேதமும் ஏற்படாமல் எமதூதர்கள் சரீரத்தைப் பிரித்து அவர்கள் செய்த புண்ணிய பாவத்திற்கு ஏற்ப அருள் உலகிலோ, இருள் உலகிலோ, கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்கள். அவர்களையே நூல்களின் ஆவிகள் என்று பேசப்படுகிறது.

இந்தியாவில் தமிழ் நாட்டில் பல பெயர்களில் இரேகை சாஸ்திரங்கள் பொறிக்கப் பெற்ற ஏடுகள் இருக்கின்றன. தமிழ் நாடு அரசாங்கத்தில் சப்த ரிஷி நாடிகளை அச்சுப் போட்டிருக்கிருர்கள். இன்னும் கந்தர் நாடி, காக்கையர் நாடி, சிவசிந்தாமணி நாடி, மீனுட்சி நாடி, கௌசிகர் நாடி, அகத்தியர் நாடி, அனுகதவேத நாடி, கபிலர் நாடி, சுகர் நாடி போன்றவைகளும், இது போன்ற பிற மொழிகளிலும் இருந்து வருகின்றன.

ஆண்களுக்கு வலது கரத்திலுள்ள அல்லது வலது பெரு விரல்களிலுள்ள இரேகைகளைக் கொண்டும், பெண்களுக்கு இடது கரத்திலுள்ள இரேகைகளைக் கொண்டும், அவருடைய பெயர், பெற்றோர் பெயர், மனைவி—கணவன் பெயர், பிறந்த விநாடி, அப்பொழுது வானில் இருந்த கிரக நிலைகள், அதனுல் அவருக்குள்ள வாழ்க்கை வரலாறு முதலியன கூறப்பெற்றுச் சகலமும் சரியாக இருப்பதை அறிந்து கொள்ளச் செய்து வருகிறோம். நாம் நமக்கு இளவரசு நியமனமும் அவ்வாறு அவரது ஊழ் எப்படி இருக்கிறதென்பதைச் சரி பார்த்த பின்னரே நியமித்திருக்கிறோம். இரேகை சாஸ்திரம் உண்மையானது தான் என்பதைச் சரி பார்க்க ரூபாய் ஒரு லட்சம் வரை செலவு செய்திருக்கிறோம்.

இவற்றிலிருந்து, ஒருவர் பிறக்கு முன்னரேயே, அவரவரது முன் ஜென்மத்தில் செய்த புண்ணிய பாவத்திற்குத் தகுந்தபடியே, ஒருவருக்கு வருகின்ற புகழ், இகழ், இன்பம், துன்பம், மூப்பு, சாக்காடு ஆகிய சகலமும், கடவுளது நியாயத் தீர்ப்பில் அமைந்துள்ளன என்பதைப் புரிய வைத்து வருகிறோம். ஒருவர் இந்த விநாடியில் இப்புவியில் பிறக்க வேண்டுமென்று இரேகைகள் கூறி அது சரியாக அமைந்திருக்குமானல், அவரது பெற்றோர் உடல் உறவு கொள்ளுகிற நேரமும் கடவுளது தீர்ப்பின் படியே அமைந்திருக்க வேண்டும் என்பதையும் யூகித்துக் கொள்ளலாம். சிவஞான சித்தியாரில் உள்ள 99வது பாடல்,

பேறுஇழவு இன்பமோடு பிணிமூப்புச் சாக்காடு என்னும்
ஆறும்முன் கருவுள் பட்டது; அவ்விதிஅனுபவத்தால்
ஏறிடும்; முன்பு செய்த கன்மம்இங்கு இவற்றிற்கு ஏது;
தேறுநீ இனிச்செய் கன்மம், மேல்உடல்சேரும்என்றே

என்று கூறுகிறது. 223வது பாடல், விழிப்பு நிலையில் 35 தத்துவங்களும், சொப்பன நிலையில் 25 தத்துவங்களும் வேலை செய்கின்றன என்றும் சதை உடலிலுள்ள அவயவங்கள் போல் சொப்பன உடம்பிலும் (ஆவி உடம்பிலும்) சகல அவயவங்களும் இருக்கின்றன என்பதையும் குறித்து,

''சாக்கிரம் முப்பத்தைந்து நுதலினில்கனவுதன்னில்
ஆக்கிய இருபத்தைந்து களத்தினில் சுழுனை மூன்று
நீக்கிய இதயந்தன்னில் துரியத்தில் இரண்டு நாபி
நோக்கிய துரியாதீதம் நுவலின் மூலத்தில் ஒன்றே''

—சிவஞான சித்தியார் 223

என்றும் கூறுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, இறந்த பின் வாழுகின்ற சொப்பன உடலை, அந்தி சந்தி வேளைகளில் பருவமடைந்த பெண்கள் தங்களுடைய கண்களால் காண முடியும்; அப்படிப்பட்ட சக்தி பெற்ற அவர்களை ''க்லேயர்வாயண்ட் மீடியம்'' (Clairvoyant medium) என்று ஆங்கிலேயர்கள் சொல்லி வருகிருர்கள். இறந்தவர்களது சொந்தக் குரலைக் கேட்கக் கூடியவர்களைக் ''க்ளேயர் ஆடியண்ட்'' (Clair-audiant) என்று கூறி வருகிருர்கள்.

அல்லாமலும், மேற்கு ஜெர்மனியிலுள்ள டாக்டர் கான்ஸ்டன்டைன் ரேடிவ் என்பவர் இறந்தவர்களுடைய சொந்தக் குரலை மின்சாதனத்தைக் கொண்டு டேப் ரிகார்டு (நாடா ஒலிப் பதிவு) செய்திருக்கிறார். அப் பதிவுகளைப் புத்தகமாக வெளியிட்டுள்ளார். அப்புத்தகத்தின் பெயர் ப்ரேக் த்ரூ (BREAK THROUGH) என்பதாகும். அதில் 80,000 குரல்களைப் பதிவு செய்திருக்கிற விபரமும், அவற்றுள் 25,000 பேர்களுடைய குரல்கள் இன்னார் என்று தெரிந்த குரல்கள் என்பதும், அவற்றில் சிறப்பாக ஹிட்லர் போன்ற பிரமுகர்கள் குரல்களும் அடங்கும் என்றும் எழுதியிருக்கிறார். அப்புத்தகம் நம் கைவசம் இருக்கிறது.

ரஷ்யாவில், இறந்தவர்களின் உருவங்களைப் படம் எடுத்திருப்பதை ''சைகிக் டிஸ்கவரீஸ் பிஹைண்டு தி அயர்ன் கர்ட்டன்'' (Psychic discoveries behind the iron curtain) என்ற நூலும் விளக்க மாகக் கூறுகிறது. அவ்வாறு, படம் எடுக்கும் முறைக்கு கீர்லியன் (KIRLIAN) போட்டோகிராபி என்கிறார்கள். இறந்த பின் வாழுகின்ற ஆவி உடலை எனர்ஜி பாடி (Energy Body) என்றும், பையோலாஜிகல் பிளாஸ்மா பாடி (Biological Plasma Body) என்றும் கூறியிருக்கிறார்கள்.

இறந்தவர்களோடு தொடர்பு கொண்டு உள்ள எல்லோரும் இறந்த பின் வாழுகின்ற உடம்பை கோஸ்ட் (Ghost) என்றும், ஆஸ்டரல் பாடி (Astral Body) என்றும், ஸ்பிரிட்சுவல் பாடி (Spiritual Body), எத்தீரியல் பாடி (Ethereal Body) என்றும் கூறி வருகிறார்கள். இந்தியாவில் இறந்த பின் வாழும் உடலைச் சூக்கும சரீரம், யாதனு சரீரம், பிராணமய கோசம் என்று சமஸ்கிருதத்திலும், ஆவி உடல், நுண்ணுடல், புகழுடல், உள்ளுடல் என்று தமிழிலும் கூறி வருகிறார்கள். இப் பெயர்களில் ஒன்றும், இறந்த பின் தொடர்ந்து வாழ்ந்தும், பேசியும் வருகிற உடல் இதுதான் என்று சுட்டிக்காட்டாததனால், யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் பொருட்டே, நாம் அதற்குச் சொப்பன சரீரம், அல்லது, கனவு உடல் என்ற பெயரைச் சூட்டிச் சுட்டிக்காட்டி வருகிறோம். அவ்வாறு, சொல்லுவதற்கு மூலகாரணமாய் இருந்தது, நாம் நூற்றுக் கணக்கான இறந்தவர்களுடன் பேசித் தெளிவு பெற்றதும், சிவஞான சித்தியாரில் 128வது பாடலில்

''பன்னகம் அண்டசங்கள் பரகாயந்தன்னிற் பாய்
வோர்
துன்னுதோல் முட்டையாக்கை துறந்து செல்வது
வேபோல
உன்னிய உயிர்கள் தூல உடல்விட்டு வானினூடும்
மன்னிடு நனவு மாறிக் கனவினை மருவு மாபோல்''

என்று கூறியிருப்பதும், மற்றும், மேலே சொன்ன 223வது பாடலில் கனவு தன்னில் ஆக்கிய இருபத்தைந்து, களத்தினில் (கழுத்தினில்) என்று கூறியிருப்பதும் ஆகும். இது தவிர திருமந்திரம்,

''இந்திரியம் ஈரைந்து ஈரைந்து மாத்திரை,
மந்திரமாய் நின்ற மாருதம் ஈரைந்தும்,
அந்தக்கரணம் ஒரு நான்கும் ஆன்மாவும்
பந்தவச் சாக்கரப் பாலது வாகுமே''

—திருமந்திரம் 2144

''உண்டு நரக சுவர்க்கத்தி லுள்ளன
கண்டு விடும் சூக்கங் காரணமாச் செல்ல
பண்டு தொடரப் பரகாய யோகி போல்
பிண்ட மெடுக்கும் பிறப்பு இறப்பு எய்தியே

—திருமந்திரம் 2133

தான் அவனுகிய தற்பரம் தாங்கினேன்
ஆனவை மாற்றிப் பரமத் தடைந்திடும்
ஏனை உயிர் வினைக் கெய்து மிடம் சென்றும்
வானும் நிலனும் புகுந்தும் வருந்துமே

—திருமந்திரம் 2134

''உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்போடு உயிரிடை நட்பறி யாதார்
மடம்புகு நாய்போல் மயங்கு கின்றாரே''

—திருமந்திரம் 2148

என்ற பாடல்களும், திருக்குறளில் உள்ள 122 வது அதிகாரம்,

நனவினல் நல்கா தவரைக் கனவினல்
காண்டலின் உண்டென் னுயிர்

நனவினல் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது

என்ற திருக்குறள்களும் வேறு பல திருக்குறள்களும் ஆகும்.

இவற்றையெல்லாம் நம் முன்னோர்கள் அறிந்ததினுலேயே, இறந்த பின் அனைவரும் பெயருடைய உண்மையான உடலோடு விண்ணுலகில் சென்று வாழுகிறார்கள் என்பதால், ''இன்னார் . . . . சிவ பதவி, வைகுண்ட பதவி'' ''அடைந்தார்'' என்றும், இறந்தவருக்குத் திதி கொடுக்கும் போது ''இன்று அப்பா வருகிறார்'' ''அம்மா வருகிறாள்'' அவர்கள் சாப்பிட்டுப் போன பின்பே நாம் படைத்ததை உண்ண வேண்டும்'' என்றும் கூறி வருகிற பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அந்த உடம்பை அனைவருக்கும் ஆண்டவனே அமைத்திருப்பதனுலேயே, இறைவனே ''அம்மையப்பன்'' என்று இந்துக்களும், ''உன்னுடைய பிதா, என்னுடைய பிதா, நம்முடைய பிதா, என்று ஏசுநாதரும் ''அல்லாஹுத்தாலா தந்த உடம்பு'' என்று இஸ்லாமானவர்களும் கூறுகிறார்கள்.

இந்தப் பேருண்மைகளைப் பற்றியெல்லாம் நாம் காஞ்சிப் பெரியவாளிடம் பேசியபோது, ''நாங்கள் ஸ்மிருதியைத்தான் ஆதாரமாகச் சொல்லி வருகிறோம். இந்தக் கருத்துக்களோ, பிரத்தியட்சப் பிரமாணமாக இருக்கின்றன. நூற்றுக்கு நூறு இதைக் கையாள வேண்டும்'' என்று கூறினார்கள். புதுப் பெரியவாள் அவர்களையும் இவ்விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் படி அருளாணை பிறப்பித்தார்கள். இதுவே குழந்தைப் பேற்றிலுள்ள தெய்வ இரகசியம் ஆகும்.

கடவுள் கண்ணுக்குத் தெரியாத நிலையில் இருந்துகொண்டு நாம் நினைப்பதையும், பேசி வருவதையும், செய்வதையும், பதிவு செய்து அவற்றிற்கான இன்ப துன்பங்களை நமக்கு ஊட்டி வருகிறார் என்று எல்லா மதங்களும் போதித்து வருகின்றன. ஆனால், இளைஞர்களின் உள்ளத்திலே அக்கருத்து வேரூன்றவில்லை. நாம் இந்த ஆராய்ச்சியில், வெற்றி பெற்று, ''இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்'' என்ற நூல் வெளியிட்டு, இறந்தவர்களே பொதுவாக சாதாரணக் கண்ணுக்குத் தெரியாத நிலையிலிருந்து நாம் மனதால், வாக்கால், உடலால், செய்கின்ற அனைத்தையும் தெரியக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்ற உண்மையை மறுக்க முடியாதவாறு நிலைநாட்டியிருக்கிறோம். ஆதலால், வயது வந்த ஆண்களும், பெண்களும், இறந்தவர்கள் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை உணர்ந்து விட்டால், தீய காரியங்களில் அச்சமும், நல்ல காரியங்களில் ஆர்வமும் உண்டாகும்படி இந்த நூல் செய்வதைப் போல வேறு எந்த நூலும் செய்ய முடியாது. அல்லாமலும், இறந்தவர்கள் கண்ணுக்குத் தெரியாத நிலையில் இருக்கிறார்கள் என்ற உண்மையை உணரும்போது, அவர்களுக்கு அந்த உடம்பைத் தந்த கடவுளும், சாதாரணமானவர்களின் கண்ணுக்குத் தெரியாமல் இருந்து கொண்டு பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார், மற்றவர்களைத் தண்டிக்கிறார் என்ற உண்மையை உணர்ந்து, பக்தியில்லாதவர்களுக்குப் பக்தியை ஊட்டவும், பக்தியுடன் இருப்பவர்களுக்கு, மேலும் பக்தியைப் பெருக்கவும் இந்த நூல் செய்வதைப் போல் வேறு எந்த நூலும் செய்ய முடியாது என்பது, நமது நீண்ட நாள் அனுபவமாகும்.

இறந்தவர்களுடன் உய்ஜா போர்டு மூலம் பேசுவது அபாயகரமானது என்று கூறுவது உண்மைக்கு மாறானது. இறந்தவர்களுடன் பேசுவது சம்பந்தமாக நாம் சில நிபந்தனைகள் குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால், சில குருவுக்கு மிஞ்சின சீடர்கள் தூக்கத்தைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து பேசியிருக்கிறார்கள். இறந்தவர்களுக்குத் தூக்கம் தேவையில்லை. ஆனால் சதை உடம்பிலுள்ளவர்களுக்குத் தூக்கம் இன்றியமையாதது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் அல்லவா? அவ்வாறு தூக்க விழிப்பினால் ஏற்பட்ட கெடுதல்களை நாம் அறிவோம். அவர்கள் எல்லாம் நன்றாகத் தூங்கிவிட்டால், சரியாகிவிடுகிறார்கள் என்பதையும் அறிவோம். உயிர் துறந்துவிட மாட்டார்கள் அல்லவா? ஆனால், பிள்ளைப் பேற்றில் உயிர் துறக்கிறவர்கள் சிலர் இருக்கிறார்கள். மின்சார சக்தியினால் பலரும், கார், பஸ், ரயில், விமானம், கப்பல் இவற்றில் பிரயாணம் செய்பவர்களும் இறப்பதைத் தினமும் பத்திரிகையில் பார்க்கிறோம். அதனால் இவற்றை யெல்லாம் விட்டு விடுவது புத்திசாலித் தனமாகுமா?

இறந்தவர்கள் வசிக்கும் உலகங்களைப் பற்றியும் அங்கு நாம் மேலான நிலையில் வாழுவதற்கு இங்கு நாம் எவ்வாறு திருந்தி நடந்து கொள்ள வேண்டுமென்ற உண்மைகளையும் திட்டவட்டமாக அறிந்து கொள்ள, அங்கு சென்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுவது போல் எவ்வளவு புத்தகப் படிப்பும் தனது சொந்த அனுபவம்போல் ஆக முடியாது. அதனாலேயே வள்ளுவர்,

> அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
> அஃதறி கல்லா தவர்

என்று கூறியுள்ளார்.

அனுபவத்திற்கு வந்த ஒன்றுதான் அறிவாகும். படித்துச் சொல்வதற்கும், பார்த்துச் சொல்லுவதற்கும், எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது.

நமது பூர்வாசிரமத் தந்தையார் எவ்வளவோ கற்றறிந்த மேதை. அவர்களிடம்தான் நாம் பாடம் கேட்டிருந்தோம். இறப்பைப் பற்றியும், இறந்தவர்கள் வாழும் நிலையைப் பற்றியும், உரையாசிரியர்கள் தெளிவாகச் சொல்ல முடியாததை யெல்லாம், அவர்கள் இறந்த பின் நேரில் கண்டறிந்தது போல், உயிரோடிருக்கும் பொழுது அவர்களால் சொல்ல முடியவில்லை என்பதையும் நாம் நன்கு அறிவோம். அவ்வாறு அறிந்த பேருண்மைகளைத் தெரியாமல், மயக்க அறிவினால், தான் படித்ததே உண்மையென்று கருதியும், பேசியும் போதித்தும் வருகிறார்கள். உண்மையை உணர்ந்து கொண்டால், அதுவே நிரந்தரமான உலக சமாதானத்துக்கு வழி கோலும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். **

---

## நல்லிசைக் கவிஞர்

நல்லிசைக் கவிஞர், திறம்தெரிந்து ஆய்ந்து, நயம்நனி பொருந்திட ஆளும்
சொல்லில், நுண் பொருள்கள் துதைந்துநன் றொளிர்ந்து, சுவைமிகப் பெருகிநின் றோங்கி,
எல்லையின் றாக எழில்மிக விரிந்தே இனிதுற மிதந்திடும்; அனைய
பல்பொருள் பொதுளப் பாடுமா வல்ல பாவலர் பெருமையார் பகர்வார்?

—தமிழாக்கம், ந. ரா. மு.

"The proof of the purest poetry is that its meaning is inexhaustible. About the best poetry, and not only the best, there floats an atmosphere of infinite suggestion. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something boundless which is only focussed in it"

—PROF. A. C. BRADLEY.

# சேக்கிழார் பெருமான் திருவுள்ளம்

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை :

''நன்றியால் வாழ்வது உள்ளம்'' என்பது, திருஞானசம்பந்தர் தேவாரம். ''எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு'' என்பது, திருவள்ளுவர் திருக்குறள். ''பொய் கூறுதல், செருக்குறுதல், குடிவெறியால் மயங்கிப் பிதற்றுதல், அல்லது இவைகளைப் போன்று நமது மெல்லிய உடலைப்பற்றிக் கொண்டு நம்மைக் கெடுத்தழிக்கின்ற வேறு ஏதேனும் தீயநடத்தைகள், ஆகியவற்றின் களங்கத்தை யெல்லாம்விட, ஒரு மனிதனிடம் உள்ள நன்றி யுணர்வின்மையினையே, யான் மிகப் பெரிதும் வெறுக்கின்றேன்''(1) என்கின்றார் செகப்பிரியர்! ''பழிக்கத்தக்க தீய மனிதப் பண்புகள் எல்லா வற்றிலும் மிகக் கொடிய அரிய பெரிய குற்றம் ஒன்றிருப்பின், அது நன்றியுணர்வு இல்லாமை யேயாகும்''(2) என்று புரூக்ஸ் என்னும் அறிஞர் ஒருவர் புகல்கின்றார்.

## நன்றிப் புகழுரை :

ஆதலின், சிறந்த அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகிய அனைவரும் தமது வாழ்க்கையில் தமக்கு எவ்வகையாலே னும், எவ்வளவிலேனும், உதவி செய்தவர்களை யெல்லாம் மறவாது நினைவுகூர்ந்து, நன்றி யுணர்வுடன் போற்றி மகிழும் இயல்பினராகத் திகழ்வர். அதனாலேயே அவ்வையார் தகடூர் அதிகமானையும், கபிலர் பறம்புமலைப் பாரிவேளை யும், கம்பர் திருவெண்ணெய்நல்லூர்ச் சடை யப்பரையும், வில்லிபுத்தூரார் வக்கபாகை வரபதிஆட்கொண்டானையும், புகழேந்தியார் சந்திரன் சுவர்க்கியையும், தத்தம் பாடல்களி லும் நூல்களிலும் புகழ்ந்து போற்றி மகிழ்வா ராயினர்.

அம்முறையிலேயே சேக்கிழார் பெரு மானும், அபயன் என்றும், அநபாயன் என்றும், சிறப்புப் பெயர்கள் கொண்ட குலோத்துங்கச் சோழனைப் பற்றித் திருத்தொண்டர் புராணம் என்னும் தமது பெரியபுராணத்தில், ஆங் காங்கே குறிப்பிட்டுப் புகழ்ந்து போற்றிச் சிறப்பித்தருள்வார் ஆயினர்.

(1) "I hate ingratitude more in a man
Than lying, vainness, babbling drunkenness,
Or any taint of vice whose strong corruption
Inhabits our frail blood." —SHAKESPEARE. King Lear.

(2) If there be a crime of deeper dye that all the guilty train of human vices, it is ingratitude." —BROOKS.

## சேக்கிழார் :

சேக்கிழார், பெருமான், தமிழகத்தின் ஏனைய எல்லாக் கவிஞர்களையும்விட, நம் தமிழ் நாட்டைப் பற்றியும், அதன் நாடு நகரம் ஊர் ஆறு காடு கடல் மலை கோயில் தலம் முதலிய பலவற்றைப் பற்றியும், தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை ஒழுகலாறு பண்பாடு முதலி யன பற்றியும், விரிவாக விளக்கிப் பாடிய சிறப்புடைய பெருங் கவிஞராவார். இங்ஙனம் நூற்றுக்கு நூறு விழுக்காடு, தமிழ்நாடு பற்றிய செய்திகளையே முழுவதாக வரைந்தெடுத்துக் கொண்டு, கல்லும் கரையும் கவிதைநலம் அமையும்படி, சிறந்த முறையில் பாடியருளிய வர், சேக்கிழார் பெருமானேயாவர் எனத் துணிந்து கூறலாம். ஆதலின், **நம் தமிழக மக்கள் அனைவராலும், எத்தகைய வேறுபாடும் இன்றி, ஒருங்கு உவந்து போற்றத்தக்க, தனிப்பெரும் தமிழ்நல மாட்சிமை, சேக்கிழார்க்கே உண்டு.**

## குலோத்துங்கச் சோழன் :

சேக்கிழார் பெருமான், சோழ அரசர் களில் இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் (கி. பி. 1113-1150) வாழ்ந்தவர். இவனது ஆட்சியில் தமிழகம் முழுவதும், செழிப்பிலும் அமைதியிலும் திளைத்திருந்தது. இவன் தில்லையில் கூத்தப்பெருமானின் திரு முன்னர் முடிசூடிக் கொண்டான். 'தில்லைக் கூத்தப்பெருமானின் திருவடித் தாமரையிலுள்ள திருவருள் ஆகிய தேனைப் பருகும் வண்டு' என்று, திருவாரூர்க் கல்வெட்டு ஒன்று, இவனைப் புகழ்ந்து கூறுகின்றது. இவ்வரசனின் காலத் தில் தில்லைத் திருத்தலம் பல்லாற்றாலும் சிறப் புற்று விளங்கியது. தில்லைக்கோயிலில் சிறந்த பல அரிய திருப்பணிகள், இவனால் செய்யப் பெற்றன. தில்லைச் சிவகாமியம்மையின் கோயி லும், அதற்கு எதிரில் உள்ள சிவகங்கைத் திருக் குளமும், இவனாலேயே அமைக்கப்பெற்றன. தில்லைப் பேரம்பலத்திற்கு இவன் பொன் வேய்ந்தான். அதனால் இவன் 'பேரம்பலம் பொன்வேய்ந்த சோழன்' என்று, யாவராலும்

புகழப்பெற்றான்.(3) தில்லையும், அதன் எல்லையும் இவனாற் பொன்னின் மயம் ஆக்கப் பெற்றன.(4)

சிதம்பரம் திருக்கோயிலில் உள்ள ஆயிரக் கால்மண்டபம், இவனது தந்தையாகிய விக்கிரம சோழன் (கி. பி. 1118-1136) காலத்தில் தொடங்கி, இவனது ஆட்சியில் நிறைவு பெற்றதாதல் வேண்டும். இவனைச் சிறப்பித்து ஒட்டக் கூத்தர் குலோத்துங்கள் பிள்ளைத்தமிழ், குலோத்துங்க சோழன் உலா என்னும் நூல்களைப் பாடியுள்ளார். 'துரக வித்தியா விநோதன்' 'வில்வீர விநோதன்' 'நித்திய கீதப் பிரமோதகன்' 'ஞானகம்பீரன்' என்று கல்வெட்டுக்கள் புகழ்ந்து கூறுகின்ற இவன், பலப்பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றவன். கவி புனையும் திறனும் இவன்பால் அமைந்திருந்தது. ஒருசமயம், இக்குலோத்துங்கச் சோழன், தனது ஆசிரியராகிய ஒட்டக்கூத்தர்.

''ஆடும் கடைமணி நா
அசையாமல், அகிலம்எங்கும்
நீடுங் குடையில் தரித்தபிரான்...''

என்று தொடங்கி, இவனைப் புகழ்ந்து பாடி வாழ்த்த முற்பட்டபோது, தன்னை அவர் புகழ்வதை விரும்பாமல், அவரைத் தான்புகழ்ந்து பாடி வணங்க விரும்பி, அவர் இசையுடன் பாடிக்கொண்டிருந்த பொழுது, இடையிற் புகுந்து அவ்வரியினையே பின்பற்றித் தொடர்ந்து,

''. . .என்று நித்தம் நவம்
பாடும் கவிஞர் பிரான்ஒட்டக்
கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்கச் சோழன்
என்றே எனைச் சொல்லுவரே''

என்று அவரினும் விரைந்து பாடி முடித்து, ஆசிரியராகிய ஒட்டக்கூத்தரைப் புகழ்ந்து போற்றி வணங்கி மகிழ்ந்தான் என்பது வரலாறு. இதனல், இவனது சிறந்த குருபக்தியுணர்வும், கவிபுனையும் திறனும் புலனாகும்.

---

(3) மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன்திருப் பேரம் பலம்செய்ய
தூய பொன்அணி சோழன், நீடுழிபார்
ஆய சீர்அந பாயன் அரசவை

—பாயிரம், 8

(4) சென்னி அபயன் குலோத்துங்கச்
சோழன், தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயம்ஆக் கியவளவர்
போர்ஏறு, என்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான் அநபாயன்
வருந்தொல் மரபின் முடிசூட்டும்
தன்மை நிலவு பதிஐந்தின்
ஒன்றாய் நீடும் தகைத்து, அவ்வூர்!

—சண்டேசுரர், 8

## சேக்கிழாரும், குலோத்துங்கனும் :

இத்தகைய சிறப்புமிக்க இரண்டாம் குலோத்துங்கச் சோழன், சேக்கிழார் பெருமானைத் தன் தலைமை முதலமைச்சராகப் பெற்றிருந்தான். அவரைப் பெரிதும் மதித்துப் போற்றிக் கலந்தினிது பழகி மகிழ்ந்தான். ஏனைய எத்தனையோ பலரைப்போல, இவரையும் தன்கீழ்ப் பணிபுரியும் ஓர் அலுவலர்தானே என்று எளிதாகக் கருதிவிடாமல், குலோத்துங்கன், சேக்கிழார் பெருமானை, அவர்தம் சிறப்புணர்ந்து, தெய்விக நிலையில் வைத்து வணங்கிப் பாராட்டி வந்தான்.

''நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும் பண்புடை யாளர் தொடர்பு''

என்று, தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளின் சீரிய அநுபவநல உண்மைக்கு மிகச் சிறந்த நல்ல எடுத்துக் காட்டாக, சேக்கிழார்-குலோத்துங்கச் சோழன் ஆகிய இருவரின் அரிய இனிய தொடர்பு, எழிலுற அமைந்திருந்தது.

சேக்கிழார் பெருமான், குலோத்துங்கனின் செந்தமிழ்ப் புலமையினையும், சிவநெறிப் பற்றினையும், நாள்நாளும் கண்டுணர்ந்து மகிழ்ந்து வந்தார். குலோத்துங்கனின் மதிநுட்பமும், மாட்சிமை மிக்க நல்ல மனவளமும், சேக்கிழார் பெருமானைக் கழிபெரும் உவகையில் தோய்ந்து ஆழ்ந்து திளைக்கச் செய்தன. தாம் திருத்தொண்டர் புராணம் என்னும் தெய்விக நூலைப் பாடுவதற்குக் குலோத்துங்கன் காரணமாகவும், ஆதரவாகவும் இருந்து புரந்து வருதலை நினைந்து நினைந்து, சேக்கிழார் நெஞ்சம் மகிழ்ந்து நெகிழ்கின்றார். அதனல் தாம் பாடியருளிய தன்னிகரில்லாத காப்பியத்தின் கண், இடையிடையே பத்து இடங்களில்(5), குலோத்துங்கனை அன்புடனும் நன்றியுடனும் போற்றிப் பாராட்டுகின்றார்.

குலோத்துங்கனின் குணநலங்களையும் மனநலங்களையும், உன்னுந்தொறும் உன்னுந்தொறும், உயர்வற உயர்ந்த அவற்றின் பெருமை, சேக்கிழார்க்குச் செவ்விதின் இனிது விளங்குகின்றது. அப்பெருமையை விளக்கத்

---

*அநபாயன் என்னும் குலோத்துங்கச் சோழன்*

பற்றிய குறிப்பு அமைந்துவரும் பெரியபுராணப் பாடல்களின் எண்ணிக்கை வருமாறு :

(5) 1. பாயிரம், 8
2. திருமலைச் சிறப்பு, 12
3. திருநாட்டுச் சிறப்பு, 35
4. திருநகரச் சிறப்பு, 13
5. இயற்பகையார், 1
6. எறிபத்தர், 2
7. சண்டேசுரர், 8
8. சம்பந்தர், 847
9. புகழ்ச் சோழர், 8
10. கோச்செங்கணர், 14

தக்க உவமை ஏதேனும் கிடைக்குமா என்று, தமது அஃகி அகன்ற அரிய அருட்புலமை கொண்டு, அவர் யாங்கணும் ஆராய்ந்து தேடிக் காண முயல்கின்றனர். அவர்க்குக் குலோத் துங்கனின் குணப்பெருமைகளை விளக்குதற்கு, ஏற்ற இனிய உவமை யாதொன்றும் எளிதாகக் கிடைத்திலது. குணநலஞ்சான்ற குலோத்துங் கனின் மனநலத்தினைத் தக்கவாறு போற்றி வாழ்த்திப் பாராட்டச் சேக்கிழார் பெரிதும் விரும்புகின்றார்.

## திருக்கயிலாய மலை :

திருத்தொண்டர்புராண வரலாறு, திருக் கயிலாய மலையிலிருந்து தொடங்குகின்றது. அதன் முடிவும், வெள்ளானைச் சருக்கத்தில், திருக்கயிலாய மலையிலேயே சென்று முடிகின் றது. ஆதலின், சேக்கிழார்க்குத் திருக்கயிலாய மலைபற்றித் திருத்தொண்டர் புராணத்திற் பாடவேண்டிய இன்றியமையாமையும், கடமை ஏற்படுகின்றன. அந்நிலையில், உவமைகூற வொண்ணுதிருந்த குலோத்துங்கச் சோழனின் மனநல மாட்சிக்குத் திருக்கயிலையும், திருக்கயிலையின் ஓங்கியுயர்ந்த சிறப்பிற்குக் குலோத்துங்கனின் மனமுமே, தகுந்த உவமை ஆகும் என அறிந்து மகிழ்கின்றார், சேக்கிழார்! இவற்றிற்கிடையே பல ஒப்புமைப் பொருத்தங்கள் இருத்தலையும், அவர் சுட்டுகின்றார்.

*(1)* இரண்டிலுமே சிவபெருமான் எழுந் தருளிச் சிறப்புற விளங்கியருள்கின்றார்.

*(2)* இரண்டுமே அளவிட்டுக் கூற முடி யாத பெருமைகளை யுடையவை.

*(3)* இரண்டிலுமே மெய்ம்மையும், ஒளி யும் தழைத்துப் பரவி நிலவுகின்றன.

*(4)* இரண்டுமே தூய்மை மிக்குத் தெய் விகம் நிறைந்து திகழ்கின்றன.

*(5)* இரண்டுமே மாசு மறு எதுவுமின்றி உயர்வற ஓங்கி உலகமெலாம் போற்றிப் புகழும் நிலையில், பொலிவுற்று இலங்குகின்றன.

''கையில்மான் மழுவர் கங்கைசூழ் சடையில்
கதிர்இளம் பிறைநறுங் கண்ணி
ஐயர்வீற் றிருக்கும் தன்மையி னாலும் *(1)*,
அளப்பரும் பெருமையி னாலும்*(2)*,
மெய்*(3)*ஒளி*(4)* தழைக்கும் தூய்மையி*(5)* னாலும்,
வென்றிவெண் குடைஅந பாயன்
செய்யகோல் அபயன் திருமனத்து ஓங்கும்
திருக்கயி லாயநீள் சிலம்பு''

என்பது, பெரியபுராணத்தில், திருமலைச் சிறப்பு என்னும் பகுதியில் வருகின்ற, சுவைமிக்க சிறந்த நல்லதொரு பாடல் ஆகும்!

## முடிவுரை :

இங்ஙனம் திருக்கயிலாயமலையின் சிறப் பினை விளக்குதற்குக் குலோத்துங்க சோழனின் மனநல மாட்சியினைப் பொருத்தமுற ஆராய்ந்து எடுத்துக்காட்டி, இரண்டினையும் ஏற்றபெற்றி புகழ்ந்து வியந்து போற்றி வாழ்த்தியருளிய, தெய்வநலம் சான்ற சேக்கிழார் பெருமானின் திருவுள்ளம், பெரிதும் சிறந்தெடுத்துப் பாராட் டித் தொழுது வணங்குதற்குரியதாகும்.

---

# பக்திநெறிப் பண்பு

அறிவுடையார் எல்லாமும் உடையர்என்றும்,
அறிவிலார் யாதும் இல்லாச்
சிறியர்என்றும், திருக்குறள்நூல் செப்பும்; அது
பக்திக்கும் சிறப்பின் ஏற்கும்;
நெறிமுறையிற் பக்தியுளார் நீடுநலம்
எலாம்பெறுவர்; நெறியஃ தில்லார்
கறையுடைய நிலையினராய்க் கயவர்என
இழிந்தொழிந்து கழிவர் தாமே !

—*தமிழாக்கம்* : ந. ரா. முருகவேள்.

(1) " The highest flights of charity, philanthropy, devotion, trust, patience, bravery, sacrifice etc., to which the wings of human nature have spread have been for religious ideals."

—PROF. WILLIAM JAMES

(2) " When one compares the deeply religious and spiritual person with the best and bravest of those who are not religious, one sees, it must be confessed, that the former possesses something which others lack."

—PROF. J. B. PRATT

# நாயன்மார் தோன்றிய நற்பெருந் தலங்கள்....

[ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.]

"நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும்
பெரும்பேறு நான்பெற் றேனல்" —*மாதவச் சிவஞான சுவாமிகள்.*

**முன்னுரை:**

சைவ சமயம் பழமையும் பெருமையும் வாய்ந்தது. பரந்து விரிந்த சிறந்த கொள்கைகளை உடையது. 'இது ஆகும் இது அல்லது என்னும் பிணக்கு இன்றி' எல்லாச் சமய உண்மைகளையும் ஏற்றபெற்றி தழுவிப் போற்றிக் கொள்ளுவது. அன்பு நெறியினையே அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய சைவ சமயத்தைச் சார்ந்த சைவ நன் மக்களால் அருட்பெருஞ் சான்றோர்கள் எனப் பெரிதும் போற்றி வழிபடப் பெற்றுவரும் 'அறுபத்து மூவர்' ஆகிய அடியவர் பெருமக்களே, நாயன்மார் எனப்படுவர்.

**நாயன்மார்:**

நாயன்மார் என்போர், தமிழ் நாட்டில் தோன்றியவர்கள், வாழ்ந்தவர்கள். நம் தமிழகத்துச் சான்றோர்கள்! அவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு நூற்றுண்டுகளில் தோன்றியவர்கள்! பல்வேறு குலத்தினராய், பல்வேறு நிலையினராய் விளங்கியவர்கள். உயரிய கொள்கைகள் உடையவர்கள். மிகச் சிறந்த குறிக்கோள்களைக் கடைப்பிடித்தவர்கள். 'அடியவர்க்கு அன்பில்லார், ஈசனுக்கு அன்பில்லார்; எவ்வுயிர்க்கும் அன்பில்லார், தமக்கும் அன்பில்லார்' என்னும் உண்மை உணர்ந்தவர்கள். அதனல் இறைவனிடத்திலும், அடியவரிடத்திலும், எல்லா உயிர்களின் மாட்டும், மிக்க பேரன்பு செலுத்தி வாழ்ந்தவர்கள். கொண்ட கொள்கையில் உறுதி தளராத உள்ளம் படைத்தவர்கள். தம் கொள்கையை நிலை நிறுத்திக் காப்பாற்ற உயிரையும் துறக்கும் துணிவு வாய்ந்தவர்கள். தத்தமக்கு ஏற்ற இயன்ற இனிய ஒரு தொண்டினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அதனை எவ்வாற்ருனும் முட்டின்றிச் செய்து முடித்தவர்கள். ஆண்மையும் அருளும் மிக்கவர்கள். பூசும் நீறுபோல் உள்ளமும் புனிதர்கள். பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும் இறைவன்தாள் மறவாதவர்கள். கேடும் ஆக்கமும் இல்லாத திருவினர். ஓடும் செம்பொனும் ஒன்ருகவே கொள்ளும் உணர்வினர். கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினர். அவர்கள் ஈர அன்பினர். யாதும் குறைவிலார். அவர்களுக்கு ஆரம் கண்டிகை, ஆடையும் கந்தையே. ஈசன் பணியே அவர்களின் நேசம். அவர்களின் ஆன்மிக வீரம் அளப்பரியது. அவர்கள் பெருமையால் தம்மையே ஒப்பவர், பேணலால் அருளைப் பெற்றவர். அருமையாம் நிலையில் நின்று அன்பினல் இன்பம் ஆர்பவர்.

**சான்ருேர் வரலாறுகள்:**

அத்தகைய சைவ நாயன்மார்களின் அருமை பெருமைகள், நம்மால் அளவிடற்கரியனவாகும். அவர்களின் சிறந்த தூய அரும் பெறல் வாழ்க்கை, நம் அனைவருக்கும் சீரிய எடுத்துக்காட்டு எனலாம். அவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றிப் போற்றி ஒழுகி, உய்தி பெறும் கடப்பாடு நமக்கு உரியதாகும்.

சான்ருேர்களின் வாழ்க்கை வரலாறுகள், நாமும் அவர்களைப் போல நடந்து, நம்முடைய வாழ்க்கையினையும் தெய்விகம் நிறைந்ததாக நாம் ஆக்கிக் கொள்ளுதல் இயலும் என்று, நம்மனேர்க்கு நினைவூட்டி அறிவுறுத்துகின்றன. காலம் என்னும் மணலில், அவர்கள் பதித்து விட்டுச் செல்லும் அடிச்சுவடுகள், பிறவி என்னும் கடலில், வாழ்க்கை என்னும் மரக்கலத்தில் ஏறித் தவறிவிழுந்து, தடுமாறி நிற்கும் நமக்குத் தளர்ச்சி நீக்கி நலம் புரிகின்றன.

"சீலம் மிக்க பெருமக்கள்,
சிறந்த நல்ல எழில் வரலாறு,
ஏல நாமும் அவர்களைப்போல்
இறைமை வாழ்வெய் துதல்தேற்றும்;

கால மணலில் பதிந்தவர்காற்
சுவடு, வாழ்வாம் கலம்கவிழ்ப்பச்
சாலத் தவிக்கும் சகோதரரைத்
தைரி யமேகொண் டுயச்செய்யும்'' (*)

—மொழிபெயர்ப்பு, ந. ரா. மு.

ஆதலின், இத்தகைய சிறப்பு மிக்க சைவ நாயன்மார்கள் தோன்றிய தலங்கள் பற்றிய குறிப்புக்களை, இங்கு நாம் கண்டு மகிழ்வோம்.

**(1) அம்பர் :**

இது, சோமாசிமாற நாயனர் தோன்றிய தலம். சோமாசிமாறர் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நெருங்கிய தோழர். அவர் இங்கு ஒரு பெரிய வேத வேள்வியைச் செய்தார். அதற்குத் திருவாரூர்த் தியாகராசப் பெருமானை அழைத்து வருமாறு சுந்தரரைச் சோமாசிமாற நாயனர் வேண்டிக் கொண்டார். அதன் படியே சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர்த் தியாகராசப் பெருமானைப் பணிந்து விண்ணப்பித்துக் கொள்ள, அவர் புலைக்கோலம் பூண்டு எழுந்தருளி வந்து, சோமாசிமாற நாயனர்க்கு அருள் புரிந்தார் என்பது வரலாறு. அம்பர் என்னும் தலம் 'அம்பர்ப்பெருந் திருக்கோயில்' எனவும் வழங்கும். கோச்செங்கட் சோழ நாயனர், இத்தலத்தின் மாடக் கோயிலை அமைத்தார். இதற்கு அருகில் அம்பர் மாகாளம் என்று வேறு ஒரு தலமும், அங்குத் தனிக்கோயிலும் உள்ளன. திருவாரூர்—பேரளம் கிளை இருப்புப் பாதையில், பூந்தோட்டம் என்னும் நிலையத்தினின்று, 2 கல் தொலைவில் அம்பர் என்னும் தலம் உள்ளது.

**(2) ஆக்கூர் :**

இது, அடியார்களுக்கு அமுது அளித்தும், பொருள் வழங்கி உதவிகள் புரிந்தும், வேத வேள்விகள் செய்தும், திருவைந்தெழுத்து ஓதியும், இறையருள் பெற்ற அந்தணர் குலத்தைச் சேர்ந்த, சிறப்புலி நாயனர் அவதரித்த தலம். இங்குள்ள திருக்கோயிலின் பெயர், தான் தோன்றி மாடம் எனப்படும். இதனைத் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியுள்ளனர். மாயூரத்திலிருந்து கிழக்கே தரங்கம்பாடிக்குப் போகும் வழியில் 10 கல் தொலைவிலும், திருக்கடவூர்க்கு மேற்கே 3 கல் தொலைவிலும், ஆக்கூர் உள்ளது.

**(3) ஆதனூர் :**

இது, திருநாளைப்போவார் நாயனர் என்னும் நந்தனர் அவதரித்த தலம். சோழ நாட்டில், கொள்ளிடக் கரையில், மேற்கானட்டில், புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயிலுக்கு அருகில் உள்ள திருப்புன்கூர்க்கு வடமேற்கில், ஆதனூர் உள்ளது. இப்போது ஆதமங்கலம் என்று இது வழங்கி வருகின்றது. கானட்டம் புலியூர், கருப்பறியலூர் (மேலைக்காழி, தலைஞாயிறு), ஓமாம்புலியூர் ஆகிய தலங்கள் இதற்கு அருகில் உள்ளன. 'திருநாளைப் போவார் காணி' என்று, 40 வேலி நிலம் ஒரு தனி வட்டமாக இங்கு அமைந்து உள்ளது. நந்தனர், வேதியர் ஒருவரின் கீழ்ப் பணியாற்றி வந்தபோது, பயிர் செய்து வந்த நிலங்களாக, இவைகள் கூறப்பெறுகின்றன.

பகர்ந்துலகு சீர்போற்றும்
பழையவளம் பதியாகும் ;
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்,பொன்
செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர, இருமருங்கும்
முளரிமலர்க் கைஏற்கும்
அகன்பணைநீர் நன்னட்டு,
மேற்கானட்டு **ஆதனூர்.**

**(4) ஆமூர் :**

திருநாவுக்கரசு நாயனர், அவர்தம் தமக்கையார் ஆன திலகவதியார், ஆகிய இருவரும் அவதாரம் செய்தருளிய தலம். அவர்களின் தாய் தந்தையர்களாகிய மாதினியார், புகழனர் ஆகிய இருவரும் வாழ்ந்திருந்த தலம். தென்னற்காடு மாவட்டத்தில், பண்ருட்டிக்குத் தென்மேற்கே 5 கல் தொலைவில் உள்ளது. திருநாவுக்கரசர் அவதாரம் செய்த வீடு இருந்த இடத்தில், இப்போது அவர் தம் திருக்கோயில் கட்டப்பெற்றுள்ளது. தற்போது தருமையாதீனத்தின் 26ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளி விளங்கும் சீலத்திரு சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், அண்மையிற் சில ஆண்டுகளுக்கு முன்னர் இத்திருக்கோயிலினைக் கட்டி, இதனை மிகவும் சிறப்புறப் பரிபாலனம் செய்து வருகின்றனர்கள்.

சைவநெறி ஏழுலகும்
பாலிக்கும் தகைமையினல்
தெய்வநெறிச் சிவம்பெருக்கும்
**திருஆமூர், திருவாமூர் !**

**(5) ஆரூர் :**

இது, பிறவியிலேயே குருடராக இருந்தும், திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் மண் கல்லி எடுத்துக் குளம் பெருக்கித் தொண்டு புரிந்த தண்டியடிகள் நாயனர் தோன்றிய தலம். பண்டைக் காலத்தில் இது சோழர்களின் தலைநகரமாக விளங்கியிருந்தது. காசியில் இறத்திலும், திருவண்ணாமலையை நினைத்தலும், தில்லையைத் தரிசித்தலும், திருவாரூரில் பிறத்தலும் வீடுபேற்றிற்கு ஏதுவாகும் என நூல்கள் கூறும் சிறப்பு வாய்ந்த தலங்களுள் ஒன்று. ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள்

---

(*) "Lives of great men all remind us
We can make our lives sublime,
And departing, leave behind us,
Footprints on the sands of time,
Footprints, that perhaps another,
Sailing o'er life's solemn main,
A forlorn and shipwreck'd brother,
Seeing, shall take heart again".

—H. W. LONGFELLOW.

இதன் சிறப்பைப் புகழ்ந்து போற்றியுள்ளார். இங்குள்ள மூலவருக்குப் புற்றிடம் கொண்டார் (வன்மீக நாதர்) எனப் பெயர் வழங்கும். உற்சவமூர்த்தி தியாகராசர் எனப்படுவார். சப்தவிடங்கத் தலங்களுள் மிகவும் முதன்மை வாய்ந்த தலம். பஞ்ச பூதத் தலங்களுள் காஞ்சிபுரம் போல, இதுவும் ஒரு பிருதிவித் தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்க்கையோடு பெரிதும் தொடர்புடைய சிறந்த தலம். பெரிய புராணத்திற்கு மூல முதல் நூலாகிய திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைச் சுந்தரமூர்த்தி நாயனுர் இங்கேயே பாடியருளினுர். பரவையார், விறன்மிண்டர் முதலியவர்கள் வாழ்ந்த தலம்.

பூதம் யாவையின் உள்ளலர் போதுஎன
வேத மூலம் வெளிப்படும் மேதினிக்
காதல் மங்கை, இதய கமலமாம்,
மாதொர் பாகனுர் **ஆரூர்** மலர்ந்ததால். *(1)*

நிலம கட்குஅழ கார்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது, செம்பியர் வாழ்பதி,
மலர்ம கட்குவண் தாமரை போல்வது,
அலகில் சீர்த்**திரு வாரூர்** விளங்குமால்'. *(2)*

உள்ளம் ஆர்உரு காதவர்? ஊர்விடை
வள்ள லார்**திரு வாரூர்** மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்,பைங்
கிள்ளை பாடுவ, கேட்பன பூவைகள்! *(3)*

### 6) ஆனைக்கா:

இது, கோச்செங்கட் சோழ நாயனுர், முற்பிறவியில் சிலந்தியாக இருந்து இறைவனை வழிபட்ட தலம். காவிரி யாற்றின் கரையில், சந்திர தீர்த்தம் என்னும் புனிதப் பொய்கையின் மருங்கே ஒரு சோலையில், வெண்ணுவல் மரத்தின் கீழ் இருந்த ஒரு சிவலிங்கத்தினை, வெள்ளானை ஒன்று பூசித்து அருள்பெற்ற இடமாதலின், இதற்கு ஆனைக்கா என்று பெயர் ஏற்பட்டது. பஞ்ச பூதத் தலங்களுள் ஒன்று. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ளது. இங்கு உள்ள சிவலிங்கம் 'அப்பு லிங்கம்' என வழங்கப் பெறும். அதற்கு ஏற்பச் சிவலிங்கத்தின் கீழ் இடையறாது எப்பொழுதும் நீர் ஊறித் தேங்கி நிற்கும். ''செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே'' என்று திருநாவுக்கரசர் இங்குள்ள சிவபிரானைப் புகழ்ந்து துதித்துள்ளார். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் பாடலும் பெற்றது.

### (7) இருக்குவேளூர் :

இது, தில்லைத் திருப்புலீச்சரம் என்னும் கோயிலில், வறுமை நேர்ந்த போதும் கணம் புல் என்னும் ஒரு வகைப் புல்லை அறுத்து விலைக்கு விற்றுத் திருவிளக்கு ஏற்றி வந்து, அப்புல்லும் விற்காமற் போகவே, தம் திருமுடியை விளக்கில் மடுத்து எரித்து அருள்பெற்ற கணம்புல்ல நாயனுர் தோன்றிய தலம். இது தற்போது சேலம் மாவட்டத்தில் பேளூர் என வழங்கி வருகின்றது; வடவெள்ளாற்றின் தென் கரையில், சேலம்-விருத்தாசலம் கிளை இருப்புப் பாதையில், ஆற்றூர் நிலையத்திலிருந்து தெற்கில் 4 கல் தொலைவில், பச்சை மலையின் வடசாரலில் உள்ளது. இங்குக் கணம்புல் மிகுதியும் உண்டு.

[வட வெள்ளாறு : சேலம் தென்னுர்க்காடு மாவட்டங்களுக்கும், தஞ்சை மாவட்டத்திற்கும் இடையில் சோழநாட்டின் வடக்கு எல்லையாய் ஓடிப் பறங்கிப்பேட்டை அருகில் கடலில் விழுவது.

தென் வெள்ளாறு : மதுரை-தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு இடையில், சோழநாட்டின் தெற்கு எல்லையாக ஓடி, மீமிசலின் அருகில் கடலில் சேருவது.]

திருக்கிளர்சீர் மாடங்கள்
திருந்துபெருங் குடிநெருங்கிப்
பெருக்குவட வெள்ளாற்றுத்
தென்கரைப்பால், பிறங்குபொழில்
வருக்கைநெடுஞ் சுளைபொழிதேன்
மடுநிறைத்து வயல்விளைக்கும்,
**இருக்கு வேளூர்**என்பது,
இவ்வுலகில் விளங்குபதி!

### (8) இளையான்குடி :

இது, சிவனடியார்களை வரவேற்றுத் தம் இல்லத்தில் 'உண்டி நாலு விதத்தினில் ஆறு சுவைத்திறத்தினில்' அளித்து, விருந்தோம்பித் தொண்டு புரிந்தவரும்; தமது செல்வ வளம் சுருங்கிய போதும் மன வளம் சுருங்காமல், ஒரு முதிய அடியவர் வடிவில் வந்த இறைவனுக்கு மாரிக் காலத்தில், நள்ளிரவு நேரத்தில் வயலுக்குச் சென்று, அங்குத் தாம் அன்று விதைத்த நெல்லை அரித்துக் கொணர்ந்து, வறுத்துக் குற்றிச் சமைக்கச் செய்து உண்பித்த பெருந் தொண்டரும் ஆகிய இளையான்குடி மாற நாயனுர், அவதரித்த தலம். இதனை, இராம நாதபுரம் மாவட்டம், பரமக்குடிக்கு அருகில் உள்ளது என்றும், சோழ நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர் என்றும் கூறுகின்றனர். பரமக்குடிக்கு அருகில் உள்ள இளையான்குடியே, மாறநாயனுர் வாழ்ந்த தலம் என்பதே பெரிதும் பொருந்தும்.

### (9) உடுப்பூர் :

இது, கண்ணப்பநாயனுர் அவதரித்த தலம். இப்போது உடுக்கூர் என வழங்கி வருகின்றது. ஆந்திர நாட்டில் கடப்பை மாவட்டத்தில் புல்லம்பேட்டை வட்டத்தில் உள்ள இராசம்பேட்டை என்னும் நிலையத்திற்குப் பதினைந்து கல் தொலைவில் உள்ளது. இது பண்டைக் காலத்தில் பொத்தப்பி நாட்டைச் சேர்ந்த ஓர் ஊராக இருந்தது. திருக்காளத்திக்கு 40 கல் தொலைவில் உள்ளது.

நித்தில அருவிச் சாரல்
நீள்வரை சூழ்ந்த பாங்கர்
மத்தவெங் களிற்றுக் கோட்டு
வன்தொடர் வேலி கோலி
ஒத்தபேர் அரணம் சூழ்ந்த
முதுபதி **உடுப்பூர்** ஆகும்.

## (10) உறையூர்:

அளந்த திறை முறை கொணரா, அதிகன் என்னும் சிற்றரசனுடன் நேர்ந்த போரில், அற்று விழுந்த பகைவர்களின் தலைக் குவியலின் நடுவே, ஒரு சடைத் தலை இருக்கக் கண்டு, ஒரு சிவனடியாரைக் கொன்று விட்டோமே என்று மனம் வெதும்பி, அச்சடைத் தலையினை ஒரு பொற் றட்டில் ஏந்தி, அழல் வளர்த்து அதனுட் புக்கு உயிர் விடுத்த புகழ்ச் சோழநாயனர், இதனைத் தம் தலைநகரமாகக் கொண்டு அர சாண்டு வந்தார். இங்குள்ள கோயிலை மூக்கீச் சரம் என்னும் பெயரால் சம்பந்தர் பாடித் துதித்துள்ளார். தற்போது திருச்சிராப்பள்ளி நகரத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. பண்டைக் காலத்தில் சோழப் பேரரசர்களின் தலைநகரங்களுள் ஒன்ருக விளங்கியிருந்தது. சங்க காலப் பாடல்களில் ''அறம் துஞ்சு உறந்தை'' எனவும், ''ஊரெனப்படுவது உறை யூர்'' எனவும் புகழ் பெற்று விளங்கியது.

மலர்புகழ்வண் தமிழ்ச்சோழர்
வளநாட்டு, மாமூதூர்;
உலகில்வளர் அணிக்கெல்லாம்
உள்உறை ஊர் ஆம், **உறையூர்.**

கார்ஏறும் கோபுரங்கள்,
கதிர்ஏறும் மலர்ச்சோலை,
தேர்ஏறும் அணிவீதி,
திசைஏறும் வசையில் அணி,
வார்ஏறும் முலைமடவார்
மருங்கேறும் மலர்க்கணைகள்,
பார்ஏறும் புகழ்**உறந்தைப்**
பதியின்வளம் பகர்வரிதால்!

## (11) எயினனூர்:

இத்தலம், ஈழச் சான்ருர் குலத்தில் தோன்றி, மன்னர்க்கு வாட்படை பயிற்றும் கலையின் தலைமைநிலையினல், ஏனதி என்னும் சிறப்புப் பட்டப் பெயர் பெற்று விளங்கி, அழுக் காறு கொண்ட தொழிலுரிமைத் தாயத்தான கிய அதிசூரன் என்பவன், தம்மைப் போருக்கு அறைகூவி அழைத்து, வஞ்சனையாற் கொல்ல முயன்ற போது, அவன் பூசி வந்த திருநீற்றைக் கண்டு, அடியார் என மதித்து, அவன் விருப்பம் நிறைவேறுவதற் காகப் போர் புரியாமல் நேர் நின்று உயிர் துறந்த உத்தமர் ஆகிய ஏனதிநாய நாயனர் அவதரித்த தலம். கும்பகோணத்திற்குத் தெற்கே ஐந்து கல் தொலைவில், அரிசிலாற்றங் கரையின் தென் கரையில் அமைந்துள்ளது. இப்போது ஏனநல்லூர் என வழங்குகின்றது.

புண்டரிகம் பொன்வரைமேல்
ஏற்றிப் புவிஅளிக்கும்
தண்டரள வெண்கவிகைத்
தார்வளவர் சோணட்டில்,
வண்டறையூர் சோலை
வயல்மருதத் தண்பணைசூழ்ந்து,
எண்திசையும் ஏறியசீர்
எயில்மூதூர், **எயினனூர்!**

## (12) எருக்கத்தம்புலியூர்:

இது, திருநீல கண்ட யாழ்ப்பாண நாயனர் அவதரித்த தலம். இவர் திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகங்கள் அருளிச் செய்யும் பொழுது, அவர்தம் பாடல்களுக்கு யாழ் வாசித்த பெருந்தகையார் ஆவர். ''மாதர் மடப்பிடியும் மட அன்னமும்'' எனத் தொடங் கும் யாழ்மூரிப் பதிகம், இவர் பொருட்டாகவே திருஞானசம்பந்தரால் பாடப் பெற்றது. திரு ஞானசம்பந்தரோடு உடன்போந்த திருநீல கண்ட யாழ்ப்பாணரையும், அவர்தம் மனைவி யார் ஆகிய மதங்க சூளாமணியாரையும் அன் புடன் வரவேற்று, திருநீலநக்கர் தம் இல்லத்தில் நடுமனையில் வேதிகையின் பாங்கர்த் தங்கிப் பள்ளிகொள்ள இடம் அளித்தார் என்பது வரலாறு. இத்தலம், இப்பொழுது இராசேந்திர பட்டினம் என வழங்குகின்றது. விருத்தாசலத் திற்குத் தெற்கே 7 கல். இதற்குக் கிழக்கே 4 கல்லில் திருமுஷ்ணம் என்னும் வைணவத் தலம் உள்ளது.

## (13) ஏமப்பேறூர்:

திருவாரூர்ப் பூங்கோயிலில், ஆரூர் அற நெறி என்னும் சந்நிதியில், திருவிளக்குகள் ஏற்றிப் பணி செய்து அருள் பெற்ற நமிநந்தி யடிகள் நாயனர் அவதாரத் தலம். ''ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பி நந்தி நீரால் விளக்கிட்டமை நீள்நாடு அறியும் அன்றே'' எனத் திருநாவுக்கரசர் இதனைப் புகழ்ந்துள்ளார். 'ஆரூரில் பிறந்தார்கள் எல்லாம் நம் கணங்கள் ஆன பரிசு காண்பாய்' என்று, இறைவன் காட்டக் காணும் பேறு பெற்றவர். இப்போது திருமப்பற்று என வழங்கப்படுகின் றது. திருவாரூர்க்குத் தெற்கே திருத்துறைப் பூண்டிக்குச் செல்லும் வழியில் 6 கல் தொலை வில் உள்ளது.

பொய்தீர் வாய்மை அருமறைநூல்
புரிந்த சீலப் புகழ்அதனல்
எய்தும் பெருமை எண்திசையும்
ஏறூர், **ஏமப் பேறூரால்!**

## (14) ஒற்றியூர்:

இங்குத் திருவிளக்குத் தொண்டு செய்து, இறையருள் பெற்ற கலிக்கம்ப நாயனர் என்ப வர் அவதாரம் செய்தார். சுந்தரர் இங்குள்ள மகிழ மரத்தடியின் கீழ்ச் சூளுறவு செய்து கொடுத்து, சங்கிலியாரைத் திருமணம் செய்து கொண்டு, இங்குச் சிலகாலம் வாழ்ந்தருளினர். உலகை அழிக்கப் பெருகி வந்த பிரளயத்தைத் தன் மேல் வராது ஒற்றியிருக்கத் தடுத்தமை யால், இதற்கு ஒற்றியூர் என்று பெயர் ஏற் பட்டது. வாசுகி என்னும் பாம்பை இறைவர் தமது திருவுருவத்தில் சேர்த்துக் கொண்டத னல், படம்பக்க நாதர் என்றும், ஏலேல சிங்கர் என்னும் அன்பருக்கு மணிக்கங்கள் கொடுத் ததனல், மாணிக்கத் தியாகர் என்றும், மந்தாதா என்னும் அரசன் கோயில்களின் பூசைக் கட்டளைகளைக் குறைக்கச் சொல்லி எழுதிய ஆணை ஒலை ஏட்டில், ''திரு ஒற்றியூர் நீங்கலாக'' என்று வரி பிளந்து எழுதி யதனல், எழுத்தறியும் பெருமான் என்றும், சுவாமிக்குப் பெயர்கள் வழங்கும். இதுசென்னை மாநகரின் வடகோடியில், அதன் ஒரு பகுதி யாகச் சிறந்து விளங்கி வருகின்றது. திரு

வெண்காடர் என்னும் பட்டினத்தார் சமாதி, இங்கேயே அமைந்துள்ளது.

பேருலகில் ஓங்குபுகழ்ப்
பெருந்தொண்டை நன்னாட்டு,
நீருலவும் சடைக்கற்றை
நிருத்தர்திருப் பதியாகும்;
கார்உலவும் மலர்ச்சோலைக்
கன்னிமதில் புடைசூழ்ந்து,
தேர்உலவும் நெடுவீதி
சிறந்த, **திரு ஒற்றியூர்!**

—பெரியபுராணம், சேக்கிழார்.

## (15) கஞ்சாறூர்:

ஏயர்கோன் கலிக்காமர் என்னும் நாயனாருக்குத் தம் மகளை மணஞ் செய்து கொடுக்குங்கால், அத்திருமணத்திற்கு அடியவர் வடிவில் வந்த இறைவன் விரும்பியபடி, மணப்பெண்ணாகிய தம் மகளின் நீண்ட அழகிய கூந்தலை அரிந்து, பஞ்சவடி என்னும் பூணூல் திரிக்க மனமுவந்து வழங்கிய மானக்கஞ்சாற நாயனார் அவதரித்த தலம். இது மாயூரத்திற்கு அருகில் உள்ளது. இதற்கு ஆனந்த தாண்டவபுரம் எனவும் ஒரு பெயர் உண்டு. அஃது இப்போது ஆனதாண்டவபுரம் என மருவி வழங்குகின்றது. இங்குப்''பஞ்சவடீசர்''கோயில் ஒன்று உள்ளது.

மேலாறு செஞ்சடைமேல்
வைத்தவர்தாம் விரும்பியது,
நூலாறு நன்குணர்வார்
தாம்பாடும் நோன்மையது,
கோலாறு தேன்பொழியக்
கொழுங்கனியின் சாறொழுகும்
காலாறு வயற்கரும்பின்
கமழ்சாறூர், **கஞ்சாறூர்.**

—பெரியபுராணம், சேக்கிழார்.

## (16) கடவூர்:

இது, குங்கிலியக் கலயநாயனார், காரிநாயனார் ஆகிய இருவரும் அவதரித்த தலம். கலயர் என்பது இவர்தம் இயற்பெயர். இது திருக்கடவூர்ப் பெருமானுக்குரிய அமிர்தகடேசர் என்னும் பெயரின் தமிழ்ச் சுருக்கமாகும். கலய நாயனார் இறைவனுக்குக் குங்குலியத் தூபம் இடும் பணி செய்து வந்தார். ஆதலால் குங்கிலியக் கலயர் என வழங்கப் பெற்றார். செல்வ வளம் குறைந்து வறுமை மிகுதிப்பட்ட நிலையிலும், தமது மனைவியார் அளித்த பொற்றாலி கொண்டு உணவுப் பொருள்கள் வாங்க நினையாமல் குங்குலியப் பொதிகளையே வாங்கி வந்து இறைவனுக்குத் தூபமிட்டு அருள் பெற்றவர் குங்குலியக் கலயர்.

காரிநாயனார், மிகவும் சிறந்த புலமை மிக்கவர். சிவபெருமான் மீது தமிழ்க் கோவை நூல் ஒன்று இயற்றினார். அந்நூல் இப்போது கிடைக்கப் பெறவில்லை. அந்நூலுக்குப் பரிசாகச் சேர சோழ பாண்டியர் மூவரும் இவருக்குப் பெரும் நிதிக் குவை அளித்தனர். அது கொண்டு இவர் பல கோயில்களைக் கட்டுவித்து அருள் பெற்றார்.

குங்கிலியக் கலயர், காரியார் என்னும் இந் நாயன்மார்கள் தோன்றிய திருக்கடவூர் என்னும் தலம், அட்டவீரட்டம் என்னும் தலங்களுள் ஒன்று. இங்கே மார்க்கண்டேயருக்காகச் சிவபெருமான் காலனைக் காலால் கடிந்தருளினார். இங்குள்ள காலசம்மார மூர்த்தியின் திருவுருவம் கண்டு களிக்கத் தக்கது. இத்தலத்து இறைவனின் பெயர் அமிர்த கடேசர்; இறைவியின் பெயர் அபிராமியம்மை. அபிராமிபட்டர் பாடிய அபிராமி அந்தாதி என்னும் துதி நூல், மிகவும் புகழ் பெற்றது. இதற்குக் கிழக்கே ஒரு கல் தொலைவில் திருக்கடவூர் மயானம் என்னும் மற்றொரு தலம் உள்ளது. இந்நாளில் இது மெய்ஞ்ஞானம் என வழங்குகின்றது.

திருக்கடவூர், மாயூரத்துக்குக் கிழக்கே தரங்கம்பாடிக்குப் போகும் வழியில் 13 கல். ஆக்கூர், தலைச்சங்காடு, திருவிடைக்கழி என்னும் தலங்கள், இதற்கு அருகில் உள்ளன.

வாய்ந்தநீர் வளத்தால், ஓங்கி
மன்னிய பொன்னி நாட்டில்
ஏய்ந்தசீர் மறையோர் வாழும்
எயிற்பதி, எறிநீர்க் கங்கை
தோய்ந்தநீள் சடையார், பண்டு
தொண்டர்மேல் வந்த கூற்றைக்
காய்ந்தசே வடியார் நீடி
இருப்பது, **கடவூர்** ஆகும்.

—பெரியபுராணம், சேக்கிழார்.

## (17) கணமங்கலம்:

இறைவனுக்குச் செந்நெல் இன்னமுதும், செங்கீரையும் மாவடுவும் கொணர்ந்து நாளும் அமுது செய்விக்கும் திருத்தொண்டு செய்து, ஒரு நாள் தாம் தம் கால்இடறி விழுந்ததனால், அவைகள் சிதறிப் பாழாயினமை கண்டு, பெரிதும் வருந்தித் தம் கழுத்தை அரிவாள் கொண்டு அரிந்து உயிர் துறக்க முற்பட்ட அரிவாள்தாய நாயனார் அவதரித்த தலம். திருத்துறைப் பூண்டிக்கு வடகிழக்கே 2 கல் தொலைவில் உள்ளது. ஊர் இருந்த நத்தம், இப்போது கணமங்கலத்திடல் என்று வழங்குகின்றது. நாயனார் செந்நெல் அரிசி முதலியன கொண்டு இறைவனுக்குத் திருவமுது படைத்து நாள் தோறும் வழிபட்டு வந்த தலம், தண்டலை நீள் நெறி என்னும் மாடக் கோயில் ஆகும். சம்பந்தர் பாடல் பெற்ற அஃது, இப்போது ஊட்டித் தண்டலை என வழங்குகின்றது.

வரும்புனற் பொன்னி நாட்டுஒரு வாழ்பதி;
சுரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட,
விரும்பும் மென்கண் உடைய வாய்விட்டு,நீள்
கரும்பு தேன்பொழி யும்**கண மங்கலம்**

## (18) கருவூர்:

கருவூரில், ஆனிலை என்னும் கோயிலில், பசுபதி ஈசுவரருக்குத் திருமாலைப் பணி செய்து வந்த சிவகாமி ஆண்டார் என்னும் முதிய சிவனடியாரின், பூக்குடலையைப் பறித்து, மலர்களைச் சிதறிய புகழ்ச்சோழ அரசரின் பட்டத்து யானையை எதிர்த்துக் கொன்ற மாவீரர் ஆகிய எறிபத்த நாயனார் தோன்றிய தலம். ஒரு சமயம் இங்குக் காமதேனு என்னும் பசு பூசித்து உலகங்களை யெல்லாம் கருவுயிர்த்ததனால் கருவூர் என்று ஊர்க்கும், பசுபதி என்று இறைவனுக்கும், ஆனிலை என்று கோயிலுக்கும், பெயர்கள் ஏற்பட்டன. இது, கொங்குநாட்டின் பாடல் பெற்ற சிவத்தலங்கள் ஏழனுள் ஒன்று.

திருச்சிராப்பள்ளி—ஈரோடு இருப்புப் பாதையில் உள்ள ஒரு நிலையம். திருச்சிராப் பள்ளியிலிருந்து 45 கல். ஆமிராவதி ஆற்றங் கரையில் உள்ளது. சோழர்களின் பழைய தலை நகர்களில் ஒன்று.

மன்னிய அநபா யன்சீர்
மரபின்மா நகரம் ஆகும்
தொன்நெடுங் **கருவூர்** என்னும்
சுடர்மணி வீதி மூதூர்!

## (19) களந்தை:

களப்பாளர் மரபினரும், அரசர்கள் பலரை வென்றவரும், இறைவனால் கனவிற் பாத மலர் சூட்டி அருளப் பெற்று அரசாட்சி செய்து அருள் பெற்றவரும் ஆகிய கூற்றுவ நாயனார், இத்தலத்தில் அவதரித்தார். இத் தலம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில், முள்ளி யாற்றின் தென்கரையில் உள்ள திருக்களர் என்னும் தேவாரப் பாடல் பெற்ற சிவத் தலத் திற்கு, இரண்டு கல் தொலைவில் உள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பொன் விளைந்த களத்தூரும், கோவை மாவட்டத்தில் உள்ள பெரிய களந்தை என்னும் ஊரும், மதுரை மாவட்டத்திலுள்ள களந்தை என்னும் ஊரும், இதனின் வேறுபட்டவையாகும்.

## (20) காஞ்சி :

இது தொண்டை நாட்டுத் தலங்களுள், முதன்மை வாய்ந்தது. திருக்குறிப்புத் தொண் டர், சாக்கியர், ஐயடிகள் காடவர்கோன் என்னும் நாயன்மார்கள், தோன்றி வாழ்ந்து இருந்து வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடை யது. இதுபோது காஞ்சிபுரம் என வழங்கப் பெற்று வருகின்றது. முத்தி தரும் நகரங்கள் ஏழனுள் ஒன்றாகக் காஞ்சிபுரம் புகழ்பெற்றுச் சிறந்து விளங்கி வருகின்றது. உலகிலேயே மிகப் பழமை வாய்ந்த நகரங்களுள் ஒன்றாக மதிக்கத் தக்க, மாட்சிமை உடையது காஞ்சி புரம். கி.பி. 640ல் இயூன்சங் என்னும் சீன யாத்திரிகன் இங்கு வந்து இதன் சிறப்புக்களைக் கண்டு வியந்து பாராட்டிச் சென்றிருக்கின்றான். நகர அமைப்பு *(Town Planning)* முறையில், காஞ்சிபுரம் உலகிலேயே மிகவும் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது என்று பேராசிரியர் கெட்டிஸ் துரைமகனார் *(Prof. Geddes)* இதனைப் புகழ்ந்து போற்றுகின்றார்.

சந்திரகுப்த மௌரியனின் அமைச்சராக விளங்கி, அர்த்த சாத்திரம் என்னும் அரிய பெரிய நூலினை எழுதிய சாணக்கியர் காஞ்சி புரத்திலேயே பிறந்தவர். சங்கரர், இராமா நுசர், பரிமேலழகர் போன்ற பெருமக்கள் காஞ்சியில் வாழ்ந்தவர்கள். பௌத்த சமயத் தின் பெருநூலாசிரியர்களாகச் சீனா திபெத்து ஜப்பான் பர்மா இலங்கை முதலிய நாடுகளி லெல்லாம் போற்றப்பெறும் புகழ் ஓங்கிய திக்கநாகர், தருமபாலர், தருமகீர்த்தி முதலிய பெருமக்கள் பலர், காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் களேயாவர். கடம்ப அரசர் குலத்தைத் தோற்றுவித்த முதல்வனாகிய மயூரசன்மன் (கி.பி. 350) என்னும் மன்னவன், பல்லவர் களுக்குப் பகைவனாயினும், 'கல்வியிற் கரையி லாத காஞ்சி' மாநகரத்தின் சிறப்புக் கருதி, அங்கு மாறுவேடம் கொண்டு மறைந்து வந் திருந்து, ஐந்து ஆண்டுகள் தங்கிக் கல்வி பயின்று சென்றனன் என வரலாறு கூறுகின்றது. காஞ்சி புரம் கயிலாசநாதர் கோயில், வைகுந்த'' பெருமாள் கோயில், முதலியவற்றின், அழகி'' அரிய சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றனவாகும். இத்தலத்தின் சிறப்பினைக் கருதி, இதன் பெய ராகிய காஞ்சி என்னும் சொல்லைப் பலகால் எடுத்து ஆண்டு, சொற்பொருட்பின் வருநிலை அணி என்னும் கவிநயம் அமைய, ஆசிரியர் சேக்கிழார் பெருமான், பின்வரும் செய்யுளை அழகுறப் பாடியுள்ளார்.

''தண் காஞ்சி மென்சினைப்பூங் கொம்பர் ஆடல்
சார்ந்தசைய, அதன்மருங்குசுரும்பு தாழ்ந்து
பண்காஞ்சி இசைபாடும் பழன வேலிப்
பணைமருதம் புடையுடைத்தாய்ப் பாரில்நீடும்
**திண்காஞ்சி நகர்,** நொச்சி இஞ்சி சூழ்ந்த
செழுங்கிடங்கு, திருமறைகள் ஒலிக்கும்தெய்வ
வண்காஞ்சி அல்குல்மலை வல்லி காக்க
வளர்கருணைக் கடலுலகம் சூழ்ந்தால் மானும்''

இதன்கண், 'காஞ்சி' என்னும் சொல், முறையே காஞ்சிமரம், காஞ்சிப்பண், காஞ்சி நகரம், காஞ்சி என்னும் அணிகலன் ஆகிய பல பொருள்களைக் குறிக்கும் வண்ணம் வழங்கப் பெற்றுள்ளமை அறிந்து சுவைக்கத் தக்கதாகும்.

## (21) காம்பீலி :

இது, அறுவையர் குலத்தில் தோன்றிய வரும், நெசவுத் தொழில் செய்து சிவனடியார் களுக்கு உடையும் கீளும் கோவணமும் வழங்கித் தொண்டு புரிந்து, அருள் பெற்றவருமாகிய நேச நாயனார் தோன்றிய தலம். ஆந்திர நாட்டில் பல்லாரி மாவட்டத்தில் காம்பீலி வட்டத்தில் காம்பீலி என்னும் இத்தலம் உள்ளது. நேச நாயனார் இத்தலத்தில் தோன்றி வாழ்ந்து வந்தார்.

சீர்வளர் சிறப்பின் மிக்க
செயல்முறை ஒழுக்கம் குன்றா,
நார்வளர் சிந்தை வாய்மை
நன்மையார் மன்னி வாழும்
பார்வளர் புகழின் மிக்க
பழம்பதி, மதிதோய் நெற்றிக்
கார்வளர் சிகர மாடக்
**காம்பீலி** என்ப தாகும்!

## (22) காரைக்கால் :

தனதத்தர் என்னும் வணிகரின் புதல்வி யாகப் புனிதவதியார் என்னும் பெயரில் தோன்றி, நாகைப்பட்டினத்துப் பரமதத்தன் என்பவரை மணந்து வாழ்ந்து, தம் கணவர் பணித்தபடி இறைவனருளால் மாங்கனி வர வழைத்துக் கொடுத்தவரும், திருவாலங்காடு மூத்த திருப்பதிகம், அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை முதலிய பதினோராந் திருமுறையிலுள்ள நூல்களை அருளிச் செய்த வரும்; 'அம்மையே!' எனச் சிவபெருமானால் அன்புடன் அழைக்கப் பெற்றவரும், தலையால் நடந்து திருக்கயிலைக்குச் சென்றவரும், திருவா லங்காட்டில் இறைவனின் திருநடனம் கண்டு கொண்டு இன்புற்று, எப்போதும் ஆலங்காட்டு

அப்பரின் திருவடி நிழலில் இருந்து வைகி வருபவரும் ஆகிய காரைக்கால் அம்மையார் அவதரித்த தலம். இது தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரு சிறிய கடற்கரைத் துறைமுகப் பட்டினம் ஆகும். மாயூரம்—தரங்கம்பாடிக் கிளை இருப்புப் பாதையில், இஃது ஒரு நிலையமாக உள்ளது.

மானமிகு தருமத்தின்
வழிநின்று, வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர்
குடிதுவன்றி ஓங்குபதி;
கூனல்வளை திரைசுமந்து
கொண்டேறி, மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம்
பெருகுதிருக் காரைக்கால்!

**(23) கொடுங்கோளூர்:**

சேர அரசர்களுள் உதியன் மரபில் தோன்றியவரும், பெருமாக்கோதையார் என்னும் இயற்பெயருடன், 'கழறிற்று அறிவார்' என்னும் காரணச் சிறப்புப் பெயர் பெற்றவரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நெருங்கிய தோழரும், பொன்வண்ணத்தந்தாதி — திருவாரூர் மும்மணிக்கோவை—திருக்கயிலாய ஞானஉலா என்னும் நூல்களைப் பாடியருளியவரும் ஆகிய சேரமான் பெருமாள் நாயனார் அவதரித்த தலம். இப்பொழுது இது 'கிராங்கனூர்' (Cranganore) என வழங்குகின்றது. இங்குள்ள பகவதி யம்மன் கோயில், மிகவும் புகழ் வாய்ந்தது. பண்டைக் காலத்தில் சேரன் செங்குட்டுவன் கட்டிய கண்ணகியின் கோயிலே, இப்போது பகவதி கோயில் என வழங்கி விளங்கி வருகின்றது எனச் சிலர் கூறுவர். கொடுங்கோளூர்க்கு மகோதை என்னும் மற்றொரு பெயரும் உண்டு. திருவஞ்சைக் களம் (திருவஞ்சிக் குளம் எனவும் வழங்கும்), கொடுங்கோளூர் என்னும் பெருநகரத்தின் ஒரு பகுதியாகும். சேரமான் பெருமாள் நாயனார், இதனையே தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்தார். கொடுங்கோளூர் என்பது நகரத்தின் பெயர் என்றும், அஞ்சைக் களம் என்பது கோயிலின் பெயர் என்றும் கூறுவர். கொடுங்கோளூர் என்னும் தலம், செறுவண்ணூர்—கொச்சி கிளைப் பாதையில், திருச்சூர் என வழங்கும் திருச்சிவப்பேரூர் நிலையத்தினின்று 22 கல் தொலைவில், புல்லூற்று என்னும் கடற்கழித் தோணித் துறையினை யடைந்து, புதிதாகக் கட்டப்பெற்றுள்ள பாலத்தைக் கடந்தால், 32 கல் தொலைவில் உள்ளது.

மாவீற் றிருந்த பெருஞ்சிறப்பின்
மன்னும் தொன்மை மலைநாட்டுப்
பாவீற் றிருந்த பல்புகழார்
பயிலும் இயல்பிற் பழம்பதிதான்;
சேவீற் றிருந்தார் திருவஞ்சைக்
களமும், நிலவிச் சேரர்குலக்
கோவீற் றிருந்து முறைபுரியும்
குலக்கோ மூதூர், கொடுங்கோளூர்!

**(24) கொடும்பாளூர்:**

வேளிர் குலத்தில் தோன்றியவரும், சிவனடியார்க்கு அமுதூட்டுதற் பொருட்டுத் தம் நெற்கூட்டுக் கொட்டகாரத்தில் புகுந்து இருளிற் களவு செய்யப் புகுந்த அன்பர் ஒருவரைத் தண்டிக்காமல், அவர்தம் அடியார் பத்திமைக்கு வியந்து, நெற் பண்டாரமும் குறைவிலா நிதிப் பண்டாரமும் வேண்டும் அளவும் வாரி முகந்து கொள்ள வழங்கியவரும்ஆகிய இடங்கழி நாயனார், தோன்றிய தலம். இது புதுக்கோட்டை மாவட்டத்தில் மணற்பாறை நிலையத்தினின்று தென்கிழக்கே 10 கல் தொலைவிலும்; விராலி மலையினின்று தென்மேற்கே 10 கல் தொலைவிலும் உள்ளது.

முருகுறுசெங் கமலமது
மலர்துதைந்த மொய்அளிகள்
பருகுறுதெண் திரைவாவிப்
பயில்பெடையோடு இரைஅருந்தி
வருகுறுதண் துளிவாடை
மறைய,மா தவிச்சூழற்
குருகுஉறங்கும் கோனாட்டுக்
கொடிநகரம் கொடும்பாளூர்!

**(25) கோவலூர்:**

தம்மை வஞ்சகமாகக் கொல்ல வந்த முத்தநாதன் என்னும் கொடியவனை, அவன் சிவனடியார் வேடம் பூண்டுகொண்டு வந்ததனால், ''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்'' எனத் தொழுது வென்றவரும்; தத்தன் என்னும் தமது மெய்காப்பாளன் வஞ்சகனாகிய முத்தநாதனைக் கொல்ல முற்பட்டபோது, ''தத்தா நமர்'' எனக் கூறித் தடுத்து, அவ்வஞ்சகனின் உயிருக்கு ஏதம் ஏதும் நிகழாதபடி பாதுகாப்பாக நகர்ப்புறத்தே கொண்டு விட்டு வரும்படி பணித்துத் தத்தனை உடன் அனுப்பி வைத்தவரும், சேதி நாட்டுக்கு அரசரும், மலாடர் கோமானுமாகிய மெய்ப்பொருள் நாயனார் என்னும் சிற்றரசர், அவதரித்த தலம்.

சங்க காலத்தில் வாழ்ந்திருந்த மலையமான் திருமுடிக்காரி என்னும் அரசனின் தலைநகரமாக விளங்கியிருந்த சிறப்பும், இத்தலத்திற்கு உண்டு. சைவம்—வைஷ்ணவம் ஆகிய இரு பெரும் சமயங்களுக்கும், இது ஒரு சிறந்த பெருந்தலமாகும். இது பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ளது. இதன் இருப்புப் பாதை நிலையம், பெண்ணையாற்றின் வடகரையில் அறையணிநல்லூரில் இருக்கின்றது. இது மேலூர் என்றும், கீழூர் என்றும் இரண்டு பகுதியாக உள்ளது. மேலூரே திருக்கோவலூர் என வழங்குகின்றது. மேலூரில் திரிவிக்கிரமப் பெருமாள் கோயிலும், கீழூரில் வீரட்டேசுவரர் என்னும் சிவபிரான் திருக்கோயிலும் உள்ளன. சம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. அந்தகன் என்னும் அசுரனைச் சிவபெருமான் அழித்தருளிய தலம். அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்று.

''சேதி நன்னாட்டு
நீடு திருக்கோவலூர்''

**(26) சங்கமங்கை :**

பௌத்தராக இருந்து சைவராக மாறி, பக்தி யுணர்ச்சி மேலிட்டுத் தம்மை மறந்திருந்த நிலையில், தம் அருகிலிருந்த கல்லை மலராக எடுத்துச் சிவலிங்கத்தின் மீது வீசி, அங்ஙனம் நாள்தோறும் மறவாது கல்லெறிந்து வழிபட்டதன் மூலமாகவே, அருள் பெற்ற சாக்கிய நாயனார் அவதரித்த தலம். காஞ்சிபுரத்திற்கு அருகில், முன்பு ஒரு சிற்றூராக இருந்தது.

—(தொடரும்.)

# அறத்தின் பெருமை

'அருண்மொழியரசு' திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

அறமாவது, நீதி நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். திருவள்ளுவர், பூதஞ்சேந்தனர், கணிமேதாவியார், குமரகுருபரர் முதலிய ஆன்ரோர்களால், செய்தற்பாலன இன்னவென வரையறுக்கப் பட்டதே அறமாகும். அஃது ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைப்படும்.

(1) ஒழுக்கமாவது, அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரம சரியம் முதலிய நிலைகளினின்று அந்த அந்த நிலைக்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்.

(2) வழக்காவது ஒரு பொருளைத் தனித் தனியே எனதென தென்றிருப்பார் அது காரண மாகத் தம்முள் மாறுபட்டு, அப்பொருள் மேற் செல்லுவது. அது கடன்கோடல் முதல் பதி னெட்டுப் பதத்ததாம்.

(3) தண்டமாவது, அவ்வொழுக்க நெறி யினும் வழக்கு நெறியினும் வழீஇயினரை அந் நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்ப நாடி அதற் குத்தக ஒறுத்தல்.

இவற்றுள் வழக்குந் தண்டமும், உலக நெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம் போல் உயிர்க்கு உறுதிசெய்யாது. ஆதலால் உயிர்க்கு உறுதிபயக்கும் அவ்வொழுக்கத் தையே அறமென ஆன்ரோர் வலியுறுத்தினர். கற்பிற் சிறந்த இல்லாளுடன் மனமொருமித்தி ருந்து செல்விருந்தோம்பி, வருவிருந்து நோக்கித் தருமங்களை மேற்கொண்டு ஒழுகுவதே சிறந்த அறமாகும். இதனாலன்ரோ அறத்தின் நுட் பத்தை நன்கு நுணுகி ஆராய்ந்து உலகினருக்கு அறிவுறுத்தவந்த தெய்வப்புலவராந் திருவள்ளு வர் 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று திருவாய்மலந்தருளினர்.

இங்ஙனம் இல்லறமாகிய நல்லறத்தை மேற்கொண்டால் பொய் வஞ்சனை களவு முதலிய தீவினைகளை யொழித்து நல்வழியில் பொருளையீட்டி, பிரமசரியம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்களில் நின்ற இயல்புடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணையாக இருந்து உதவி செய்தல் வேண்டும். இதுவேயுமன்றித் தென்புலத்தார்தேவர் விருந் தினர் சுற்றத்தார் ஆகிய நால்வர்களுக்கும் பகுத்துக் கொடுத்துப் பின் எஞ்சி நின்றதை ஒருவன் உண்டு வருவானேயானுல் அவனுடைய மரபு இந்நிலவுலகில் அழிவுருது எப்போதும் நிலைபெற்று நிற்கும்.

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின், வாழ்க்கை
வழியஞ்ச லெஞ்ஞான்று மில்

அறத்தின் வழிநிற்பான் எக்காலத்தும் அழியாத புகழையும் இன்ப வீட்டையும் எளிதிற் பெறுவன். இதனையுன்னியே நீதிநூல் கூறவந்த ஔவைப் பிராட்டியார் முதலாவதாக 'அறஞ் செய விரும்பு' என்றனர். இல்லறமார்க்கத் தின் முதல் அங்கமாவது பிறஉயிர்க்கு இடர் புரியாமையேயாம். எல்லாவுயிர்களுக்கும் நன்மையே செய்தல் வேண்டும். அருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க சுவாமிகள் இறை வனிடத்தில் ஒரு வரம் வேண்டுமென்று கேட் கிருர். என்ன வரத்தை விரும்பினர்? தனக்கு முத்திவீடு வேண்டுமென்று விரும்பினரில்லை. சித்தி வேண்டு மென்றும் கேட்டாரில்லை.

''அப்பா நான் வேண்டுதல் கேட்டு
அருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்''

அன்பர்களே! நன்கு நோக்குங்கள். இராம லிங்க அடிகளுடைய உள்ளத்தில் கருணை ஊற்றெடுத்துத் ததும்புகிறது. விரதங் களுக்கெல்லாம் சிறந்த விரதம் கொல்லா விரதமேயாம். அகிம்சா தருமமே மிகமேலான அறமென்று அறநூல்கள் முழங்குகின்றன. தாயுமானவரும் ''கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்கும்'' என்றருளியிருப்பதை யும் உய்த்துணர்க. இக் கொல்லாமையே அற வினையென்றதோ டமையாது உயிர்க்கொலை யொன்றே மற்ற பாவச் செய்கைகள் எல்லா வற்றையுந்தரும் என்றனர் பொய்யில்புலவர்.

அறவினை யாதெனிற் கொல்லாமை, கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

இத்தகைய அறத்தின் பெருமையை யுணர்ந்து அறஞ்செய்ய எண்ணுவான் ஒருவன், யாம் இப்பொழுது இளையமாகலின் இறக்கு

ஞான்று செய்து மெனக் கருதாது, எக்கால் தருமசிந்தை யுண்டாயிற்ருே அத்தருணமே அறம் புரிய வேண்டும். அங்ஙனஞ் செய்த அறம் இவ்வுடம்பினின்று உயிர் பிரிகின்ற காலத்தும் பிரியாது நம்முடன் வந்து மறுமைக்கும் உதவி செய்யும்.

கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்ற அறுசுவையால் அமைந்த உணவுகளைப் பரிசாரகர் பலரிருந்தும் இல்லாளே அன்புகூர்ந்து பல இன்சொல்கூறி வேண்டி உண்பிக்கையில், ஒருவகை யுண்டியில் ஒருகவளமேயன்றி மற்ருென்றை நீக்கிப் புசித்த அத்துணைப் பெருஞ் செல்வராயிருந்த பெருமக்களும், ஒருகாலத்தில் தரித்திரர்களாகி வேற்ருேரிடத்திற் போய்க் கூழை யிரந்து உண்பார்கள் என்னில், செல்வம் நிலைத்திருப்பதாக எண்ணி அதனைக் காப்பாற்றத்தக்கதன்று.

அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்திற் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று

—நாலடியார்

குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்

—அதிவீரராமர்

என்று செல்வ நிலையாமையைக் குறித்து ஆன்ருேர் கூறிய அமுத மொழிகளை உன்னிச் செல்வம் உள்ளபோதே பகிர்ந்தளித்துப் பல்லோரோடும் உண்டு பரகதிக்கு வழிதேட வேண்டும். இங்ஙனமின்றி நாளைக்கு அறஞ்செய்வோம்; அடுத்த ஆண்டில் வருகின்ற தைப்பூசத்திருநாளன்று அன்னதானஞ் செய்வோம் என்று எண்ணுவானேயானுல், அவன் அதுகாறும் உயிருடன் இருப்பது நிச்சயமாகுமோ? மறுகணமே மாளினும் மாள்வான். பின்புறத்திலேயே கூற்றுவன் நிற்கிருன். அவன் எந்த நிமிடத்தில் உயிரைப் பற்றுவாஞே தெரியாது? யாக்கையோ நிலையற்றது; நீர்மேற் குமிழிக்கு நிகரானது. ''இன்றைக்கோ நாளைக்கோ இன்னும் அரை நாழிகைக்கோ என்றைக்கோ ஆவியிழப்பு'' என்ற முதுமொழிகளை நினைந்து தீயவைகளைவிட்டு இயன்ற அளவில் தருமத்தைப் புரிதல் வேண்டும். இதனையே நம் அருணகிரியாரும் ''இன்றைக் கன்றைக் கென நாடாது இடுக கடிது'' என்று உபதேசித்தனர். கிள்ளியெடுக்கும் சிறிய அளவினதாகிய ஓர் ஆலமரத்தின் விதையானது, மிகவும் ஓங்கி வளர்ந்து பல கிளைகளுடன் தழைத்து நின்று பெரிதும் நிழலைத் தருவதுபோல், தக்கார் கைப்பட்ட அறமானது அற்பமாயினும், ஆகாயமும் அற்பமாகும்படி மிகவும் வளர்ச்சியுறும்.

உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனும்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்

—நாலடியார்

''நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்'' என்ற அருணகிரிப் பெருந்தகையின் அமுத மொழியையுங் காண்க.

தக்கார் தகாதவர் என்று பகுத்தறிந்து ஈவதே தானம் எனப்படும். அங்ஙனமின்றி வறியராய் வந்து ஏற்ருர் யாவராயினும் இன்ஞர் இனியார் என்று நோக்காது ஈதலே தருமம் எனப்படும். தருமம் புரியும் ஆற்றலில்லாதார் தமக்கு எவ்வளவு சக்தியுண்டோ அவ்வளவாவது கரவாதளித்தல் வேண்டும். இதனை நோக்கியே நம் மூதாட்டியார், 'இயல்வது கரவேல்' என்றனர். அதுவும் செய்யச் சக்தியில்லை யென்னில் பிறர் தருமம் புரியுங்கால் குறுக்கே விழுந்து எதற்காக இப்படி தருமம் புரிகிருய்? சிறிது கொடுத்தால் போதாதோ? என்று தடுக்காமலிருந்தால் போதும். அதுவே தருமம் புரிந்தது போலாகும். இதுபற்றியே ஔவைப் பிராட்டியார் 'இயல்வது கரவேல்' என்று கூறினதோடு அமையாது அடுத்தாற்போல் ''ஈவது விலக்கேல்'' என்றனர். இதனைத் திருவள்ளுவரும்.

''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பது மின்றிக் கெடும்''

என்றனர்.

15634

அங்ஙனமாயின் நான் ஒருவரையுந் தருமம் புரியுங்கால் தடுப்பதில்லை; அதுவே போதும் எனத் தகுதியுடையான் ஒருவன் எண்ணி வாளாகிடத்தல் கூடாதென ''ஐயமிட்டுண்'' என்றும் உபதேசித்தனர். இங்ஙனம் நமக்கு அறமார்க்கத்தின் பொன்மொழிகளை வற்புறுத்திக் கூறியருளிய அப்பெரியார்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யவல்லேம்? ''குன்றிப் பிளவளவு தினையளவு பங்கிட்டுண்கை'' என்று நம் அருணகிரிநாத சுவாமிகள் அருளியபடி, நம்முடைய வருவாயில் ஒரு சிறிது பாகமாவது ஏழைகளுக்கென்று ஒதுக்கி வைத்து அதனை அவர்களுக்கு அன்புடனீந்து மறுமைக்கு மாரு நலனைத் தேடிக் கொள்ளல் வேண்டும்.

கடவுள் அறத்தின் வடிவமாக விளங்குகிருர். சிவபெருமானுக்கு 'அறவன்' என்றே ஒரு திருநாமம் உண்டு. நமது காரைக்கால் அம்மையார் கயிலாயவரை சென்று கண்ணுதற் கடவுளைக் கண்டுகளித்து வரங்கேட்குங்கால் 'அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க' என்ருர். சிவபெருமானுடைய ஊர்தியாகிய இடபம் அறத்தின் வடிவு; தருமவிடை என்று அதற்குப் பெயர். அத்தகைய அறவடிவுடைய ஆண்டவனை யடைதற்கு அறத்தினை மறவாது உளுற்றுதல் வேண்டும். ''அறனை மறவேல்'' என்ற திருவாக்கையும் உற்று நோக்குக. இத்தருமமே எல்லா நலன்களையும் தந்து இறைவன் திருவடியிற் சேர்க்கும்.

தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்

—கந்தபுராணம்

# கொட்டுக்கு இசைந்த கூத்தன்

[திரு. எஸ். கே. சுவாமி, சுசீந்திரம்.]

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரம் என்னும் ஊர், பழமையும் பெருமையும் வாய்ந்தது. நாகர்கோவிலிலிருந்து கன்னியாகுமரிக்குப் போகும் வழியில் பழையாற்றுக் கரையோரத்தில் அமைந்த நீர்வளமும் நிலவளமும் மிக்க ஊர். இந்த ஊரின் பெருமைக்கும் பழமைக்கும் ஒளிவிளக்காகத் திகழ்வது, இங்கேயுள்ள திருக்கோவில் ஆகும். மும்மூர்த்திகளும் ஒருமூர்த்தியாகத் தோன்றிய ஆலயம். அதனால் இதற்குத் தாணுமாலயர் கோவில் என்று ஒரு பெயர் உண்டு.

முன்னர் இந்தப் பகுதியானது திருவிதாங்கூர் மன்னர்களுடைய ஆட்சியில் இருந்து வந்தது. திருவிதாங்கூர் மன்னர்கள் சிறந்த பக்திமான்களாகவும், கோயில் நிர்வாகத்தில் அக்கரையுடையவர்களாகவும், விளங்கி வந்தார்கள். சுசீந்திரம் திருவிழாவில், தேர் நிலைக்கு வந்த பிறகுதான், மன்னர் உணவு அருந்துவது வழக்கம். நாஞ்சில்நாட்டுப் பெரியவர்கள் அடிக்கடி மன்னர்பெருமானைக் கண்டு பேசத் திருவனந்தபுரம் சென்று வருவது உண்டு அப்பொழுது, மன்னர் சுசீந்திரம் தாணுமாலயர் கோயிலில் பூசை சரிவர நடக்கிறதா? என்று தான் முதலில் கேட்பார்.

சுசீந்திரம் கோவிலில் சந்நிதியில் தினந்தோறும் திருமுறைகள் பாடப்படுவதுண்டு. இதற்குப் பாடகர்கள் நியமனம் செய்வதுண்டு. பாட்டுக்கேற்ற பக்கமேளக்காரார்களும் உண்டு. வில்லிப்பிள்ளை என்பவர் பண்ணூர்ந்த பாடல்களுக்கு முழவு வாசிப்பார். இவர் துறவியாகவே வாழ்ந்து வந்தார். தனக்குக் கிடைக்கும் சொற்ப ஊதியத்தில் நிம்மதியாகக் காலம் கடத்தி வந்தார். மிருதங்கம் வாசிப்பதில் சதுரர். பெரியதாள வித்தகர். வில்லிப்பிள்ளையின் மிருதங்க வாசிப்பைக் கேட்பதற்காகக் கோவிலில் ஆர்வலர் கூட்டம் மொய்த்து விடுவதுண்டு.

துறவியான வில்லிப்பிள்ளை மிகுந்த அடக்கமும் பணிவும் உடையவர். ஆனால் எவரையும் சட்டைசெய்யாதவர். அவர் கரங்கள் ஆண்டவனைத் தவிர வேறு எவரையும் கும்பிட்டு அறியாதவை. யாரிடமும் எதையும் கேட்டு வாங்க மாட்டார். நாஞ்சில் நாட்டிலுள்ள தனவான்களை ''மூத்தபிள்ளைமார்கள்'' என்று அந்தக் காலத்தில் சொல்லுவார்கள். இவர்கள் ''நாஞ்சில் நாட்டு வேளாளர்'' என்னும் சமுதாயத்தவர். காரணவர்கள் என்றும் இவர்களைச் சொல்லப்படுவதுண்டு. இந்தக் காரணவர்களைப் பற்றிக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் தமது ''மருமக்கள் வழி மான்மியம்'' என்ற கவிதை நூலில் அற்புதமாக நையாண்டி செய்து நகைச்சுவைப் பாடல்களை எழுதியிருக்கிறார்.

இந்த மூத்தபிள்ளைமார்கள் சுசீந்திரம் கோவிலுக்குச் சோமவார தரிசனத்துக்கு வருவார்கள். வில்லிப்பிள்ளையின் அபாரமான மிருதங்க வாசிப்பைக் கேட்டுப் பரவசமடைந்த ஒரு மூத்தப்பிள்ளை, தனது வீட்டில் நடக்க இருக்கும் வைபவத்திற்கு வில்லிப்பிள்ளை வந்து, மிருதங்கம் வாசிக்க வேண்டுமென்று கேட்டார். கேட்ட பணம் தருவதாயும் கூறினார்.

''உமது பணம் எனக்கு எதுக்கு? எனக்கு வேண்டியதைத் தாணுமாலய சுவாமி தருகிறாரே'' என்றார் வில்லிப்பிள்ளை. ''அப்படியானால் சும்மா வந்து வாசியும். வில்வண்டி அனுப்புகிறேன்'' என்றார் மூத்தப்பிள்ளை. ''மாட்டேன்'' என்றார் வில்லிப்பிள்ளை. காரணம் மூத்தப்பிள்ளை கேட்டார். ''தாணுமாலயன் சந்நிதியைத் தவிர வேறு எங்கும் என் முழவு ஒலிக்காது'' என்றார் வித்வான் வில்லிப்பிள்ளை.

இதை மனதில் வைத்துக்கொண்ட மூத்தப்பிள்ளை, மகாராசாவிடம் நயமாக வில்லிப்பிள்ளையின் கலைத்திறனைப் பற்றி ஒரு சமயம் குறிப்பிட்டுச் சொன்னார். உடனே மன்னர், வில்லிப்பிள்ளையை அரண்மனைக்கு வந்து, கலைத்திறனைக் காட்டுமாறு சொல்லிக் கையாளை அனுப்பி வைத்தார். வில்லிப்பிள்ளை மன்னர் வேண்டுகோளை மறுத்துவிட்டார். ''என் முழவு இறைவன் சந்நிதியில் மட்டுமே ஒலிக்கும்'' என்ற கொள்கைப் பிடிப்புக் கொண்ட ஞானியார் வில்லிப்பிள்ளை. இதை அறிந்தார் மன்னர். மன்னர் யோசித்தார். இப்படிச் சொல்பவர், உண்மையான மெய்யடியாராக இருக்கவேண்டும் என்று எண்ணினார். திருவனந்தபுரத்திலிருந்து சுசீந்திரத்திற்குப் புறப்பட்டு வந்தார். மன்னர், கோயிலுக்குச் சென்று இறைவனைத் தொழுதார். வில்லிப்பிள்ளையைப் பார்த்தார். அவர் கலைத்திறனை அறிந்தார். தான், தெரியாமல் ஒரு மெய்யடியாரை அரண்மனைக்கு வர உத்தரவு இட்டதற்கு வருத்தமும் தெரிவித்தார்.

வித்துவான் வில்லிப்பிள்ளையின் மனம் உருகியது. மன்னரின் பெருந்தன்மையை வியந்தார். அடுத்தநாள் கூத்தபிரானின் சந்நிதியிலுள்ள விசாலமான கல்மண்டபத்தில் நூற்றியெட்டுக் கதலிப்பழங்கள் கொண்ட பழக்குலை

தொங்கவிடப்பட்டது. கீழே தொங்கவிடப்பட்ட பழக்குலைக்கு நேர் எதிரில் வில்லிப்பிள்ளை அமர்ந்து தாளமேளம் கொட்ட ஆரம்பித்தது. வஞ்சிமன்னன் வட்டப்பவுரித்திரைக்குள்ளே போடப்பட்ட கல்லாசனத்தில் அமர்ந்து கேட்டார். ரசிகர்களும் பக்தர்களும் குழுமியிருந்தார்கள். ''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க!'' என்று சொல்லி மிருதங்கத்தைத் தட்டித் தாள வரிசைகளைக் காட்டினார் வில்லிப்பிள்ளை. 108 தாள இறுதிகளில் அதாவது முத்தாய்ப்புகளில், ஒவ்வொரு கதலிப்பழமும் தானே மேலேயிருந்து உதிர்ந்து விழுந்த காட்சியை எல்லோரும் கண்டார்கள்.

முழவு கொட்டும் ஒலியதிர்ச்சியில் பழம் உதிரவைத்த அற்புதமான கலைத் திறன் கொண்ட மெய்யடியார் வில்லிப்பிள்ளை. இதை நேரில் கண்டு வியந்து மகிழ்ந்த பக்தி நிறைந்த புலவர் ஒருவர், அரிய இனிய பத்துப் பாடல்களைப் பாடி இறைவனைத் துதித்தார். இதற்குக் 'கொன்றைப்பத்து' என்று பெயர். பழமையான ஓலைச்சுவடி ஒன்றில், இந்தப் பத்துப் பாடல்களும் கண்டெடுக்கப்பட்டன. இந்தப் பாடல்களைச் சரிபார்த்துக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை வெளிக்கொண்டு வந்தார்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைக் கலைவாணர் திரு என். எஸ். கிருஷ்ணன் அவர்களும், நானும் அடிக்கடி சென்று பார்த்துப் பேசுவதுண்டு. கவிமணி அவர்களிடத்தில் பாடம் கேட்ட பேறு பெற்றவன் நான். அது போது அவர் சொன்ன பத்துப் பாடல்களில் ஒன்று மேலே சொன்ன நிகழ்ச்சியைக் கூறுகிறது. அது பின்வரும் பாடல்:

''கட்டும் கதலிக் குலை, தாள
ஈற்றில், கனியொன் றுதிர்ந்திடவே,
வட்டப் பவுரித் திரைக்குள்நின்று
வகைசேர் தாளம் நூற்றெட்டும்,
விட்டு விளங்க வஞ்சிநகர்
வேந்தன் மகிழ்வில் லிப்பிள்ளை,
கொட்டுக் கிசைந்த கூத்தனை, நான்
கொன்றை நிழற்கீழ்க் கண்டேனே''

சுசீந்திரம் தாணுமாலயர் கோவிலுக்குத் தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் கொன்றை மரத்தடியில் எழுந்தருளியுள்ள சுயம்புமூர்த்தியான கூத்தப்பிரானை முதலில் வணங்க வேண்டும். இதைத்தான் ''கூத்தனை நான் கொன்றை நிழற்கீழ்க்கண்டேனே'' என்று புலவர் பாடினார். கூத்தன் என்றால் கூத்து ஆடுபவன் என்பது பொருள். அந்த ஆட்டத்தை இறைவன் வில்லியின் கொட்டுக்கு ஏற்ப ஆடினானும். அடியார்களுக்கு ஆண்டவன் கட்டுப்பட்டு ஆடுவான் என்ற மெய்யான ஒளி சுடர்விட்டு விளங்குவதையும், புலவர்தம் பாடலிலே அமைத்துக் காட்டுகிறார் என்றெல்லாம் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் சொல்லிச் சொல்லி மகிழ்வார்.

இந்தப் பாடலைப் பற்றி நான் முன்னுளிருந்த தேவஸ்தானத்துப் பெரிய அலுவலரிடம் சொன்னேன். அவர் இந்தப் பாடலைக் கொன்றையடிக் கோவிலுக்கு முன்னால் பெரிய பலகையில் எழுதித் தொங்கவிட ஏற்பாடு செய்தார். அதனை அங்கு அனைவரும் இன்றும் பார்க்கலாம்.

இத்தகைய பலப்பல புராதனப் பெருமைகள் கொண்டவை, நமது திருக்கோயில்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்படிப் பல முக்கியமான கோயில்கள் உண்டு. அவைகளுக்கு எல்லாம் வடிவமும் படிவமும் கொடுத்து வெளிக்கொண்டுவருவது, பக்தியை வளர்ப்பதற்குப் பெரிதும் உதவும்.

**

## இனிய கவிதை

ஓங்கும் அறிவுநலம், நல்ல உணர்ச்சிநலம்,
பாங்குமிகு கற்பனைப் பண்புநலம்,—தேங்கமழும்
செய்ய கலைநலமும், சீர்த்தெய் விகநலமும்,
எய்தியதே இன்கவிதை ஆம்!

--தமிழாக்கம், ந. ரா. மு.

"First there is the intellectual element........Secendly there is the emotional element........Thirdly there is the element of imagination........We have a fourth element in literature—the technical element, or the element of composition and style."

—W. H. HUDSON.

# நான்கு சாதனங்கள்

## (கவியோகி சுத்தானந்த பாரதியார்)

மானிட வாழ்வில் நான்கு நான்கு வரிசையாகச் சாதனங்கள் நிகழ்கின்றன. அவை அனைத்தும் நான்கு வேதப் பொருளைக் கொண்டன. அவற்றை நான்கு தூண்களாகத் திருக்கோவிலுக்கு அளிக்கின்றேன்.

மனித வாழ்வில் நாலறிவு முதன்மையானது. ''நாலும் தெரிந்தவன் ஞானி'' என்பதுண்டு. வேதங்கள் நான்கு. அவையாவன:

இருக்கு வேதம்—தேவர்களின் விளக்கம்
எசுர் வேதம்—வேள்வி விளக்கம்
சாம வேதம்—வேதக் கலை விளக்கம்.
அதர்வண வேதம்—மந்திர விளக்கம்.

இந்த நான்கு வேதங்களுக்கும் நான்கு மகாவாக்கியங்கள் உண்டு.

1. இருக்கு வேதத்திற்குப் ''பிரக்ஞானம் பிரம்மம்''. உள் விழிப்பே பிரமம்.

2. எசுர் வேதத்திற்கு ''அகம்பிரம்மாஸ்மி'' நான் பிரமம். நான் என்பது இதயத்தில் உணரும் அகவுணர்ச்சியே.

3. சாம வேதம் ''தத்வமசி''. அதுவே நான் பிரம்மமானால் என் எதிரே நிற்கும் நீயும் அதுவே.

4. அதர்வண வேதத்திற்கு ''அயம் ஆத்மா பிரமம்.'' இந்த ஆத்மாவே பிரமம். அதாவது எது ஆன்மாவாக உள்ளத்தில் இருந்து அனைத்தையும் சாட்சிசேதனனாக இயக்குகிறதோ, அதுவே பிரமம்.

இந்தப் பிரம ஞானத்தை அறிய நான்கு சாதனங்கள் உண்டு. (1) சரியை ஒழுக்கம், (2) கிரியை வணக்கம், (3) யோகம் உள்ளொருமை. (4) ஞானம் தன்னறிவு. இந்த நான்கும் சித்தாந்த சாதனங்கள்.

வேதாந்தமும் நான்கு சாதனங்களைச் சொல்லும். (1) நித்யா நித்யவிவேக விசாரம்: உள்ளது இல்லது எது என்ற பகுத்தறிவு. (2) இகபர பலபோக விராகம்: இங்கு இவ்வுலகிலும் இறந்தபிறகு செல்லும் விண்ணிலும் எந்தப் பயனையும் நுகரக்கூடாது. (3) ஷட்சம்பத்தி: ஆறு ஒழுக்கங்கள்: சமம்-மனஅடக்கம், தமம்-புலனடக்கம், உபரதி-பற்றின்மை, திதிட்சை-இன்பதுன்பங்களைப் பொறுத்தல், சிரத்தை-உறுதிப்பாடு, சமாதானம்-உள்ளமைதி. இவற்றால் மனத்திட்பமும் வினைத்திட்பமும் உண்டாகும். முமுட்சுத்வம்-விடுதலையார்வம், மோட்சம் பெறத்துடித்தல். இந்த நான்கு சாதனங்களால் மனத்தெளிவும், சித்தசுத்தியும், ஆன்ம மலர்ச்சியும் பெறலாம். இவற்றை உறுதியாக்க நான்கு யோகப் பயிற்சிகள் உண்டு. அவை களாவன:

(1) இராசயோகம்: இது இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டுச் சாதனங்களாலே மனத்தை வென்று உள்ளமைதி பெற்று, உள்ளத்தானுடன் ஒன்றும் ஒருமை வழியாகும்.

(2) கர்மயோகம்: கடமையைக் கடவுள் வழிபாடாகச் செய்வது. 'யோக கர்மஸு கௌஸலம்' என்பது பகவத்கீதை.

(3) பக்தியோகம்: அன்பாலே இறைவனைச் சரண்புகுந்து, எதைச் செய்தாலும் இறைவனுக்கே வழிபாடாகச் செய்யும் செயலொருமையாம்.

(4) ஞானயோகம்: தியானத்தாலே சித்த அலைகளை நீக்கி, மனந்தெளிந்து, உள்ளம் மலர்ந்து தன்னை அறிவது அறிவொருமை.

நாலு மார்க்கங்கள்: முனிவர்களால் விளக்கப் படுகின்றன.

(1) தாசமார்க்கம்: தொண்டுவழி—என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் வழி; துளசிவனம் வளர்த்துத் திருமாலுக்கு மாலையனுப்பிய பெரியாழ்வார் வழி; இது சரியை, கர்மயோகம்.

(2) சற்புத்திரமார்க்கம்: இது சம்பந்தரும், திருமங்கையாழ்வாரும் காட்டிய கிரியை வழி. பக்தியோகம். இவைஇரண்டும் பத முத்தியளிக்கும்.

(3) யோகமார்க்கம்: இது சுந்தரரும் ஆண்டாளும் விளக்கிய இராசயோகவழி. மற்றுப் பற்று எனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன் என்ற சுந்தரர் தேவாரம் இந்த வழியை விளக்குகின்றது. ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்னோடு உற்றோமே யாவோம், உனக்கே நாம் ஆட் செய்வோம், மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்'' ஆண்டாள்.

(4) சன்மார்க்கம்: ஞானவழி. மாணிக்கவாசகரும் ஆண்டாளும் பயின்றவழி. 3, 4 வழிகளும் பரமுத்தி தருவன. நானார் என் உள்ளமார் என்ற ஆத்மவிசாரத்தைத்தூண்டும் ஞான மார்க்கம், சாயுச்சிய பதவியளிப்பதாகும். மனிதன் தனது வாழ்வில் அடைய வேண்டிய நாற்பொருள்கள் (புருஷார்த்தம்) அறம், பொருள், இன்பம், வீடு என்பதாகும்.

மேற்குறிப்பிட்ட அடிமை நெறி மகன்மை நெறி தோழமைநெறி காதல்நெறி என்னும்

இந்த நான்கு முறைகளையும் பயின்று காட்ட நான்கு ஆசிரமதருமங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

*(1) பிரமசரியம்:* பொறிபுலனடக்கத்துடனே அறிவினை வளர்க்கும் பருவம், கல்விப் பருவம்.

*(2) கிரகத்தம்:* கல்வி முடிந்து, கன்னியைத் தேர்ந்து மணந்து நிறைமுறையான இல்லறங்காத்தல். இல்லறத்திற்கு அன்பும் அறமும் பண்பும் பயனுமாகும். இல்லறத்தில் நன்மக்களைப் பெற்று மரபை வளர்க்க வேண்டும்.

*(3) வானப்பிரத்தம்:* பிள்ளைகள் முன்னுக்கு வந்ததும், அவர்களிடமே வீட்டுப் பொறுப்பை விட்டுத் தபோவனங்களிலே மனைவியுடனே பிரமசரிய நியமத்துடனே தவம் புரிதல்.

*(4) சந்நியாசம்:* இறுதியிலே அனைத்தும் துறந்து தானே தானாகத் தனித் தவத்திலே ஆழ்ந்து கடவுட் கலப்படைதல். இறுதியில் யோகத்தாலே உடலை நீத்துச் செல்லல்.

இளமையிற் கல்வி, வாலிபத்திலே இல்லற இன்பம், முதுமையில் முனிவருக்கான ஒழுக்கம், இறுதியிலே யோகியாகி உடலைவிட்டு முத்தி பெறுதல். இதுதான் வேதாகம இந்து தருமத்தின் நியதியாகும். இதில் இல்லறம் ஒன்றிலேதான், மனிதனும் மனிதியும் சிற்றின்பம் நுகர்ந்து, மரபை வளர்க்கின்றனர். இதிற்கூட இன்னநாள் சேரவேண்டும், இன்னநாள் தனித்துறங்க வேண்டும், இன்னநாள் இன்னவிரதம் காக்க வேண்டும் என்ற விதிமுறைகள் உள்ளன. திருமணம் புரிந்தவரும் இரண்டு மூன்று மக்களை ஈன்று வளம்பெற வளர்த்து ஆளாக்கியதும், அவர்களிடம் பொறுப்பேற்றித் தாம் விடுதலை பெறுகின்றனர்.

**ஆன்மக்காதல் :**

பிரமசரியமே மானிட வாழ்வின் வேர். இல்லறம் கிளை, பூ; வானப் பிரத்தம் காய், சந்நியாசம் கனி. கனிந்த பழம் தானே மரத்தினின்று உதிர்கிறது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பிரமசரியம் காத்தனர். சுந்தரர் மணவினையை நீத்துப் பரவை சங்கிலியாரை மணந்ததும், தாந்திரிக யோகத்தாலே புலன்களை வெல்லவேயாம். சிவபெருமானே உமையுடன் வாழ்கிறான். ''பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'' என்று திருஞான சம்பந்தர், மண்ணில் நல்லவண்ணம் வாழும் வகையை வலியுறுத்துகின்றார். நமது காலத்தில் இந்த திவ்வியதாந்திர யோகத்தை உலகிற்கு விளக்கியவர் இராமகிருஷ்ணபரமஹம்சரும், சாரதா தேவியும் ஆவார். அதே மாதிரியே அரவிந்தரும், அன்னை மீராவும் பூரணயோகம் புரிந்தனர். யோகபலத்தால் புத்துலகையும் புது மரபையும் பொலிவித்தனர்.

அதே மாதிரி பைபிள் நால்வர்: மாத்யூ, லூக்கா, பர்தலோமியோ, ஜான் ஆகிய நால்வரும் துறவுபூண்டு தூய பிரமசரியம் போற்றிக் கிறிஸ்து சேவை செய்தனர். பிளேடோ, அரிஸ்டாடில், காண்டு ஆகிய அறிஞர்கள், பிரமசரியத்தால் அரிய அறிவுப் பணிபுரிந்தனர். சங்கரர் தூய பிரமசாரி. மத்வாசாரியரும் அவ்வாறே. இராமாநுசர் இல்லறந்துறந்து, பிரமசரியம் காத்தே சீர்பாடியம் எழுதினர். வல்லபாசாரியும் அவ்வாறே கண்ணனை உபாசித்து, புஷ்டுமார்க்கத்தை அனுஷ்டித்துப் பத்தி நெறியைப் பரப்பினர். அவ்வாறே குருநானக்கும் சிலகாலம் இல்லறத்திலிருந்து பிறகு துறந்து நாடெல்லாம் சுற்றி, மெக்காவரையில் சென்று கடவுள் ஒன்றே (ஏக் நிரஞ்சன்) மக்கள் ஒருகுல அன்புநேயராக வாழவேண்டும் என்று உபதேசித்தார். நைட்டிகப் பிரமசாரியான சுவாமி விவேகானந்தர், முப்பது வயதில் (1893) சிகாகோ சர்வமதமேடை ஏறி, ''நீங்கள் அமிர்தபுத்திரர், மதவெறிப் பிரிவினைப் பீடைகளை ஒழித்து ஒன்று சேருங்கள்; தன்னையே பிறரிலும் பிறரையே தன்னிலும் காணும் சமரச ஞானியே தெய்வத் திருவருளைப் பெறுகிறான்; ஆறுகளெல்லாம் எப்படி வளைந்து வளைந்து மேடுபள்ளங்களிலே தாவிச் சென்றாலும், ஒரே கடலிலே கலந்து கடலாகின்றனவோ, அதுபோலே எல்லா உயிர்களும் ஒரே இறைவனைக் கலந்து இன்புறுகின்றன. கிணற்றுத் தவளை போலக் குறுகிய மனப்பான்மையின்றி எல்லாரும் ஒரே ஆன்மநேயராகச் சேருங்கள்'' என்று முழங்கினர், விவேகானந்தர். அந்த பிரமசாரியின் குரல் பத்து ஆண்டுகளில் உலகைக் கவர்ந்து வேதாந்த சமரசத்தை நாட்டியது.

சுவாமி இராமதீர்த்தர் சிவாம்பாளைச் சிறுவயதிலேயே மணந்தார். இரண்டு மக்களுக்கும் தந்தையானர். ஆனல் மனைவியைப் பிரமசரியத்திலே பழக்கித் தாமும் பிரமசரியம் பூண்டு துறவியாகி, அமெரிக்காவில் வேதாந்த முழக்கம்செய்து வந்து, இமாலயத் தனிமையில் தவம் புரிந்தார். விவேகானந்தரின் அமுத வாக்குப் போலவே, இராமதீர்த்தர் குரலும் இன்றும் நம்மை ஆவேசப்படுத்துகின்றன. சைதன்யப் பிரபு தன் மனைவியை நீத்துத் துறவுபூண்டு, பிரமசரியம்காத்தார். அவர் பாகவதப்புலவர். ''ஹரிபோல் அரேராம அரேகிருஷ்ண'' என்ற மந்திரத்தால் நாடு முழுவதும் பக்திப் பரவச அலைகள் எழுந்து கூத்தாடச் செய்தார். அன்றும் இன்றும் பிரமசரிய சக்தியே மனித சமுதாயத்திற்குப் புத்துணர்வளிக்கிறது. எல்லாச் சமயங்களிலும் கர்ம வெற்றிபெற்ற பிரமசரிய சக்தியே தெய்வ ஒளி பரப்புகிறது.

**தாந்தேயின் திருக்காட்சி:**

ஐரோப்பிய மகாகவிகளுள் ஓமர், தாந்தே இருவரும் முன்னணி மகாகவிகள். இவர்கள் பிரமசரிய பலத்தாலேயே மகா காவியம் செய்தனர். தாந்தே இளமையிலே பேதிரை **(Beatrice)** என்ற அழகியைக் காதலித்தான்.

அழகி இறந்து போனுள். அவள் சுவர்க்கத்திலே தேவதையாக விளங்கினுள். தாந்தேயின் கவிக் கற்பனே, நரகத்தைத் தாண்டி, பாவனத்தைத் (Purgatory) தாண்டி, சுவர்க்கத்தை அடைகிறது. அங்கே பேதிரையின் திருக்காட்சி கற்புக்கனல் வடிவுடன் நிற்கிறது. ''தாந்தே, என்னே எப்படிக் காண்கிருய்?'' என்று அந்தத் தேவதை கேட்கிறது. ''தேவதையே, இளமையில் நின்னே ஆசைக் கண்ணுலே கண்டேன். இப்போது அறிவுக் கண்ணுலே காண்கிறேன்; கருணேயுள்ளமே, எனது மாசற்ற பிரமசரியப் பெருமையாலேயே இந்தக் காட்சி கிடைத்தது'' என்று வணங்குகிருன் மகாகவி. பேதிரை தாந்தேயைச் சுவர்க்க தேவதைகளுக்கு அறிமுகப்படுத்துகிருள். ''அமரர்காள் இதோ நம்மிடையே நிற்கும் பேறுபெற்ற தாந்தே அற்புத மகாகவி.

மாசற்ற உள்ளம் படைத்தவன், தேசுற்ற பிரமசாரி. என்விழிகள் சிறுவயதில் இவனேக் கவர்ந்தன. முன்னே என் உடலேக் காதலித்தான். அது மண்ணுனது. உடல் அழகு கரைந்து மறைந்தது. சிலகாலம் மாயக்காட்டில் அலேந்தான். இப்போது இங்கே வந்ததும் மாயமயக்கம் மறைந்தது; தூய நினேவு எழுந்தது'' என்ருள். தாந்தே ''என் பிழைகளே நினேத்து வருந்துகிறேன். நின்னேக் கண்டதும் தூய்மையுற்றேன். உன் அழகிலே அருளேக் காண்கிறேன். உடலழகில் மயங்கிலேன். உன் உள்ளழகை வணங்குகிறேன்'' என்கிருன்.

உபநிஷத்தில் யாக்ஞவல்கி மைத்ரேயிக்குச் சொல்லுகிருர். ''அம்மா காம இச்சையால் இல்லே. என் ஆன்மாவே உன் ஆன்மாவை விரும்புகிறது. இந்த ஆன்மக் காதலே தெய்வப் பொலிவாகும்'' என்கிருர். அதே மாதிரி மைத்ரேயியும் கணவனுன முனிவனிடம் ஆன்ம ஒருமையைக் காண்கிருள். இதுதான் மாசற்ற வாழ்வின் அடிப்படையாகும்.

—தொடரும்

---

## நல்ல கவிதை

**நல்ல கவிதை** என்பதுதான், தூய ஞானச் சான்ருேர்பால்,
எல்லே யிலாநுண் நூற்புலமை, இனிய உணர்ச்சிப் பெருக்கதனுல்,
சொல்லிற் பொருளிற் சிறந்தோங்கி, நினேக்கும் தோறும் சுவைபெருகி,
வல்ல இறைவன் அருட்கொடையாய், வளஞ்சி றப்ப மலர்ந்துநிற்கும்.

—ந. ரா. மு.

## திருமூலர் திருமந்திரம்

நலன்சிறந்த ஞானமுதல் நால்நெறியும் நவிற்றுவது; நானி லத்திற்
பலன்சிறந்த மந்திரங்கள் சக்கரங்கள் பயிற்றுவது; பரிந்தி ரங்கிக்
குலன்சிறந்த அறவுரைகள் கொள்கைகள்தாம் கூறுவது; குறிக்கொண் டுய்யத்
திறன்சிறந்த நுண்பொருள்கள் தெருட்டுவது; **திருமூலர் திருமந் திரம் !**

—ந. ரா. மு.

## சேக்கிழார் சேர்த்த சுவை

சுவைகள்என எட்டினேயே சூழ்ந்துணர்**தொல் காப்பியனுர்** சொல்லிப் போந்தார்!
நவையறுசீர் நூலினுக்கு நல்லமைதிச் சுவைஒன்றும் நலக்கச் சேர்த்தே,
உவகைதரும் நூற்சுவைகள் ஒன்பஃதென் றேபுலவோர், உரைத்துச் சென்ருர்!
அவைகளின்மேல் அரிய**பக்திச் சுவை**யதனேச் **சேக்கிழார்** ஆக்கித் தந்தார்!

— ந. ரா. மு.

# "பேராசை வாரியன்"

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

**முன்னுரை:**

மக்களாகிய நமக்கு எத்தனையோ பலப்பல ஆசைகள் உண்டு. ''ஆசைக்கு ஓர் அளவு இல்லை; அகிலம் எல்லாம் கட்டி ஆளினும் கடல் மீதில் ஆணை செலவே நினைவர்; அள கேசன் நிகராக அம்பொன் மிக வைத்த பேரும், நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்; நெடுநாள் இருந்த பேரும், நிலையாகவே இனும் காயகற்பம் தேடி நெஞ்சுபுண்ணுவர்..'' என்று, மக்களாகிய நம்மனோரின் ஆசைக்கு ஓர் அளவு இல்லாமை குறித்து, வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகர் ஆகிய தாயுமான சுவாமிகள், தகவுற விளக்கிப் பாடியிருக்கின்றார்.

**ஆசையின்மை:**

ஆனால், நம்மைப்போல இறைவனுக்கு ஆசை எதுவும் இல்லை. இறைவன் ஆசையில்லாதவன். ஆதலின், இறைவனைத் திருவள்ளுவர் 'வேண்டுதல் வேண்டாமை இல்லான்' என்கின்றார். திருநாவுக்கரசரும் இறைவனை 'வேண்டாமை வேண்டுவதும் இல்லானை, விசையனை முன் அசைவித்த வேடன் தன்னை....' என்று, தம் திருவாவடுதுறைத் திருத்தாண்டகத்தில் குறிப்பிடுகின்றார். 'வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமையினை', இறைவனுக்குரிய இயல்பாகச் சிவஞானசித்தியாரில், அருள்நந்தி சிவமும் தெளிவுறுத்துகின்றார். இவ்வாறே சான்றோர்கள் பற்பலரும், இனிது எடுத்து இயம்பியுள்ளனர்.

**மணிவாசகர்:**

ஆயினும், மணிவாசகப்பெருமான் தமது திருவாசகத்தில் ''இறைவன் ஆசையுடையவன். அதுவும் சிறிதன்று. மிகப் பெரிய அளவில் பேராசை உடையவன். அவனது ஆசை கடல் போன்று விரிந்து பரந்து எல்லை காணவொண்ணாதது. ஆதலின் அவனைக் கடல்போன்ற பேராசையுடையவன் என்று கூறுதல் பொருந்தும்'' என்னும் கருத்தில், இறைவனைப் பேராசை வாரியன் என்று விதந்து புகழ்ந்து கூறுகின்றார்.

''பாரார் விசும்புள்ளார்
பாதாளத்தார் புறத்தார்
யாராலும் காண்டற்கு
அரியான்; எமக்குஎளிய
பேராளன்; தென்னன்;
பெருந்துறையான்; பிச்சேற்றி
வாரா வழியருளி,
வந்துஎன் உளம்புகுந்த
ஆரா அமுதாய்,
அலைகடல்வாய் மீன்விசிறும்
**பேராசை வாரியனைப்**
பாடுதுங்காண் அம்மானாய்!''

எனவரும் திருவம்மானைப் பாடலில், மணிவாசகர் இறைவனைப் பேராசை வாரியன் என்று குறிப்பிட்டுப் புகழ்ந்து போற்றியிருக்கக் காண்கின்றோம்.

**திருவாசகம்:**

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியினுள்ள அரும்பெரும் தெய்வநலச் சிறப்பு இலக்கியங்களுள், திருவாசகம் தலைசிறந்த தொன்றாகும். அதனை வாழையடி வாழையாகத் தொன்றுதொட்டுத் தோன்றி வந்துள்ள சான்றோர்கள் அனைவரும், போற்றிப் பயன்கொண்டு வந்துள்ளனர். ஆதலின் மணிவாசகர் அருளிச் செய்த இவ்வரும்பெரும் தொடர், தனிப்பெருஞ் சிறப்பு மிக்க இனியதொரு தொடராதல் வேண்டும் என்று உட்கொண்டு, திருவாவடுதுறை ஆதீனத்தில் பெருங் கவிஞராகத் திகழ்ந்திருந்த திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், தமது நூற்பாடல் ஒன்றில், இதனை எடுத்துக் கையாண்டு பொன் எனப் போற்றிப் பொதிந்து கொண்டுள்ளார்.

**சுப்பிரமணிய தேசிகர்:**

சென்ற 19-ஆம் நூற்றாண்டில், திருவாவடுதுறை ஆதீனத்தில், மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் என்பவர், 16-ஆம் பட்டத்துத் தலைவராக விளங்கியிருந்தார். அவர் வடமொழி தென்மொழி ஆகிய இருமொழிகளிலும் மிக்க புலமை வாய்ந்தவர். பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர். சிவஞானசித்தியார்க்கு அரிய பதவுரை விளக்கம் ஒன்று, அவரால் வரையப் பட்டுள்ளது.

''சூர்வந்து வணங்கும் மேன்மைச்
சுப்பிர மணிய தேவே!
நேர்வந்து நும்மைக் கண்டு
நேற்றிராத் திரியே மீண்டு, என்
ஊர்வந்து சேர்ந்தேன்; என்றன்
உளம் வந்து சேரக்காணேன்;
ஆர்வந்து சொலினும் கேளேன்
அதனை இங்கு அனுப்புவாயே'' (1)

''வான்என்று உதவ வரும்சுப்ர
மண்ய வரோதயனே!
தான்என்று வெண்ணரன் பாடை, இந்
நாட்டில் தலையெடுக்க,
ஏன்என்று கேட்பவர் இல்லாத்
தமிழை, இனிதளிக்க
நான்என்று கங்கணம் கட்டிக்கொண்டாய்
இந்த நானிலத்தே!'' (2)

''நேர்என்றும் இல்சுப் பிரமணி
யாதிப! நின்னைப்பல்லோர்
கார்என்று சொல்வர்; அக் காரும்
வஞ்சித்த இக்காலத்திலே,
ஊர்என்றும் வாழ, அறுசுவை
உண்டி உதவி, உன்றன்
பேர்என்றும் நிற்கச் செய்தாய்; உனைக்
கார்எனல் பேதைமையே'' (3)

என்று, சென்ற 19-ஆம் நூற்றுண்டில் மாவட்ட நீதிபதியாக விளங்கியிருந்தவரும், கிறித்தவ சமயத்தவரும், சிறந்த தமிழன்பரும் ஆகிய **மாயூரம் வேதநாயகம்பிள்ளை** அவர்களால் புகழ்ந்து பாடிப் போற்றிப் பாராட்டப்பெற்ற பண்பாளர், இந்தச் சுப்பிரமணிய தேசிகரே யாவர்.

புலவர் பெருமக்களின் தரமறிந்து போற்றிச் சிறப்பிக்கும் திறனில், சுப்பிரமணிய தேசிகர் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தவராவர். அவரே, நம் பெருங்கவிஞர் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் 15-ஆம் பட்டத்துத் தலைவராக இருந்த அம்பலவாண தேசிகர்க்கு அறிமுகம் செய்து வைத்து, 'மகாவித்துவான்' பட்டம் அளித்துச் சிறப்பிக்கவும், ஆதீனப் பெரும்புலவராக நியமிக்கவும் செய்தருளினர்.

**மகாவித்துவான்:**

இவ்வாறு சுப்பிரமணியதேசிகர் தமக்குச் செய்த அரும்பெரும் தண்ணளிகளையும், ஆன்ற பல பெருங்குண நலங்களையும் போற்றிப் பாராட்டும் முறையில் ''சுப்பிரமணிய தேசிகர் மாலை'' என்று 100 பாடல்கள் கொண்ட கவிதைநூலை, மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தமது நன்றியுணர்வு தோன்ற மிகவும் அழகுறப் பாடியுள்ளார். அதன்கண் ஒரு பாடலில் 'பேராசை வாரியன்' என்னும் திருவாசகத் தொடரை, ஓர் அழகிய பொன்தட்டில் விலையுயர்ந்த விழுமிய ஒரு பெரும் முழுமணியினைப் பதித்து வைத்துப் போற்றிப் பாதுகாத்தல் போல, இனிது அமைத்து நனிமிக மகிழ்ந்து பாடியுள்ளார்.

''இருங்கடற் புவியில் இடம்அறப் பரந்தது,
எழுந்து மேலிடத்தினும் பரந்தது,
ஒருங்குநின் புகழ்; மற்று இன்னும்அஃது அவாவி
உறமுயல் தன்மை தேர்ந்தன்றே,
அருங்கலை வாத வூரர்முன் நினைப்
**பேராசை வாரியன்** எனப் புகன்றுர்;
சுருங்கைநீர் முழக்கம் அருவயல் துறைசைச்
சுப்பிர மணிய தேசிகனே''

**பேராசை வாரியன்:**

இப்பாடலினுல், மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், இறைவனைப் பேராசை வாரியன் என்று மணிவாசகர் கூறுதலில், நமக்கு ஏற்படும் ஐயத்தினை அறுத்துத் திகைப்பினைத் தெளிவிக்கின்றுர். சுப்பிரமணியதேசிகர் காலத்திற்கு முன்னரேயே, திருவாவடுதுறை ஆதீனமானது, சிவஞானசுவாமிகள், கச்சியப்பமுனிவர் போன்ற ஞானத் தவமுனிவர் பெருமக்களால், எல்லையற்ற பெரும்புகழ் எய்தித் திகழ்ந்திருந்தது. ஆயினும், ஆதீனத்தின் புகழ் மேலும் மேலும் ஓங்கிப் பெருகி வளர்தல் வேண்டும் என்ற பெருவிருப்பத்தால், எத்தனையோ பலப்பல தானதருமங்களையும், திருப்பணிச் செயல்களையும், சுப்பிரமணியதேசிகர் இடையருது செய்துகொண்டே யிருந்தாராம்.

''சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குதல் வேண்டும்; கவிஞர்கள் புலவர்கள் கலைஞர்கள் ஆகியோரையெல்லாம் போற்றிப் புரத்தல் வேண்டும்; எல்லா அறங்களும் பொது நலப் பணிகளும் நன்கினிது செவ்விதில் மேன்மேற் செய்யப்பெற்று வருதல் வேண்டும்'' என்றெல்லாம், எல்லையற்ற கடல் போன்ற பேராசை கொண்டு, சுப்பிரமணியதேசிகர் இடையருது பலப்பல செயல்முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாராம்.

அவர், தம்மளவில் மிகச் சிறந்த பற்றற்ற தூய துறவியாராயினும், தானதருமங்களாலும் பிறபிற செயல் நலங்களாலும், ஆதீனத்தின் புகழ்ஓங்குதல் வேண்டும் என்று விரும்பி ஆசைப்படுவதும், அதற்காகப் பல்லாற்றுனும் முயல்வதும், எங்ஙனம் குற்றமாகும்? அஃது அவர்க்குரிய கடமையேயாகுமன்றே? அதனுல் மாணிக்கவாசகர் சிவபெருமானைப் 'பேராசை வாரியன்' என்று புகழ்ந்தது, சிறந்த சீவன் முத்தராகச் சிவமாம் தன்மைப் பெருவாழ்வு பெற்ற சுப்பிரமணியதேசிகருக்கும் ஏற்றுரையாக மிகமிகப் பொருந்தும் என்கின்றுர், பெருங்கவிஞர் மீனுட்சிசுந்தரனுர்.

**இறைவனின் பேராசை:**

இக்கவிதையின் வாயிலாக, மேலைத் திருவாசகத் தொடர் குறித்து, நமக்கு நல்லதொரு விளக்கம் கிடைக்கின்றது. இறைவன் தன்னைப் பற்றிய அளவில் ஆசை ஏதும் இல்லாதவனேயாயினும், தன் அடியவர்களுக்கு இடையருது பலவகை நலங்களை விளைவித்துக் கொண்டே இருக்கும் பெருவிருப்பத்தையுடையவனுகத் திகழ்கின்றுன். ஆதலின் அவன் பேராசை வாரியனுக விளங்குகின்றுன். இறைவனுக்கு இத்தகைய ஒரு பேராசை உண்டு என்று,

''பாசமான களைவார், பரிவார்க்கு
அமுதம் அனையார்;
**ஆசை தீரக் கொடுப்பார்,**
அலங்கல் விடைமேல் வருவார்;
காசை மலர்போல் மிடற்றுர்,
கடவூர் மயானம் அமர்ந்தார்;
பேச வருவார் ஒருவர், அவர்
எம் பெருமான் அடிகளே''

எனவரும் திருப்பாடலில், திருஞானசம்பந்தப் பெருமானும் அருளிச் செய்திருக்கின்றுர்.

**திருஞானசம்பந்தர்:**

இதில், 'ஆசைதீரக் கொடுப்பார்' என்பதற்கு, ''அடியார்கள் கொண்டுள்ள அளவற்ற ஆசைகள் தீரும்படியாக ஏராளமான வரங்களும் நலங்களும் இறைவர் கொடுத்தருள்வார்'' என்றே நம்மிற் பெரும்பாலோர் பொருள்கொள்வர். ஆனுல், இன்னுர் ஆசை என்று இன்றி 'ஆசைதீரக் கொடுப்பார்' என்றுமட்டும் பொதுவாகக் கூறப்பெற்றிருப்பதனுல், ''அடியார்களுக்கு வழங்குதல் வேண்டுமென்று, தாம் கொண்டுள்ள அளவில்லாத ஆசைகள் எல்லாம் தீரும்படியாக 'முழுதுலகும் தருவான் கொடையே சென்று முந்துமினே' என்றபடி வாரி வாரி ஒரு வரையரையின்றி எல்லாவரங்களும் நலங்களும் இறைவர் வழங்கியருள்வார்!'' என்ற பொருளும் அமையுமாறு, இத்தொடர் அமைந்துள்ளது. ஆதலின், அடியார்களுக்கு அருள்நலங்களை எல்லாம் வாரிவாரி வழங்குதலில், இறைவனுக்கு மிகப்பெரிய பேராசை உண்டு என்பது, திருஞானசம்பந்தப் பெருமானின் கருத்துமாதல், தெற்றெனத் தெளிவாகின்றது.

**முடிவுரை:**

இங்ஙனம் இறைவனைப் 'பேராசை வாரியன்' என்று திறம் தெரிந்து பொருத்தமுறக் கூறிய மணிவாசகர் மாட்சியினையும், அவர் அருளிய திருவாசகத்தின் சிறப்பினையும், நாம் அனைவரும் உள்ளவாறு உணர்ந்து போற்றிப் பயன்கொண்டு உய்ய முயலுவோமாக.

**

## சிவஞானபோதச் சிறப்பு!...

எல்லா நூல்கள் தம்முள்ளும் இனிதே சுருங்கித் திகழ்வதெனச்
சொல்லா நிற்பர் திருக்குறளைச்; சூழ்ந்து கருதின், அதனினுமே
பல்லாற் ருனும் சிவஞான போதம் சுருங்கிப் பயன்பெருகும்!
நல்லோர் புகழ்அம் மெய்ந்நூலின், நலங்கள் பெரிதும் வரம்பிலவாம்!

நாற்ப தடியால், இருநூற்றுப் பதினுறு எளிய நற்சொல்லால்,
ஏற்ற அறுநூற் றிருபான்நான்கு எழுத்தால், சமயக் கொள்கையெலாம்
தேற்றித் தெருட்டும், சிவஞான போதச் செழுநூல் போல், எங்கும்
வேற்ருேர் நூலின் றெனவுரைப்பின், மிக்க அதன்சீர் விளம்புவர்யார்?

இறையே உயிரே உலகுஎன்றே, இலங்கும் மூன்று பெரும்பொருளும்,
முறையே தருக்க நெறிநின்று, முன்னும் பின்னும் முரணுமே,
நெறியே ஆய்ந்து தடைவிடையால், நிறுத்தும் மறுத்தும் மெய்ந்நிறீஇக்,
கறையின் றுணர்த்தும் சிவஞான போதம், கடல்போற் பெருஞ்சீர்த்தாம்!

ஒன்ருய் வேருய் உடனுக, உயிர்கள் தம்மோ டொருங்கியைந்து,
நன்றே அருளால் அவற்றினுக்கு, நயந்து கண்டும் காட்டியுமே,
நின்றே உதவும் இறைவனருள் நிலையை, அத்து விதப்பொருளால்,
வென்றே விளங்கும் சிவஞான போதம், அறிவுக் குயர்விருந்தாம்!

அறிவின் முடிந்த முடிபாக, அருமை பெருமை பலநிறைந்து,
செறியும் சைவ சித்தாந்தம் என்னும் சிறந்த கொள்கையினை,
நறிய அளவும் அறிவியலும், நல்லோர் அடைவும் நடைமுறையும்,
நெறியின் அமையச், சிவஞான போதம் விளக்கும் நிலைவியப்பாம்!

—ந. ரா. முருகவேள்

# திருச்சிற்றம்பலக் கோவையார்

[கருத்துத் தொகுப்புச் சுருக்கம்]

(முற்றேடர்ச்சி)

## (24) பொருள்வயிற் பிரிவு:

[தந்தை முதலிய முன்னேர்கள் சேர்த்து வைத்துச் சென்றபொருள் கொண்டு, இல்லறம் நடத்தினுல், அதனுல் எய்தும் பயன்கள், அவர் களுக்கேயாகித் தனக்குக் கிடைக்காது போதலின், தானே முயன்று தேடிய பொருள் கொண்டு இல்லறம் நடத்துதல் வேண்டும் என்னும் குறிக்கோளுடன், தலைவன் பொருள் தேடுவதற்காகத் தலைவியைப் பிரிந்து செல்லுதல்]

**தலைவன் :** முற்றத் துறந்த முனிவர்கள் விரும்புகின்ற மறுமை நலமும், பெரிய நாட்டை ஆளும் அரசர்கள் விரும்புகின்ற இம்மை இன்பமும் ஆகியன எல்லாம், பொருட் செல்வம் இருந்தால்தான் இனிது நிறைவேறும் என்று, யான் பொதுவாகத் தலைவியின்பால் சொல்லத் தொடங்கினேன். அவ்வளவிலேயே தலைவி என்னுடைய உள்ளக் குறிப்பை உணர்ந்து கொண்டாள். அவளது கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் பெருகலுற்றன. தன் அறிவு அழிந்து வருந்தி, மயங்கி விழுந்தாள். உடனே யான் ''சிவபிரானின் திருச்சிற்றம்பலம் போன்ற சிறப்பும் அழகும் உடைய தலைவியே! இங்ஙனம் நீ துன்புறும் தன்மை எதனுல் நேர்ந்தது? 'யான் நின்னைப் பிரிந்து செல்வேன்என்று,நீ கருதிக் கொண்டனையோ? யான் நின்னை ஒரு போதும் பிரிந்து எங்கும் செல்கிலேன்'' என்று ஆறுதல் கூறி, அவளது முகத்தில் நீர்தெளித்து, மயக்கம் தெளிவித்துத் தலையளி செய்தேன். மயக்கம் தெளிந்து உணர்வு வரப்பெற்றநிலையில், தான் அறிவழிந்திருந்த காலத்தைப் பிரிந்திருந்த காலமாகவே பிழையாகக் கருதிக் கொண்டு, இத்துணை நீண்ட காலம் தாழ்த்து, இப்போதுதான் தாங்கள் வந்திரோ? என்று வினவி, என்னை வணங்கி நின்ருள். அத்தகைய பிரிவாற்ருமை இயல்பை உடைய தலைவிக்கு, யான் அவளைப் பிரிந்து செல்லுதல் குறித்து, என்னுற் கூறுதல் இயலாது; ஆதலின் தோழியே! யான் பொருள் தேடப் பிரிந்து செல்லுதலை, நின் தலைவிக்கு ஏற்றபடி நீயே கூறிவிடுக. (332)

**தோழி :** பிரமனும் திருமாலும் அறியாத சிவபிரானின் தில்லைச்சிற்றம்பலம் போன்ற அம்மையே! அடர்ந்து நீண்ட கரிய கூந்தலையும், வெண்மையான பற்களையும், சிவந்த இதழையும் உடைய தலைவியே! பொருள் இல்லாத வறியவர்கள், இம்மையும் மறுமையும் ஆகிய இருமையின்கண் வரும் இன்பங்களுள், எதனையும் அறியமாட்டார்கள் என்று கருதி, தொலையாது நிலைபெறும் பெரிய பொருட்செல்வத்தினைத் தேடுதற்கு விரும்பி, நமது தலைவர் செல்லுதற்கரிய சுர நெறியில் செல்ல நினைந்துள்ளார். (333)

**தலைவி** (தனக்குள்): தோழியாகிய கொடியவள், யான் என் கண்ணிற்கு மை எழுதுகின்ற சிறிதளவு நேரத்திலும், காதலரின் உருவம் காணப்படாமல் மறைந்து போதலைக் கருதி, அச் சிறிது நேரமளவும்கூட, காதலரைக் காணப்பெருமல் இருத்தலை வெறுத்து, அதற்காகவே கண்களுக்கு மை எழுதாமல் ஒழிதலை அறிந்திருக்கின்ருள். அங்ஙனம் அறிந்து வைத்தும், அம்பலவாணராகிய சிவபிரானை வணங்காதவர்கள், தாம் முன்பு வணங்காமையின் விளைவாகத் துன்புற்று வாழ்கின்ற கொடிய பாலைநில வழியில், நமது தலைவர் நம்மைப் பிரிந்து செல்ல இருக்கின்ருர் என்று, என்பால் வந்து தெரிவிக்கின்ருளே!. சிறிய அளவிலேயே அழிந்து சிதறிப் பொடியாகி விடுகின்ற குவளை மலரைப் பறித்தற்கு, மிகப் பெரிய வாட்படையை உறையினின்று உருவி எடுக்க முற்படுகின்ருளே!. இத்தகையவர்களுக்கும் யான் கூறுவது ஒன்று உண்டோ?

[தலைவர் நம்மைப் பிரிந்து செல்ல நினைக்கும்போதே, தோழி அவருக்கு நமது பிரிவாற்ருமைஇயல்பினைஎடுத்துக்கூறி, அவரைச்செல்லாமல் தடுத்திருக்கலாம். அது, குவளை மலரை நகத்தாற் கிள்ளிப் பறிப்பது போன்ற எளிய செயலாகும். அதனைச் செய்யாமல் விடுத்தொழித்து, மெல்லிய குவளைமலரைப் பறித்தற்கு, உறையினின்று பெரிய வாளை உருவி எடுக்க முயலும் அறிவிலிகளைப்போல, நம் தலைவரின் பிரிவை ஆற்றியிருக்குமாறு, தோழி நமக்கு ஆறுதல்கூற வந்து விட்டாள். இவள் எனக்கு இனியவள் அல்லள். உண்மையில் எனக்குக் கொடியவளே யாவள்.] (334)

**தோழி :** தில்லையில் உள்ள எம் கூத்தப் பெருமானை, வாழ்த்தி வணங்காத பாவிகளைப் போல, நம்முடைய காதலர் கானகங்கள் நிறைந்த பாலைநில வழியில், பொருள்தேடி வருவதற்காகப் பிரிந்து செல்லக் கருதியிருக்கின்ருர் என்று, யான் தலைவியின்பால் சொல்ல முற்பட்டேன். அவ்வளவில் அவளுடைய ஒளி மிக்க மார்பகங்கள், சுணங்கு பூத்துப் பொன்னைத்

தாரா நின்றன; மலர்போலும் அழகிய கண்கள் முத்துக்களை மிகுதியாகப் பொழியத் தொடங்கின. இந்நிலையில், தேன்நிறைந்து மணம் கமழ்கின்ற மலர் மாலைகளை அணிந்த மன்னவனுகிய தலைவனே! இத்தகைய தலைவியைப் பிரிந்து நெடுந்தொலைவு சென்று, நீ தேட விரும்புகின்ற பொருள்தான் யாது?

[தலைவனது பிரிவைக் கேட்ட அளவில், தலைவி பசலைநிறம் எய்தினள்; தலைவனின் பிரிவாற்ருமையினை நினைந்து கண்ணீர் சிந்திப் புலம்பினள் என்பதனை, ''கானக்கடம் செல்வர் காதலர் என்னக், கதிர்முலைகள் மானக் கனகம் தரும்; மலர்க்கண்கள் முத்தம் வளர்க்கும்'' என்று, கவிதை நலம் பொருந்த ஆசிரியர் பாடியருளினர். கானம்-காடு. கடம்-சுரம், பாலைநிலவழி. கனகம்-பொன். மானக்கனகம்-மாற்ருணிபோலும் பொன். தலைவியின் மேனியில் பசலைநிறம் பூத்தமை, கனகம் தரும் என்று குறிப்பிடப்பெற்றது. முத்துக்களைப் போலக் கண்ணீர்கள் துளித்தமை, ''மலர்க்கண்கள் முத்தம் வளர்க்கும்'' எனக் குறிக்கப்பெற்றது. வெண்ணெய் கையில் இருப்பவும் நெய்தேடி அலைந்து வருந்துவோர்போலப், பொன்னும் முத்தும் விளைதற்கு உரிய நிலைக்களனுகத் தலைவியே விளங்காநிற்கவும், இத்தகைய தலைவியைப் பிரிந்து சென்று, நீர் தேடக்கூடிய வேறு ஒரு பொருளும் உளதோ? என்று எள்ளி இகழ்ந்துரைக்கும் குறிப்பில், ''தேன் நக்க தார் மன்ன! என்னே இனிச்சென்று தேர் பொருளே?'' என்று தோழி வினவினுள்.] (335)

**தலைவி:** சுருண்ட செஞ்சடையின்கண், வெண்சுடர் மதியை அணிந்த சிவபிரானின் பொதியில் மலையில், அடர்ந்து இருண்ட ஒரு சிறந்த பூம்பொழிலில், எனது இன்னுயிர்போல மிகவும் இனியதாய் ஒன்றுபட்டு வந்து கூடிய தலைவர், அதுபோது நமக்குச் சொன்ன அருள் நிறைந்த பலப்பல இனிய சொற்கள் எல்லாவற்றையும் அறவே மறந்துவிட்டு, மிகவும் கொடிய பாலைநில வழியில் சென்ருே, தீவினை மிக்க எனக்காகச் செல்வப் பொருளைத் தேடிக் கொண்டுவரப் புறப்படுகின்ருர்! இது தகுமோ? (336)

**தோழி :** பூங்கொடி போலும் தலைவியே! நான்முகன் மால் இந்திரன் ஆகிய மூவரும் துதிக்க, எல்லாப் பொருளுக்கும் காரணராகிய சிவபெருமான், நடனம் ஆடுகின்ற தில்லையம்பலத்தின் சிறப்பைப் புகழாத பாவிகள், சென்று தங்கும் நரகத்தைப் போன்ற கொடிய காட்டு வழியின்கண், நமது தலைவர் பொருள் தேடி வருவதற்காக நம்மைப் பிரிந்து செல்லுகின்ருர். இனி நாம் கூறுவது உண்டோ? (337)

**தோழி:** தென்திசை வசைதீரத் தில்லைச் சிற்றம்பலத்தில் எரியாடுகின்ற, சிவபெருமான் எழுந்தருளி விளங்கும் அழகிய சிறந்த மதில்களை உடைய, திருப்பூவணம் என்னும் தலத்தைப் போன்ற தலைவியே! நமது தலைவர் இன்று வலிய பெரிய களிறுகளுடன், பகைவர்களின் மதிலைக் கால்சாய்த்து அழித்தற்காக நம்மிடம் சொல்லாமலே இன்று புறப்பட்டுச் சென்ருர்.

[செல்வர்' என்னுது 'சென்ருர்' என்றமையால், தலைவன் சொல்லாது பிரிந்தமை சுட்டப் பெற்றது.] (338)

**தோழி :** சூரியனது தேர், ஒற்றைச் சக்கரமே உடையது; சூரியனுடைய பாகனே இரண்டு கால்களும் இல்லாதவன். இந்நிலையில், ஐந்து பூதங்களும் தோன்றியவாறு ஒடுங்கும் ஊழிக்காலமும் ஒவ்வாதபடி, மிக நீண்ட நான்கு யாமத்தின்கண்ணும், ஏழு கடல்களையும் எட்டுத் திசைகளையும் கடந்து திரிந்து இளைத்தபின் அன்ருே, சூரியனுடைய பெரிய தேரானது இங்கு வந்து தங்கும்! அதனுல் சூரியன் எப்போது வந்து தோன்றப் போகின்ருன்? இவ் இரவு நேரம் எப்போது கழியப் போகின்றது? இரவின் இருள் கழிவதும், சூரியனின் ஒளி தோன்றிப் பொழுது புலர்வதும், விரைவில் நிகழ்வதாகத் தோன்றவில்லையே. இத்தலைவி தலைவனைப் பிரிந்த பிரிவாற்ருமையை, இந்த இரவுக் காலத்தில் எங்ஙனம் ஆற்றியிருக்கப் போகின்றனள்?

[இரவும் பகலும் ஒப்பவே வருமாயினும் இரவுறு துயரத்திற்கு ஆற்ருமையால், இராப் பொழுது பலகால் வருவதுபோல, 'பயில்தரும் இரவு' என்ருள். இச்செய்யுளில் ஒன்று முதல் எட்டு வரையில் எண்கள் அடுக்கி வந்தது, எண்ணலங்காரம் எனப்படும்.] (339)

**தலைவி:** முன்பெல்லாம், தலைவர் உலகின் மேல் வைத்துப் பிரிவு பற்றிக் கூறியபோது, இவர் பிரிவாராயினும் இப்பொழுது பிரியார்; நெடுநாள் கழித்தே பிரிவார் என்று, யான் அவர்தம் கூற்றை மிகுதியாகப் பொருட்படுத்தாதிருந்தேன். இவரோ, நாம் பிரிவதாகத் தெரிந்தால், இவள் உயிர்தாங்கமாட்டாள் என்று எண்ணித், தம்முடைய பிரிவைப் பற்றி எனக்குக் கூருமலே சென்றுவிட்டார். யான் அவரையும், அவர் என்னையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருந்தமை, தக்கனது வேள்வியை அழித்தவனும், எவர்க்கும் அரியவனுமாகிய சிவபிரானின் அருளைப் பெருதவர்கள் வருந்துமாறு போல, என்னை வருந்துமாறு செய்து அழிவித்தது.

[உண்மையிற் காரணம் ஆவனவும், உணரப்பட்டாற் காரணம் ஆவனவும், எனக் காரணம் இருவகைப்படும் அவற்றுள் பிரிவு தரியாமைக்கு உணரப்பட்டாற் காரணமாம் ஆதலின் 'பிரியின்' என்புழிப் 'பிரிகின்ருராக உணரின்' என்பது, ஆற்றலாற் பெற்ரும். 'புலிவரின் அஞ்சும்' என்புழிப்போல. 'எரியார் எழில் அழிக்கும்' என்பதற்கு 'எரியினது எழிலை அழிக்கும்' என்பார், ஆரைக்கிளவி கொடுத்து இழித்துக் கூறினர் எனினும் அமையும். அழிக்கும் என்பது காலமயக்கம். கற்பந்தோறும் அவ்வாறு செய்தலின், நிகழ்காலத்தாற் கூறினர் எனவும் அமையும். ''முக்காலத்திலும் ஒத்தியல் பொருளைச் செப்புவர் நிகழுங் காலத்தானே'' என்னும் விதி ஈண்டு அறிதற்குரியது.

''செல்வார் அல்லர்என்று யான்இதழ்ந் தனனே
ஒல்வாள், அல்லள்என்று அவர்இகழ் தனரே
ஆயிடை, இருபேராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்கு,என்
அல்லல் நெஞ்சம் அலமலக்கு உறுமே''

என்று அவ்வையார் பாடிய குறுந்தொகைச் செய்யுளை (43), இப்பாடல் முழுவதாக அடி ஒற்றி அமைந்திருத்தல், மகிழ்ந்து உணர்தற் குரியது.] (340)

தலைவன் (தனக்குள்): நீண்ட தொலைவிலும் தெரிகின்ற உயர்ந்த மதிலை உடைய சிற்றம்பலத்தில் நடனம் புரிபவனும், கடலில் தோன்றிய நஞ்சை உணவாகக் கொள்ளும் ஒப்பற்றவனும் ஆகிய சிவபெருமான், திருத்தமாகப் படைத்த இவ்வுலகம் முழுவதிலும், பார்க்கின்ற திசைதோறும், கண்ணாகிய கரிய கயல்மீன்களையும், இதழாகிய சிவந்த கனியையும், பசும்பொன்னால் இயன்ற பூண்களையும், தம்முள் இணைந்து திரண்ட தனங்களையும் உடையதாய், ஓர் அழகிய பூங்கொடி தோன்றாநிற்கின்றது. இங்ஙனம் நம் தலைவியின் உருவு வெளிப்பட்டு எங்ஙனும் தோன்றி, நம் நினைவிற்போந்து நம்மை வருத்துதற்குக் காரணம், தலைவிக்குக் கூறாமலேயே நாம் பிரிந்து வந்ததே போலும்! ஆதலின், இனி நாம் மேற் செல்லாது திரும்பி, மீண்டு செல்லுதலே நலம்.

(341)

தலைவன் (தனக்குள்): பொருட் செல்வத்தைத் திரட்டுவதற்காகத் தலைவியைப் பிரிந்து இவ்வளவு தொலைவு ஓடிவந்த நெஞ்சமே! தில்லை வளநகர் போன்றவளும், அன்ன நடையினை உடையவளுமாகிய, நம் தலைவியின் மின்போலும் நுண்ணிய இடையினையோ, அல்லது நீ தேடித் திரட்டுதற்கு எண்ணிப் போந்த பொருளினையோ, இவ்விரண்டனுள் எதனைப் பெறுதற்கு நீ விரைகின்றாய்? தீப் பொறி பறக்கும் இக் கொடிய காட்டினைச் சேர்ந்து போவதும் செய்யாமல், மீள்வதும் செய்யாமல் தயங்கித் தடுமாறி நிற்கின்ற நின் செயலை யாதென்று கூறுவது? நின் இயலும் செயலும் மயலும் எனக்குப் பெருந்துன்பத்தை விளைவிக்கின்றன. (342)

தலைவன்: நாயினிடத்தினுள்ள நல்ல குணமும் இல்லாத என்னை, நல்ல தொண்டனாக ஏற்றுக்கொண்ட தீவண்ண மேனியனாகிய சிவபிரானின் சிற்றம்பலம் போன்றவளும், சில மெல்லிய சொற்களையே பேசுபவளும், ஆகிய நம் தலைவியின்பால், பழகிவிட்டாற் பின்னர் பேயினிடத்துங்கூடச் செய்தற்கு அரிதாகிய பிரிவை, எளிதாகச் செய்வித்து, பிரிதற்கரிய தலைவியைப் பிரிந்து இவ்வளவு தூரம் வந்துவிட்டு, பின்னர்த் தலைவியை நினைந்துகொண்டு, என்னை வருத்துகின்ற கொடிய நெஞ்சமே! உன்னுடைய இரக்கமற்ற கடினத்தன்மை, பெரிதும் அஞ்சத்தக்கதாகும்.

['பணியுமாம் என்றும் பெருமை' என்னும் பொய்யாமொழிக்கு மெய்யான விளக்கமாகத் திகழும் மணிவாசகப் பெருமான், இச் செய்யுளில் தம்முடைய பணிவுடைமையும், இறைவன் தமக்குச் செய்த அருளின் திறனும் தோன்ற, ''நாய்வயின் உள்ள குணமும் இல்லேனை, நல்தொண்டு கொண்ட தீவயின் மேனியன் சிற்றம்பலவன்' என்று குறிப்பிட்டருளியிருத்தல், எண்ணி இன்புறத்தக்கது.

''பேயோடேனும் பிரிவொன்று
இன்னாதுஎன்பர், பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதான்அன்றோ?
கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும்,
உமக்கு ஆட்பட்டோர்க்கு
வாய்தான் திறவீர்; திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே''

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள், தம்முடைய திருவாரூர்த் திருப்பதிகத்தில் 'பேய் வயினும் அரிதாகும் பிரிவு' என்று, இத் திருக்கோவையார் செய்யுளில் வரும் தொடரை, நம்மனோர் நினைவு கூரும் முறையில் பாடியருளியிருத்தல் கருதி மகிழ்தற்குரியது.] (343)

தலைவன்: நெஞ்சமே! தீ மேவிய நிருத்தனாகிய சிவபிரானின் திருச்சிற்றம்பலம் போன்றவளும், பூவின்கண் மேவிய திருமகள் போல அழகுடையவளுமாகிய, பொன்னனை நம் சிறந்த தலைவியை எளிதாக எண்ணி இகழ்ந்து பிரிந்து வந்து, அழிந்து போகின்ற இழிந்த வேறு பொன்னைத் தேடிக்கொண்டு அலைந்து, தீப் பொறி பறக்கும் இக்கொடிய காட்டில் நீயே நடந்து செல்க. யான் நின்னுடன் வருதலை ஒழிந்தேன். வஞ்சிக்கொடி போன்ற, அழகிய மேகலையை உடைய தலைவியைப் பிரிந்து வருந்தச் செய்தோ, நீ பொருள் தேடி எம்மை வாழச் செய்யப் போகின்றாய்? தலைவியைப் பிரிந்து சென்று, பொருள்தேடி வர யான் உடன்படேன். வேண்டுமாயின் நீயே செல்க. (344)

தோழி: தெளிந்த கங்கை யாற்றினைச் சூடிய சடையை உடைய, சிவபிரானின் சிற்றம்பலத்தைச் சிந்தியாத பாவிகளைப்போல, இனிய பண் போலும் சொற்களை உடைய இத் தலைவி நோயுற்று வருந்தவும், இவளது கண்களிலிருந்து கண்ணீர் பெருகவும், மேனியின் ஒளி குறையவும், தலைவர் பிரிந்து சென்றார். அவர் பிரிந்து சென்று நெடுநாள்கள் ஆகின்றன. அந்நாள்களை எண்ணிக் கணக்கிடுதற்கு யான் சுவரிற் பலகாலும் புள்ளியிடுதலால், என்னுடைய விரல்கள் தேய்ந்தன; சுவரும் குழி விழுந்தது. இங்ஙனம் நெடுங்காலமாகப் பிரிந்துள்ள தலைவரின் பிரிவை, நம் தலைவி எங்ஙனம் ஆற்றியிருப்பாள்? (345)

தலைவன்: வலிமைமிக்க தன் கொம்புகளால் புற்றுக்களை இடந்து, மணிகள் ஒலிக்கும்படி, வெற்றிமிக்க நல்ல ஆனேறுகள், தமக்கு ஏற்ற இனிய இளம் பசுக்களுடன், புல் மேய்ந்துவிட்டு ஊர்க்குத் திரும்பிச் செல்லுகின்றன. செக்கர் வானத்தை உடைய இம்மாலைக் காலம், தில்லைச்சிற்றம்பலம் அனைய நம் தலைவி, பொறுத்துக் கொள்ளும் அளவினது அன்று. இம் மாலைநேரத்தில் தலைவி என்னை நினைந்து கொண்டு, பொறுத்தலாற்றாத் துயரமுறுவாள்.

அந்தோ என் பொருட்டு அவள் படும் துயரம் எத்தகையதோ?

[சிவபெருமான் தமக்குச் செய்த அருளின் திறனை நினைந்து ''சுற்றம் பலமின்மை காட்டித் தன் தொல்கழல் தந்த தொல்லோன்'' என்று மணிவாசகர் அருளிச் செய்துள்ள நுட்பம், உன்னி உணர்ந்து மகிழ்தற்குரியது. இக்கருத்தினையே கூறுவனவாக ''இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே, துணை யான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந் தேன்'' என்பன போலவரும் திருவாசகப் பகுதிகள், இங்கு ஒப்புநோக்கி உணர்ந்து மகிழ்தற்குரியன.] *(346)*

**தலைவன் :** வானத்தில் மேகங்கள் மிகவும் செறிந்து நிற்கின்றன. அதனல் இருள்சூழ்ந்து அடர்ந்து, கண்கள் எதனையும் பார்க்கமுடியா மல் உள்ளன. எங்கும் முல்லை மலர்கள் பூத்துப் பொலிகின்றன. மயில் இனங்கள் திரண்டு, தம் தோகையை விரித்து நின்று ஆடுகின்றன. தில்லைச் சிவபிரானின் இனிய திருவருளைப் போன்றவளும், பண்ணினும் சிறந்த இனிய சொற்களை உடையவளும் ஆகிய தலைவி, தீவினை யேன் ஆகிய என்னை நினைந்து, எத்தகைய துய ரத்தை அடைந்து வருந்துகின்றனளோ? யான் என்செய்வேன்? *(347)*

**தலைவன் :** மாலைக்காலத்து இருளின்கண் மயானத்தின்கண் நின்று ஆடுபவனும், சிற்றம் பலத்தானுமாகிய சிவபெருமானின், கருமை யான திருமிடற்றைப்போல, இருண்டு திரள் கின்ற மேகங்களே! நீங்கள், முதிய பெண் டிர்கள் சூழ்ந்துகொண்டு, வில்போலும் புரு வத்தை உடைய தலைவியின் துயரத்தைப் போக்குதற்கு விரும்பி, நறுமணம் மிக்க மலர் களைத் தூவியும், நெல் விரவிய தூய பலியைக் கொடுத்தும், இல்உறை கடவுளுக்குப் பூசனை புரிகின்ற, தலைவியினது பெரிய மாளிகையின் கண், எனக்கு முன்னே சென்று சேர்தலை ஒழி யுங்கள்!

[மேகங்கள் திரள்கின்ற மாலைக்காலத் தில், முதிய பெண்டிர்கள் கூடி, நறுமலர்களைத் தூவி, நெல் விரவிய பலியைக் கொடுத்து, இல் உறை கடவுளுக்குப் பூசை புரிவர், அல்லது விரிச்சி கேட்டு நிற்பர் என்னும் இச்செய்யு ளின் கருத்து,

''பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங்கடி மூதூர் மருங்கிற் போகி,
யாழ்இசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது,
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பர்''

எனவரும் முல்லைப்பாட்டு வரிகளில் அமைந் திருத்தல் அறிந்து இன்புறுதற்குரியது.] *(348)*

**தோழி :** மேகங்கள், பாவை போலும் அழகிய தலைவியின் உயிரைச் செகுப்பதன் பொருட்டுக் கறுத்துச் சினங்கொள்ளுகின்ற, இம்மாலைப் பொழுதின்கண், நீல மலர்போலும் மிடற்றை உடைய சிவபெருமானின் திருவருள் போல, நம் அன்பராகிய தலைவரின் தேர், அவர் தேடிக் கொணர்ந்த அளவற்ற பெருஞ் செல்வத்துடன், விரைந்து வந்து பொருந்திற்று. ஒருவர்க்கு ஊழான் வருவதற்குரிய நலங்களைத் தடுத்து நிறுத்தவல்லது எதுவும் இல்லை. ஆதலின் தலைவியே, நீ நின்கவலையை விடுத்து மகிழ்ச்சி கொள்க. *(349)*

**இளையர் (ஏவலர்) :** தலைவியின் இடை யிலுள்ள ஒளிமிகுந்த மேகலை, தன் நிலையில் நின்றும் பிறழ்ந்தது; வரி வளைகள் கழன்று விழுகின்றன. இவ்வாறு தலைவனின் பிரிவால் கவலையுற்று வருந்துகின்ற, மெல்லிய இயல்பை உடைய தலைவியின் உயிர் பிரிவதற்கு முன்னே, நம் அன்பராகிய தலைவரின் தேரானது, திரண்ட பெருஞ் செல்வத்துடன் வந்து சேர்ந்து விட்டது. யாழின் மொழி மங்கைபங்கனும், சிற்றம்பலவனும் ஆகிய சிவபிரானல் அமைக் கப்பெற்ற, ஊழினும் வலிமை மிக்குடையது யாது?

[அன்பரின் தேர் திரும்பி வந்து சேர்ந்தில தாயின், தலைவியின் உயிர் பிரிந்திருக்கும். அங் ஙனம் தலைவியின் உயிர் பிரிந்து செல்லாதபடி, தலைவனின் தேரைத் திரும்பி வந்து சேருமாறு செய்து, ஊழானது தலைவியின் உயிரைப் பாது காத்தது. ஆதலின் ''சிற்றம்பலத்தான் அமைத்த ஊழின் வலியது ஒன்று என்னை?'' என்று இளையர்கள் வியந்து மகிழ்ந்துரைத்த னர். இச்செய்யுள் ''ஊழிற் பெருவலி யாவுள, மற்றொன்று சூழினும் தான் முந்துறும்'' என்னு னும் திருக்குறளின் கருத்தைத் தழுவி அமைந் துள்ளது.] *(350)*

**தலைவன் :** மயில் போலும் சாயலையும், மான்போலும் மென்மையையும் உடைய, இத் தலைவியைப் பிரிந்து, பொருள் தேடுவதற்காக வெப்பம் மிக்க பாலைநில வழியில், யான் சென்ற துன்பமெல்லாம், விடையேறும் வித்தகனுகிய சிவபெருமானது புலியூரின்கண், குயிலோசை போன்ற இனிய சொற்களை உடைய, இத்தலைவி யின் மெல்லிய கொங்கைகள், என் உடலின் கண் மூழ்கும் வகையில், அவற்றை யான் இம் மலர்ப்படுக்கையில் அணைவதன் முன்னரே, மாய்ந்து மறைந்து நீங்கி ஒழிந்தன. இனி எமக்கு ஒரு துன்பமும் இல்லை.

[தலைவியின் சாயலும் மென்மையும் குறித்து ''மயில் மன்னு சாயல் இம்மான்'' என்று தலைவன் புகழ்ந்தான். 'இம் மான்' என்று சுட்டியது, தலைவி பிரிதற்கரிய பெற்றி யினள் என்னும் சிறப்பினை உணர்த்திநின்றது. பொருள் தேடுவதற்காகப் பாலைநில வழியில் சென்று தான் எய்திய அளப்பருந் துன்பங் களெல்லாம், தலைவியை அணைந்த மாத்திரத் தில், ''வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும் கவாஅன் மகற்கண்டு தாய் மறந் தாங்கு'' மாய்ந்து மறைந்தொழிந்தன என்று, தலைவன் தலைவியைப் புகழ்ந்துரைத்து மகிழ்ந் தான்.] *(351)*

**—(தொடரும்)**

# 'தமிழின் நீர்மை'

ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.

"தமிழின் நீர்மை பேசித் தாளம்
வீணை பண்ணி நல்ல
முழவம் மொந்தை மல்கு பாடல்
செய்கை இடமோவார்;
குமிழின் மேனியது தந்து
கோல நீர்மையது கொண்டார்;
கமழும் சோலைக் கானூர் மேய
பவள வண்ணரே''

—திருஞான சம்பந்தர்

## முன்னுரை :

இந் நிலவுலகின்கண் உள்ள பற்பல நாடுகளிலும், எத்துணையோ பல நூற்றுக்கணக்கான மொழிகள் வழங்கி வருகின்றன. சிறுசிறு கிளை மொழிகளைத் தவிர்த்து உலகில் இது போன்று வழங்கிவரும் மொழிகள் ஏறத்தாழ 2796 என்று, மொழி நூற்றுறை யறிஞர்கள் ஒருவாறு கணக்கெடுத்திருக்கின்றனர்.(1). அவைகள் அனைத்தும் ஒரே தரத்தன அல்ல. தத்தமக்கு அமைந்த இயல்புகளுக்கு ஏற்ப, அவைகள் வெவ்வேறு படிநிலைகளையுடையன. அவற்றுள் மிகப் பெரும்பாலானவை **'திருந்தா மொழிகள்'** என்னும் வகையைச் சேர்ந்தன வாகலாம். **'திருந்திய மொழிகள்'** எனக் குறிப்பிடத் தகுந்த சிறப்புடைய மொழிகள் ஒரு சிலவே யாதல் கூடும்.

அவற்றுள்ளும் இலக்கண இலக்கிய நலங்களிற் சிறந்து, பழமையும் பெருமையும் அருமையும் வாய்ந்தவை மிகச் சிலவாகவே இருக்கும். அவை தம்முள்ளும் ஒரு சிலவே **'உயர்தனிச் செம்மொழிகள்'** எனப் புகழ்ந்து போற்றத் தக்கனவாகத் திகழ்கின்றன. அவ்வொரு சில உயர்தனிச் செம்மொழிகளிலும்கூட, எத்துணையோ பல மொழிகள் வழக்கிழந்து நிற்க, அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியொன்றே, பல்லாயிரம் ஆண்டுகளாக உலகவழக்கு, நூல் வழக்கு என்னும் இருதிற வழக்கிலும், தொன்று தொட்டு இன்றுகாறும் நின்று நிலவி, இனிது வழங்கி வளர்ந்து வருகின்றது.

இற்றைஞான்று உலகம் முழுவதிலும் பேசப்பட்டு வரும் பெருமொழியாகப் பிறங்கும் ஆங்கில மொழியானது, இருநூறு அல்லது முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர், மிக எளிய நிலையிலேயே இருந்து வந்தது(2). ஒரு சிறு தீவின் மக்கட் கூட்டத்தினரால் மட்டும் பேசப்பெற்று வந்த அம்மொழியானது, உலகம்எங்கணும் வழங்கத்தகும் பெருமொழியாகிவிடும் என்று அந்நாளில் எவரும் கனவுகூடக் கண்டதில்லை! இங்ஙனமே , நம் இந்திய நாட்டிலும் ஒருசில மொழிகள் மிக அண்மைக் காலத்தில் தோன்றியனவே யாகும். சௌராட்டிர மக்களின் மொழிக்குச் சென்ற நூற்றாண்டில்தான் (கி.பி. 1870), எழுத்துக்கள் தோற்றுவிக்கப்பட்டன என்பர். இன்னோரன்ன செய்திகள் பலவும் கருதியுணருங்கால், தமிழ் மொழியின் தனிப் பெருஞ் சிறப்பியல்புகள் பலவும் நம்மனோர்க்கு விளங்கும்.

## தமிழ் இலக்கணம்:

இங்ஙனம் தமிழுக்கே தனிச் சிறப்பாக உரிய பலவகைப் பெருமைகளுள், அதன் சீரிய இலக்கண அமைப்பும் ஒன்றாகும். அது பற்றியே

''கண்ணு தற்பெருங் கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்த இப்
பசுந்தமிழ், ஏனை
மண்ணி டைச்சில **இலக்கண
வரம்புஇலா மொழிபோல்,**
எண்ணி டப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ?''

என ஆசிரியர் பரஞ்சோதி முனிவர், அதன் சீரிய இலக்கண அமைப்புத் திறம் குறித்துப் பாராட்டி யுரைப்பாராயினர்! ''தமிழ் மக்களைப் போல இலக்கணத்தினை அன்பும் ஆர்வமும் கொண்டு, திட்ப நுட்பம் செறிய மிகவும் நுணுகிக் கற்றுணர்ந்து இன்புற்றவர்கள் உலகிலேயே வேறு பிறர் இல்லை எனலாம். மொழி

---

(1) " Gray's Foundations of Language tentatively places the total number of present day spoken language, exclusive of minor dialects, at 2,796. . . "

—MARIO PEI,
*The World's Chief Languages*, p. 15.

(2) " Only two or three centuries ago, English was spoken by so few people that no one could dream of its ever becoming a world language."

—OTTO JESPERSON,
*Growth and Structure of the English Language*, p. 260.

யின் இலக்கண அமைப்புக்களை நுணுகி நுணுகி மிகவும் ஆராய்ந்து பயின்று வந்ததனல், தமிழர் களின் அறிவு மிகக் கூர்மை யடைந்து வளர்ந்த துடன், அவர்களுடைய மொழியும் திருத்த முற்றுச் செம்மை எய்தித் திகழ்வதாயிற்று'' எனப் பேரறிஞர் **திரு. கால்டுவெல்** அவர்கள் பாராட்டி யுரைக்கின்ருர்.

**தமிழின் சிறப்பியல்புகள் :**

உலகின்கண் உள்ள ஒவ்வொரு மொழி யிலும் ஒவ்வொருவகைச் சிறப்பியல்பு உண்டு. அவ்வகையிற் கருதின், எல்லா மொழிகளும் தம்முள் ஓராற்ருல் ஒத்த தன்மையுடையனவே என்பதில் ஐயமில்லை. ஆயினும் தமிழ்மொழி யானது தனக்கெனப் பல தனிப் பெருஞ் சிறப் பியல்புகளை உடையதெனக் குறிப்பிடுதல் இழுக் காகாது.

(1) தமிழில் உள்ள எழுத்துக்களெல் லாம் மக்களுடைய நாவின் இயல்பையும் ஒலி யின் இயல்பையும் ஆராய்ந்தறிந்து, இயற்கை நெறிக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன. தமிழில் வழங்கும் எந்தச் சொற்களின் முதலினும் ட் ண் ர் ல் ழ் ள் ற் ன் என்னும் எட்டெழுத்துக்களும் நிற்கப்பெரு எனத் தமிழிலக்கண நூல்களில் ஒரு விதி காணப்படுதல், அவற்றை எளிதின் உச் சரிக்க மாட்டாத குழந்தைமைப் பருவ நிலை யில் மக்கள் இருந்த பழங் காலத்திலேயே, தமிழ் தோன்றியது என்பதற்கு அறிகுறியாகும்.

''வையம் ஈன்றதொன் மக்கள் உளத்தினைக்
கையி ணல்உரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பழந்தமிழ்
ஐயை தாள்தலைக் கொண்டு பணிகுவாம்''

(2) தமிழ் எழுத்துக்களின் ஒலியமைப் பியற்கை, தமிழ் மக்கள் வேறுபிற அயல்நாட்டு மொழிகளின் ஒலிகளையும் நன்கினிது திறம்பட எளிதாக ஒலிப்பதற்குத் துணைபுரியக் கூடிய தாகத் திகழ்கின்றது.(3)

(4) ஆங்கிலம் முதலிய மொழிகளில் ஒரெழுத்தே பலவேறு ஒலிகளைக் குறிக்கப் பயன் படுவதுபோல் அன்றி, 'ஒரெழுத்துக்கு ஒரொலி' என்னும் அறிவு நெறிக் கொள்கைக்குப் பெரும் பாலும் முரண்படாமல் தமிழ் எழுத்துக்கள் அமைந்துள்ளன.(4)

(5) ஒருசில மொழிகள் தமக்கேயுரிய எழுத்தமைப்பினை யுடையன அல்ல. எடுத்துக் காட்டாக, இத்தாலியன் பிரெஞ்சு ஸ்பானிஷ் ஆங்கிலம் முதலிய மொழிகள் தமக்கெனத் தனித்தனியே எழுத்தமைப்புக்களைப் பெருமல், ஒரே வகை நெடுங்கணக்கினையே ( Alphabet ) கையாளுகின்றன. தெலுங்கு எழுத்துக்களையே கன்னடமும் பயன்படுத்துகின்றது. தமிழ் மொழியோ மிகப் பழங்காலந்தொட்டே தனக் கெனவுரிய ஒரு தனி எழுத்தமைப்பை உடைய தாக விளங்கி வருகின்றது.

(6) ஆங்கிலத்தில், 'அச்செழுத்து வகை' 'கையெழுத்துவகை' என இரு வேறு பிரிவுகள் உள்ளன. அரபிய மொழியில், மொழி யின் முதலிடை கடைகளில் வரும் முறைகளுக் கேற்ப, மெய்யெழுத்துக்கள் நான்கு வேறு வடிவங்களைப் பெறுகின்றன. மேலும், ஒரு மொழியே அதனைப் பேசும் மக்களின் மதம் பண்பாடு முதலிய வேறுபாடுகள் காரணமாக வெவ்வேறு வகையான எழுத்துக்களால் எழுதப் படுவதுண்டு. தமிழில் அத்தகைய நிலைகள் எதுவும் இல்லை.

(7) சில மொழிகளில் எழுதுவது ஒரு வகையும், ஒலிப்பது பிறிதொரு வகையுமாக உள்ளது. ஆங்கிலத்தில் உள்ள Put, But, Depot, Often முதலிய யாவரும் அறிந்த சொற்களே, இவ்வுண்மையை விளக்கப் போதிய சான்ருகும். ஜெர்மன் மொழியில் 'ரூட்டர்' (Reuter), 'ஃப்ரூட்' (Freud ) என எழுதிவிட்டு, 'ராய்ட் டர்' (Roiter), 'ஃபிராய்ட்' (Froid) என ஒலிக்கின்றனர். இங்ஙனம் எழுதுவது ஒரு வகையும், ஒலிப்பது பிறிதொரு வகையுமாக இருத்தலால்(5), நேரும் இடர்ப்பாடுகட்கு எல்லையே இல்லை. ஒலிப்புக்கென்றே மிகப் பெரிய விளக்க நூல்கள் வெளியிட வேண்டிய இன்றியமையாமை, ஆங்கிலம் முதலிய மொழி களில் காணப்படுகின்றது. வல்லொலி மெல் லொலி மாற்றம் தவிர, இத்தகைய குறை பாடுகள் தமிழில் இல்லை எனத் துணிந்து கூற லாம்.

(8) தமிழ் எழுத்துக்கள், அ ஆ இ ஈ உ ஊ... என்றும், க ங ச ஞ ட ண....என்றும், அவைகள் தோன்றும் நெறிக்கு ஏற்ப, அறி வார்ந்த முறையில் ஒழுங்குற வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. அவ்வரிசை முறைக்குரிய கார ணங்களையும், உரையாசிரியர்கள் செவ்விதின் விளக்கியுள்ளனர். ஆனல் ஆங்கிலம் முதலிய மொழிகளில் A B C D E F என வழங்கும் வரிசை முறைக்குரிய காரணம், ஏதும் இருப்ப தாகப் புலப்படுத்தப்பெறவில்லை.

---

(3) " The rich variety of sounds of Tamil is such that its speakers can adopt themselves with comparative ease to the sounds of many foreign tongues."

(4) " One letter, one sound is the scientifically best phonetic rule."

(5) " In the English tongue we speak
Why is ' break ' not rhymed with ' freak '?
Well, you tell me why it is true,
We say ' sew ' but likewise ' Jew '?
' Beard ' sounds not the same as ' heard.'
' Cord ' is different from ' word,'
And since ' pay ' is rhymed with ' say '
Why not ' paid ' with ' said ' I pray ?
'Cow ' is ' Cow ', but ' low ' is ' low '.
'Shoe ' is never rhymed with ' foe',
And in short, it seems to me
Sound and letters disagree . . .
—LORD CROWER

" The English spelling is an international disaster."
—G. B. SHAW

(9) தமிழிலுள்ள சொற்கள் எல்லாம் இயல்பாக மிகக் குறுகியனவாய், ஓரசை ஈரசைகளாலேயே பெரும்பாலும் இயன்றுள் ளன. "நாகரிகம் எய்தப் பெருத எளிய மக்கள் பேசும் மொழியின் சொற்கள், அவர்கள் கை யாளும் கருவிகளைப் போலவே திருத்தமும் செம்மையும் பெருமல், மிக நீளமாக இருக்கும்" என்பது, மொழிநூல் அறிஞர்கள் கண்டறிந்த உண்மையாகலின், ஓரசை ஈரசைகளால் அமைந்து தமிழில் வழங்கும் சிறு சிறு சொல்ல மைப்பே, அதன் பழம் பெரு நாகரிகத்தினையும், பண்பாட்டினையும் அறிவிக்கும் சான்ருக அமை யத் தகும்.

(10) தமிழிற் பகுத்தறிவுடைய உயிர் களை உயர்திணை என்றும், பகுத்தறிவில்லாத உயிரையும் உயிரில் பொருள்களையும் அஃறிணை என்றும், பாகுபாடு செய்து விளக்கியிருப்பது பாராட்டற்குரியதாகும்.

(11) அங்ஙனமே சொல் நோக்கி ஆணைப் பெண்ணுகவும், பெண்ணை ஆணுகவும், இரண்டை யும் அலியாகவும், மனஞ் சென்றவாறு செயற் கைப் போலி நெறியிற் கூறியொழிந்து பிழை படாமல், பொருள் நோக்கி இயற்கைக்கு ஏற்பத் தமிழிற் பால்கள் (gender) வகுக்கப்பட்டுள்ள மையும், மிகவும் மகிழ்தற்குரிய செய்தியாகும். வடமொழியில் மனைவியைக் குறிக்கும் தாரம்-களத்திரம்-பாரியை என்னும் சொற்கள், வெவ் வேறு பாற் சொல்லாகக் கொள்ளப்படுதல், இங்குக் கருதத் தக்கது.

(12) தமிழில் உள்ள படர்க்கை வினை முற்றுச் சொற்கள், திணை பால் எண் இடம் காலம் என்பனவற்றைக் காட்ட வல்லனவாக விளங்குதல்போல, வேறு மொழிகளிற் காணப் படவில்லை. சில மொழிகளில் பெயர்ச்சொற்கள் மட்டுமேயன்றிப் பெயர்களைத் தழுவி வரும் உரிச்சொற்களும்கூட, வேற்றுமை யுருபுகள் ஏற்பதுண்டு. அத்தகைய இடர்ப்பாடுகள் தமிழில் இல்லாமை கற்பார்க்கு எளிமை பயக் கின்றது.

(13) தமிழ்ச் சொற்களின் பகுதிவிகுதி முதலிய உறுப்புக்கள், மிக எளியவரும் தாமே கருதி யுணர்ந்து கொள்ளத் தக்க இயல்புடை யன. பிற சில மொழிகளிற் போலச் செயற்கை நெறிகளிலும், வெறும் கற்பனை முறைகளிலும், சொற்களின் பகுதி விகுதிகள் தமிழில் வகுக்கப் பட்டில்லாமை, அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிகின்றது.

(14) "பன்னீருயிரும் கசதந பமவய ஞங ஈரைந்து உயிர்மெய்யும் மொழிமுதல்" எனச் சொற்களின் முதலில் வருவன 22 எழுத்துக் களே எனவும், "ஆவி ஞணநமன யரவழள மெய் சாயும் உகரம் நாலாறும் ஈறே" எனச் சொற் களின் இறுதியில் வருவன 24 எழுத்துக்களே எனவும் பிறவாறும், தமிழிலக்கணம் ஆராய்ந்து அளந்து வரையறை செய்து கூறியிருப்பது, மிகவும் வியக்கத்தக்க செய்தியாகும்.

(15) ஆசிரியர் சிவஞானசுவாமிகள் தமது 'தொல்காப்பியப் பாயிர விருத்தி'யில் ''தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட் படுஞ் செய்கை களும் குறியீடுகளும், வினைக் குறிப்பு வினைத் தொகை முதலிய **சொல்லிலக்கணங்களும்,** உயர்திணை அஃறிணை முதலிய **சொற்பாகுபாடு களும்,** அகம் புறம் என்னும் பொருட் பாகு பாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய **திணைப் பாகுபாடுகளும்,** அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய **செய்யுளிலக்கணமும்,** இன் னேரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா'' எனக் கூறியிருப்பது, ஈண்டுக் குறிக் கொள்ளத் தக்கது.

(16) நன்னூல் இயற்றிய ஆசிரியர் பவணந்தியார் இடுகுறிப்பெயர் உடன்பட்டன ராயினும், 'மொழிப் பொருட் காரணம் விழிப் பத்தோன்ரு' எனவும், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' எனவும், ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்திருத்தலின், **தமிழில் எல்லாச் சொற்களும் அறிவார்ந்த முறையிற் காரணம் பற்றி அமைந்தனவே** என் பது அறியப்படும். 'ஆசிரியர் தொல்காப்பிய ஞர், யாதானும் ஓர் காரணம் பற்றியே குறி யிட்டு ஆளுதல் அல்லது, பிற சில மொழி யாளர் போலக் காரணம் பற்ருது குறியிட்டு ஆளுதல் யாண்டும் இல்லை' எனச் சிவஞான சுவாமிகள், தமது 'தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி' யிற் குறித்திருப்பதும் ஈண்டு நாம் உணர்தற்கு ஏற்புடையது.

(17) ஏனைய மொழிகள் எல்லாம், எழுத்து சொல் சொற்ருெடர் செய்யுள் என்பன போன்றவற்றிற்கு மட்டுமே, ஓரளவு இலக் கணம் உடையனவாக, அவற்ருற் குறிக்கப்படும் பொருளுக்கும்கூடத் தமிழ்மொழி இலக்கணம் வகுத்திருக்கின்றது. **'பொருள் இலக்கணம்'** என்பது தமிழ்மொழியில் மட்டுமே உள்ள சிறப்புக்கூறு ஆகும். அது பற்றியே யன்ரே, ''தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழ்'' எனத் தமிழ்மொழியினைச் சான்ருேர்கள் போற்று வாராயினர் என்பது.

'வழுத்துபெரு மாண்புடைய மற்றை மொழிகள்
எழுத்தொடு சொல்லின் இயல்பே—முழுத்தும்
எடுத்துரைக்க மாட்டாது இளைப்பப், பொருளும்
தொடுத்துரைக்கும் தூய தமிழ்''

(18) மக்களின் வாழ்க்கையை அகம் புறம் என இரண்டாக வகுத்து, மக்களாயினர் தம் வாழ்க்கையில் இன்றியமையாது எய்தற் பாலனவாகிய **அறம் பொருள் இன்பம் வீடு** என்பனவற்றையும், அவற்ருேடு தொடர் புடைய காதல் வீரம் முதலிய பற்பல செய்தி களையும் எல்லாம், **'புலனெறி வழக்கம்'** பற்றி, மிகவும் விரிவாக விளக்கிக் கூறியிருப்பது, தமி ழிலக்கணத்தின் தனிப்பெரும் சிறப்பியல்புகளு ளெல்லாம் தலைசிறந்த தொன்ருகும்.

(19) உலகத்திற் பல மொழிகள் காலத் திற்குக் காலம் திரிந்து சிதைந்து மாறுபடுகின் றன. கேடிமான், லேங்லண்ட்முதலியோர் காலத் தில் வழங்கிய ஆங்கிலமொழி சாசர் காலத்தி

லும், சாசர் காலத்தியமொழி செகப்பிரியர் காலத்திலும், செகப்பிரியர் காலத்துமொழி தேனிசையன் காலத்திலும், எத்தனை எத்தனையோ மாறுதல்களை அடைந்துள்ளன.(6)

ஆனால் நம் அருமைத் தமிழ்மொழியோ, கடந்த எத்தனையோ பல ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறிதும் மாறாமலும், சிதையாமலும், ஒரே நிலையிற் கன்னித் தமிழ் என்பதற்கு ஏற்ப, இன்றும் யாவர்க்கும் எளிதிற் புரியும் படியாக நிலைபெற்று நிலவி வருகின்றது. உலக மொழிகளின் வரலாற்றில், இஃதொரு விந்தை மிக்க பெருஞ் செய்தியாகும்.(7)

(20) ஆங்கிலம் உலகப்பெரு மொழிகளுள் ஒன்றாக இன்று திகழ்கின்றதெனினும், அதன் இலக்கணம் இன்னும் போதிய திருத்தமும் செம்மையும் எய்தவில்லையே என்று, ஆங்கில அறிஞர்கள் பலர், மனம் வருந்திக் கூறி, வருகின்றனர். ஆனால் ஏறத்தாழ மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழில் தொல்காப்பியம் என்னும் தூய சிறந்த முழுமுதல் இலக்கண நூல் அமைந்திருப்பது, தமிழ் மக்களின் தவப்பேறு என்றே கூறுதல் வேண்டும்.

(21) பழந்தமிழ் மக்கள் கண்டுணர்ந்து கடைப்பிடித்த அரிய இனிய நூற்பா அமைப்பு, சுருங்கச் சொல்லல்-விளங்க வைத்தல்-நவின்றோர்க்கினிமை - நன்மொழிபுணர்த்தல் - ஓசையுடைமை-ஆழமுடைத்தாதல் முதலிய பத்து வகை அழகுகளும் பயின்று, எத்துணை மாட்சிமை மிக்கு இலங்குகின்றது!

(22) நூற்பாக்களைக் காரண காரிய முறை பிறழாமலும், முன்னொடு பின் முரணாமலும், பிறவாறும் அமைத்திருக்கும் திறமும், அவற்றிற்கு இளம்பூரணர் சேனாவரையர் பேராசிரியர் நச்சினார்க்கினியர் முதலானோர் வரைந்திருக்கும் அரிய பெரிய உரை விளக்கங்களும் பிறவுமெல்லாம், நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பும் விம்மிதமும் விளைக்க வல்லன அன்றோ?

### முடிவுரை :

இவைகள் எல்லாம், நமது அருமைத் தமிழ்மொழியின் அளப்பருஞ் சிறப்புகளை அறிவிக்கும் சான்றாகும். பழமையும் பெருமையும் தெய்விகநலமும் சான்ற, நமது தமிழ்மொழியினை நாம் நம் உயிரினும், விழுமியதாகப் போற்றிப் பயன்கொள்ள முயலுவோமாக!

---

(6) "Just compare the language of Caedmon, of Langland, of Chaucer, of Shakespaere, of Milton and of Tennyson, one with the other, and see to what great an extent the language of one differs from that of the other."

(7) "The Tamil words that are more than 7,000 years old, have not undergone any change in the mouths of the latter. The sacred Thirukkural written 2,000 years ago, is intelligible even now to an illiterate rustic. Does not this indicate the great vitality of Tamil.?"

—MARAIMALAI ADIGAL

---

# தமிழின் தனிச்சிறப்புகள்

செய்யுள் நடையிற் **கிரேக்கத்திற்** சிறந்த நயமும் திருத்தமும்மிக்(கு),
எய்தற் கருநற் கலைவிரிவில் **இலத்தீனத்தின்** மிகமேலாய்,
உய்யும் நிறைவால் ஆற்றலினால் உயர்ந்த **செருமன்,ஆங்கிலத்தின்**
மெய்யே ஓங்கித், **தமிழ்மொழி**தான் விளங்கித் திகழும்! **தமிழ்வெல்க!** (1)

கருத்துச் சிறப்பில், ஆற்றலினில், கலைகள் மலிந்த கவிவளத்தில்,
சுருக்கத் திறனில், திட்பநுட்பம் துதைந்து விளங்கும் அறிவறத்தில்,
ஒருக்க உணர்வும் உரைவிளைவும் ஒன்றும் உயர்வில், தமிழ்மொழிபோல்
பெருக்கம் அமைந்து பிறங்குமொழி, பிறிதொன் றில்லை! **தமிழ்வாழ்க!** (2)

எண்ணில் மொழிகள் வழக்கிழந்தே, எவரோ சிலர்தாம் பயிலநிற்கக்,
கண்ணில் விளங்கு கருமணிபோல், கனிவிற் போற்றி மக்கள்பலர்
மண்ணில் இன்றும் வழங்கிவர, மாறா வளத்தில், தொன்றுதொட்டே
திண்ணி தாகத் தமிழ்மொழிதான் சிறந்து திகழும்; **தமிழ்போற்றி!** (3)

—தமிழாக்கம் : **ந. ரா. முருகவேள்.**

(1) "It is not perhaps extravagant to say that in its poetic form, the Tamil is more polished and exact than the Greek, and in both dialects with its borrowed treasures, more copious than Latin. In its fullness and force it resembles English and German more than any other living language." —DR. WINSLOW.

(2) "Perhaps no language combines greater force with equal brevity and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind. The sequence of things, of thought and action and its results, is always maintained inviolate." —PERCIVAL.

(3) "Tamil is, perhaps, the only example of an ancient classical tongue, which has survived as a spoken language, at the least, for more than 2,500 years, with its basic structure, almost unchanged."

*—Encyclopaedia of Brittanica*

# கம்ப ராமாயணம்

'சிலம்புச் செல்வர்'

திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள்

[மேலவைத் தலைவர்]

(முற்றெடர்ச்சி)

அசோக வனத்தில் சிறைப்பட்ட சீதையானவள் தன்னிடம் தூது வந்த அனுமன் மூலம் தன் கணவனுக்கு ஒரு செய்தி அனுப்புகிறுள். சீதைக்கும் இராமனுக்கும் திருமணம் நடந்தபின் ஏற்பட்ட முதலிரவுச் சந்திப்பிலே, ''உன்னைத் தவிர இன்னெருரு பெண்ணை என் சிந்தையாலும் தொடேன்'' என்று இராமன் உறுதி கூறினுன். அதனை நினைப்பூட்டுமாறு அனுமனிடம் சொல்கிறுள் சீதை.

''வந்து எனைக் கரம் பற்றிய வைகல்வாய்,
இந்த, இப்பிறவிக்கு இரு மாதரைச்
சிந்தையாலும் தொடேன் என்ற, செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்''

ஆம்; ஆண் கற்பைக் கடைப்பிடிக்குமாறு இராமனுக்குச் சீதை செய்தியனுப்பியதாகக் கம்பர் கூறுகிறுர். இது, வான்மீகியில் இல்லாத நிகழ்ச்சி. தயரதனுக்கு அறுபதினுயிரம் மனைவியராதலால், அவன் மைந்தனும் தான் இல்லாத நேரத்தில் தந்தையைப் பின்பற்றி விடுவானே என்று சீதை ஐயுற்றிருக்கலாம். பெண்களின் சந்தேக புத்தியை நகைச்சுவை ததும்ப எடுத்துக் காட்டுகின்றுர் கம்பர்.

இராமாயணத்தில் மற்றேரிடத்திலும் இலக்குவன் வாயிலாக ஆண் கற்பை வலியுறுத்துகின்றுர் கம்பர். கார்காலம் முடிந்ததும் சேனைகளைத் திரட்டிக் கொண்டு வருவதாக இராமனுக்கு உறுதி கூறிவிட்டு, கிஷ்கிந்தை புகுந்த சுக்ரீவன் தனது உறுதி மொழியை மறந்து விடுகிறுன் மது மயக்கத்தால்! அப்போது, அவனுடைய உறுதி மொழியை நினைப்பூட்டுவான் வேண்டி இராமனல் அனுப்பப் பட்டுச் சீற்றங் கொண்டவனுக சுக்ரீவனுடைய அரண்மனையை இலக்குவன் அடைகின்றுன். அவனுடைய சீற்றத்தைத் தணிக்க வாலியின் மனைவியான தாரை எதிரே வருகிறுள். இந்த நிலையில் இளம் பருவத்தினளான தாரையைக் கண்ட இலக்குவனுக்கு அயோத்தியிலுள்ள தன்னுடைய மனைவியின் நினைவு வந்துவிட்டது என்கிறுர் வான்மீகி. இது மனித இயற்கை என்று சொல்லலாம். ஆனல், தமிழினத்தின் பண்பாடு மனித இயற்கையையும் வென்று நிற்பது என்று கம்பர் கருதுகிறுர். ஆகவே, வெள்ளாடையுடுத்தித் தன் எதிரே வந்து நின்ற தாரையைக் கண்டதும், அயோத்தியில் கணவன் தயரதனை இழந்ததால் விதவைக் கோலத்திலுள்ள 'தாயாரை நினைந்து நைந்தான்' என்று கம்பர் கூறுகிறுர். இன்னெருரு இளம் பெண்ணைக் காணுங்கால், தன் மனைவியை நினைத்துக் கொள்வதுகூட, ஆண் கற்புக்கு இழுக்கு என்ற ஒழுக்க நெறியை இங்குப் போதிக்கிறுர்.

இப்படி, எத்தனையோ இடங்களில் கம்ப ராமாயணத்தில் ஆணுக்கும் கற்பொழுக்கம் வேண்டும் என்று கம்பர் வற்புறுத்துவதைக் காண்கிறேம். வான்மீகியில் சீதையைத் தன் கொடிய கரங்களால் தொட்டிழுத்து இராவணன் தூக்கிச் சென்ற நிகழ்ச்சி கீழ்வருமாறு வருணிக்கப்படுகிறது:

''இராவணன் தன் எதிரிலிருந்த சீதையை நெருங்கி, அவளைத் தன் கொடிய கரங்களால் பற்றி இழுத்து, பின், அவள் கூந்தலைத் தன் இடது கையால் பிடித்து, இரு தொடைகளையும் தன் வலது கையால் தொட்டுத் தூக்கி, தன் மாயையால் படைக்கப்பட்டதும், கோவேறு கழுதைகள் பூட்டப் பட்டதுமானபொன்னுலானரதத்தில் அவளைவைத்து எடுத்துச் சென்றுன்.''

கற்புக் கனலியான சீதையை இராவணன் தொட்டுத் தூக்கிச் செல்வது தமிழினத்தின் நாகரிகத்திற்குப் பொருந்தாது என்று கருதியே, தொடாமல் இரதத்தில் வைத்து எடுத்துச் சென்றதாகக் கம்பர் கூறினுரென்று புலவருலகம் பேசுகின்றது.

சீதையை இராவணன் தூக்கிச் செல்வது ஆரண்யகாண்டத்திலே நிகழ்கிறது. அதே காண்டத்தில் அந்த நிகழ்ச்சிக்குச் சற்று முன்னர் மற்றெருரு அரக்கன் சீதையைக் கவர்ந்து செல்லுகிறுன். அவன் பெயர் விராதன். இந்த நிகழ்ச்சியைக் கூறுவதற்கென்று விராதன் வதைப்படலம் என்று தனியாக ஒரு படலத்தையே கம்பர் படைத்திருக்கிறுர். அன்னம் போன்ற மெல்லியலாளான சீதையை, அச்சத்தைத் தரும் தோற்றத்தையுடைய கொடிய விராதனெனவன் தன் இடது கரத்தால் தூக்கி, இடுப்பில் அணைத்தவண்ணம் எடுத்துக்கொண்டு வானவெளிக்குச் சென்று விடுகிறுன். இந்த அவலக் காட்சியை,

''நில்லும் நில்லும், என வந்து,
நிணம் உண்ட நெடுவெண்
பல்லும், வல்எயிறும், மின்னு
பகுவாய் முழை திறந்து,

அல்லி புல்லும் அலர் அன்னம்
அனையாளை, ஒரு கை,
சொல்லும் எல்லையில், முகந்து
உயர்விசும்பு தொடர''

என்ற செய்யுளில் காண்கின்றோம்.

தங்கள் தடந்தோள்களில் வில்தாங்கிய வீரர்களான இராமனும் இலக்குமணனும் தங்களால் காக்கப்படவேண்டிய சீதையை விராதன் தூக்கிச் செல்வதைக் காண்கின்றனர். வான்மீகியில் இந்த இடத்திலே சோகத்தால் கண்ணீர்விட்ட நிலையில் தன் தம்பியைப் பார்த்து,

''வைதேகியைப் பிறன் தொடுவதைக் காணும் போது ஏற்படுகின்ற துக்கத்தைக் காட்டிலும், தந்தையை இழந்தபோதும், அரசை இழந்த போதும் எனக்கு ஏற்பட்ட துக்கம் பெரிதல்ல''

என்று இராமன் கூறுகின்றான். கம்பனிலே இராமனுடைய வாய் பேசவில்லை. அவன் கையிலுள்ள வில் பேசுகின்றது. ஆம்; விராதனை வதைத்துச் சீதையை மீட்கிறது. கொடிய அரக்கர்கள் பிறன் மனைவியைத் தங்கள் கரங்களால் தொட்டுத் தூக்கிச் செல்வது வனப் பிரதேசங்களில் இயற்கையான நிகழ்ச்சி யென்று வான்மீகி கருதினார். அதனால்தான், விராதனும் இராவணனும் தங்கள் கொடிய கரங்களால் சீதையைத் தொட்டுத் தூக்கிச் சென்றனர் என்று கூறினார்.

பிறன் மனைவியை அவள் விருப்பத்திற்கு மாறாகத் தொட்டுத் தூக்கிச் செல்வது தமிழினத்தின் நாகரிகத்திற்குப் பொருந்தாததென்று கருதித்தான் இராவணன் தொடாமல் சீதையைத் தூக்கிச் சென்றதாகக் கம்பர் கூறினாரென்றால், அரக்கனான விராதன் மட்டும் சீதையைத் தன் கொடிய கரங்களால் எடுத்து இடுப்பில் அணைத்துக்கொண்டு வானவெளிக்குச் சென்றான் என்று கூறினாரே, அது எதனால்? இங்கும் தொடாமல் தூக்கிச் சென்றதாகக் கூறியிருக்கலாமே! இல்லையேல் விராதன் வதைப்படலத்தையே சொல்லாமல் விட்டிருக்கலாமே!

அரக்கர்கள் பிறன் மனைவியைத் தொடுவது குற்றமெனக் கருதக் கூடியவர்கள் அல்லர். பிறன் தொடுவதனாலேயே ஒரு பெண்ணின் கற்பிற்கு இழுக்கு ஏற்பட்டு விடுவதும் இல்லை. இதனை உணர்த்தத்தான் விராதனும் இராவணனும் சீதையைத் தங்கள் கரங்களால் பற்றி யிழுத்துத் தூக்கிச் சென்றனர் என்று வான்மீகி கூறியிருக்கிறார்.

இராவணன் தொடாமலே பர்ணசாலையோடு சீதையைத் தூக்கிச் சென்றதாகக் கம்பர் கூறுவதற்குக் காரணம் இனவழிப்பட்ட நாகரிக வேற்றுமை அல்ல. விராதனின் கைப்பிடியில் சீதை சிக்கியிருந்தது சிறிது நேரந்தான். இராமன் விராதனைத் தாக்கத் தொடங்கியதுமே அவன் சீதையைத் தரையில் போட்டு விட்டு இராமனுடன் போர் செய்கிறான்; அந்தப் போரிலே மாண்டு போகிறான். இந்த நிகழ்ச்சி இராம-இலக்குமணரின் கண்ணெதிரே நிகழ்கின்றது. ஆகவே, விராதன் விஷயத்தில் யாரும் சீதையின் கற்பைச் சந்தேகிக்க வாய்ப்பே இல்லை.

இராவணனிடம் சீதை சிக்கியிருந்தது சுமார் பத்துத் திங்கள் அளவிலாகும். அசோக வனத்தில் சீதை சிறைப்பட்டிருந்தபோது, திக்கெட்டையும் தேவர் மூவரையும் வென்ற ஆற்றல் மிக்கவனான இராவணனுடைய கைதியாக அவள் இருந்தாள். அதனால்தான், சீதை மீட்கப்பட்ட பின்னரும் சோசல நாட்டார் அவளுடைய கற்பைச் சந்தேகித்ததாக வான்மீகி உத்தர காண்டத்தில் கூறுகிறார். இதற்கு அடிப்படைக் காரணம் சீதையை இராவணன் தொட்டுத் தூக்கிச் சென்றதுதான்.

இராமனிடமிருந்து இராவணன் சீதையைக் களவாடிச் சென்றபோதே அவளைத் தன் கரங்களால் தொட்டு, தன் தொடைமீது அமர்த்திச் சென்றானதலால், அன்னாருடைய ஆதிக்கத்திற்குள் அசோகவனத்தில் அவள் சிறைப்பட்டிருந்தபோது, அவன் அவளை என்னவும் செய்திருக்கக்கூடும் என்ற ஐயம் உலகத்தார்க்கு எழுவது இயல்புதானே! இந்த இயற்கையை உணர்த்தத்தான் உத்தர காண்டம் எனத் தனியாக ஒரு காண்டத்தையே படைத்தாக வேண்டிய தேவை வான்மீகிக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். கம்பனிலே, சீதையைத் தொடாமலே பர்ணசாலையோடு இராவணன் தூக்கிச் சென்றதால், உத்தர காண்டம் படைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை யெனலாம்.

இராம-ராவணர்போரின் முடிவிலே அசோகவனத்திலிருந்து சீதை மீண்ட பின்னர் அவளுடைய ஒழுக்கத்தை ஐயுறுவதுபோல இராமன் ஒரு நாடகம் நடத்துகின்றான்.

தன்னைச் சூழ்ந்திருக்கும் குரங்கினத்தாருக்கும், இலங்கையில் எஞ்சியுள்ள அரக்கர்களுக்கும் சீதையின் ஒழுக்கத்தைப் புலப்படுத்தத்தான் அவளைச் சந்தேகிப்பதுபோல இராமன் நடிக்கிறான்.

அசோக வனத்திலிருந்து மீட்கப்பட்ட சீதையானவள் இராமன் எதிரில் வந்து நின்ற போது, அவளைக் கண்ணுற்ற இராமனின் நிலையைக் கம்பரே வருணிக்கக் கேட்போம்:

கற்பினுக்கு அரசினை, பெண்மைக் காப்பினை,
பொற்பினுக்கு அழகினைப், புகழின் வாழ்க்கையைத்
தற்பிரித்து அருள்புரி தருமம் போலியை
அற்பின்அத் தலைவனும் அமைய நோக்கினன்

சீதையை நோக்கிய இராமபிரான் அவளது ஒழுக்கத்தில் ஐயங்கொண்டவன் போலப் பேசுகின்றான். இதனைப் பல செய்யுள்களிலே கம்பர் கூறுகின்றார். இரண்டு செய்யுட்களை மட்டும் இங்குப் பார்ப்போம்.

மருந்தினும் இனியமன் உயிரின் வான்தசை
அருந்தினே யே; நறவு அமைய உண்மையே
இருந்தனே யே; இனி எமக்கும் ஏற்பன
விருந்துள வோ, உரை வெம்மை நீங்கினுய்

''அன்பு நீங்கியவளே! இராவணன் நாட்டில் இருந்தபோது பிராணிகளின் மாமிசங்களே உண்டனே; மதுவை மிகுதியாகக் குடித்தனே; இனி, எமக்கும் நீ மதுவையும் மாமிசத்தையும் விருந்தாக்குவையோ?''

இராவணனுல் சிறைப்படுத்தப்பட்ட ஒரே காரணத்திற்காக இராமன் சீதையின் ஒழுக்கத்தைச் சந்தேகிப்பதானுல், அவளே மீட்பதற்காகப் போர் செய்தானே, அது எதற்காக? என்ற விஞ எழுகிறது அல்லவா? அதற்கு இராமனே விடை கூறக் கேட்போம்:

உன்னே மீட்பான் பொருட்டு உவரி தூர்த் தொளிர்
மின்னே மீட்டு உறுபடை அரக்கர் வேரறப்
பின்னே மீட்டு உறுபகை கடந்திலேன்; பிழை
என்னே மீட்பான் பொருட்டு இலங்கை எய்தினேன்.

''யான் இலங்கை வந்தது இராவணனுடன் போர் செய்து அவனே வதைத்து, உன்னே மீட்டு அழைத்துச் செல்லும்பொருட்டன்று; 'தன் மனேயாளேக் கவர்ந்து சென்றவனே இராமன் கொன்றிலன்' என்னும் பழியினின்றும் என்னே மீட்டுக் கொள்ளும் பொருட்டே இலங்கை வந்து போர் செய்து இராவணுதியரைக் கொன்றேன்'' என்கின்ருன்.

இந்த இடத்திலே, சீதையினுடைய கற்பைச் சந்தேகிக்கும் வகையில் வெளிப்படையாக இராமன் எதுவும் கூறவில்லேயென்பதையும், தவிர்க்க முடியாத காரணத்தால் ஆற்றல் மிக்க அரக்கனுல் சிறை வைக்கப்பட்ட கைதி என்ற நிலேயிலே சீதையானவள் மாமிசம் அருந்தவும், கள் உண்ணவும் பழகியிருக்கலாம் என்று மட்டுமே கூறுவதையும் நினேவில் கொள்ள வேண்டும்.

தொடரும்

# வழியனுப்பு விழா

இங்கிலாந்து நாட்டில், லண்டன் மாநகரில், ''ஆரிங்டன்ஸ்கொயர்'' என்னும் இடத்தில் கட்டப்பெற்றுள்ள, திருமுருகன் திருக்கோயிலுக்கு நடைபெறவிருக்கின்ற, திருக்குட நன்னீராட்டு விழாவிற்குச் சென்று, அங்குச் செந்தமிழ்க் கடவுளாம் திருமுருகனின் பெருமையினேப் பரப்புவதற்காக, இலண்டன் மாநகரத்துத் தமிழ்மக்களால் வேண்டி அழைக்கப்பெற்றுச் செல்லுகின்ற ''அருண்மொழியரசு'' திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்களேப் போற்றிப் பாராட்டி, வழியனுப்பி வைக்கும் முறையில், 26-7-78 புதன் அன்று, மாலே 6 மணியளவில், ஒரு பெரும் சிறப்புக்கூட்டம், திருமயிலே ஏ.வி.எம். இராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்திற்குத் தமிழக மேலவைத் தலேவர், 'சிலம்புச்செல்வர்' திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், தலேமை தாங்கினுர்கள். இசைமாமணி சீர்காழி கோவிந்தராஜன் இறைவணக்கம் பாடினுர். பின்னர், வாகீச கலாநிதி திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினுர்கள். அதனே அடுத்துத் தமிழக அசரவைக் கவிஞர் 'கவியரசு' திரு. கண்ணதாசன், திருமதி. சௌந்தராகைலாசம் அம்மையார், ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், பொள்ளாச்சி வள்ளல் திரு. நா. மகாலிங்கம், கவியோகி திரு எஸ். டி. சுந்தரம் ஆகியோர் பாராட்டு வாழ்த்துரைகள் வழங்கினர். இறுதியாகத் தலேவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், சிறப்புரை நிகழ்த்தினுர்கள்.

திரு. ஏ.வி. மெய்யப்பச் செட்டியார், திரு. சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பாதேவர், முதலிய பெருமக்கள் பலப்பலர், ஏராளமான மாலேகள் அணிவித்தும், பொன்னுடை முதலியன போர்த்திச் சிறப்பித்தும், திரு. வாரியார் சுவாமிகள் அவர்களுக்குத், தம் அன்பு வணக்கங்களேயும், வாழ்த்துக்களேயும் தெரிவித்து மகிழ்ந்தனர். பின்னர் திரு. வாரியார் சுவாமிகள் அவர்கள், தமக்கு வழங்கப்பெற்ற பாராட்டுரைகளுக்கு ஏற்ற இனிய சிறந்த மறுமொழிகள் கூறி, அரியதொரு சுவைமிக்க விரிவுரையாற்றி, அனேவரையும் மகிழ்வித்தார்கள். திரு. பித்துக்குளி முருகதாசர் அவர்களின் இன்னிசைப்பாடல்களுடன், விழா மிகவும் சிறப்பாக இனிது நிறைவெய்தியது.

இவ்விழாவிற் கலந்துகொள்ளச் சிறந்த பெரும் செல்வர்களும், கல்வியாளர்களும், உயர் அலுவலர்களும், பல்வேறு சபைகள்-சமாசங்கள்-மன்றங்கள்-கழகங்கள் ஆகியவற்றைச் சார்ந்த அன்பர்களும், ஆகிய பெரும் திரளான மக்கள் மிகுதியாக வந்திருந்து சிறப்பித்தனர்.

பாரிசு, இலண்டன், முதலிய நகரங்களுக்குச் சென்று, அங்கெல்லாம் திருமுருகனின் பெருமையையும், திருவருளேயும் சிறப்புறப் பரப்பிவிட்டு, நமது வாரியார் சுவாமிகள் அவர்கள், *10-8-78* அன்று சென்னேக்குத் திரும்பி, *11-8-78* முதல் நிகழ இருக்கும் சென்னேக் கம்பன் விழாவில் கலந்து கொள்ள இருக்கின்ருர்கள் என்பது, இங்குக் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

—ஆசிரியர்

# அரசவைக் கவிஞர்க்கு விருது வழங்கும் விழா

நமது தமிழ்நாடு அரசு, தனது அரசவைக் கவிஞராகக் 'கவியரசு' திரு. கண்ணதாசன் அவர்களை, அவர்களின் வாழ்நாள் முழுவதும் நியமித்துள்ளமை, தமிழர் அனைவர்க்குமே மகிழ்ச்சியும் பெருமிதமும் அளிக்கும் சிறந்த நற்பெருஞ் செயலாகும். அதன்படி நம் அரசவைக் கவிஞர் மாட்சிமிகு 'கவியரசு' திரு. **கண்ணதாசன்** அவர்களுக்கு விருது வழங்கும் விழா, 9-7-78 ஞாயிறன்று மாலை, சென்னை அண்ணாசாலையிலுள்ள இராசாசி மண்டபத்தில், மிகவும் சிறப்புற நிகழ்ந்தது.

மங்கள இசையும், தமிழ்த்தாய் வாழ்த்தும் நிகழ்ந்த பின்னர், கல்வித்துறைச் செயலர் திரு. சி. ஜி. ரெங்கபாஷ்யம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் வரவேற்புரை வழங்கினார். மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. **செ. அரங்கநாயகம்** அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். சென்னை தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றச் செயலாளர் திரு. டி. வி. **நாராயணசாமி** அவர்கள், தகுதியுரையினை (Citations) வாசித்தார்.

## தகுதியுரை

''திரு கண்ணதாசன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த திருப்பத்தூர் வட்டத்தில் சிறுகூடற்பட்டி என்னும் சிற்றூரில் 24-6-1927இல் பிறந்தார். இயற்பெயர் முத்தையா. தந்தையார் திரு. சாத்தப்பர். தாயார் திருமதி விசாலாட்சி.

இளமை முதலே தமிழ் இலக்கியங்களை நன்கு கற்றுப் புலமை வாய்ந்த திரு. கண்ணதாசன், கவிதை படைப்பதில் ஆற்றல் வாய்ந்தவராய்த் திகழ்ந்தார். பழைய மரபைப் போற்றியும், புதிய எழுச்சிக்கு வழி காட்டியும், தமிழ்க் கவிதை உலகிற்கு வளம் ஊட்டினார். புலவர்கள், பொதுமக்கள் என்ற இரு சாராரின் உள்ளங்களையும் தன் கவிதைத் திறனால் கவர்ந்து வருகிறார்.

கலை, இலக்கியம், பண்பாடு, அரசியல், தெய்விகம், வரலாறு ஆகிய துறைகளில் எல்லாம் கவியரசரின் தமிழ் எண்ணங்கள் வண்ணங்களாகி வனப்பூட்டுகின்றன. உரைநடைக்குக் கவிதையின் ஒளிவீச்சைக் காட்டியும், கவிதைக்கு எளிமையின் இனிமையைக் கூட்டியும், கவியரசர் கண்ணதாசன் தமிழ் இலக்கியத்திற்கு ஏற்றம் தந்திருக்கிறார்.

இவரது தமிழ் இலக்கியத் தொண்டினையும், சிறப்பாகக் கவிதைத் தொண்டினையும் பாராட்டி, தமிழக அரசு கவியரசர் கண்ணதாசனை 1-4-1978 முதல் வாழ்நாள் முழுவதும் அரசவைக் கவிஞராக்கிச் சிறப்பிக்கின்றது.''

எம். ஜி. இராமச்சந்திரன்.
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600009
9-7-78

தகுதியுரை வாசிக்கப் பெற்றதன் பின்னர்த் தமிழக ஆளுநர் மேதகு திரு. பிரபுதாஸ் பி. பட்வாரி அவர்கள் விருது வழங்கினார். **கவிஞர்** சுரதா, மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் **டாக்டர் வி. சி. குழந்தைசாமி**, மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி. திரு. பு. ரா. **கோகுலகிருஷ்ணன்**, மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. கி. **மனோகரன்**, மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் ஆகிய பெருமக்கள் பாராட்டுரைகள் நிகழ்த்தினர். அவற்றிற்குக் கவியரசு **கண்ணதாசன்** அவர்கள், ஏற்ற இனிய மறுமொழி யளித்தார். பின்னர் தமிழ் வளர்ச்சித்துறையின் இயக்குநர் திரு. **கொண்டல். சு. மகாதேவன்**, நன்றியுரை நவில, நாட்டுப்பண்ணுடன் விழா இனிது நிறைவெய்தியது. விழாவுக்குப் பெருந்திரளான பொதுமக்கள் வந்து சிறப்பித்து மகிழ்ந்தமை, குறிப்பிடத்தக்கது.

—**ஆசிரியர்.**

# சிவஞான போதத் தெளிபொருட் சுருக்கம்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

(முற்றொடர்ச்சி) ( ஆறும் சூத்திரம் )

**முன்னுரை :**

மேலே ஐந்தாம் சூத்திரத்தில், ''ஐம் பொறிகள் ஆன்மாவால் அளந்தறிந்தும், ஐம் பொறிகள் ஆன்மாவையும் தம்மையும் அறி யாதவாறு போல, ஆன்மாக்கள் 'தம் உணர் வின் தமி' எனப்பெற்ற கடவுளின் அருளால் உலகப் பொருள்களை அளந்தறிந்தும், அங்ஙனம் தமக்கு உலகப்பொருள்களை அறிந்து அறிவித்து உதவிவரும் கடவுளையும், தம்மையும் அறிந்து கொள்ள வல்லன அல்ல'' என்பது உணர்த்தப் பெற்றது.

பெறவே கடவுளாகிய முதற்பொருள் எவ் வாற்றானுமே அறியப்படாத பொருளோ? என்று ஐயம் நிகழும். அந்த ஐயத்தினை நீக்கு வதற்கு, **சத்து அசத்து** என்னும் பொருளி யல்புகள் இரண்டினையும் வரையறை செய்து, கடவுளாகிய பதிப்பொருளுக்குச் சிறப்பியல்பு என்னும் இலக்கணம், இனி இந்த ஆறும் சூத் திரத்தின்கண் கூறப்பெறுகின்றது.

**பலவகைக் கருத்துக்கள் :**

கடவுளாகிய முதற்பொருள், நம்மால் உணரக்கூடிய பொருளோ? அல்லது நம்மால் உணர இயலாத பொருளோ? என்பது பற்றிப் பலரும் பலவகை கருத்துக்கள் கூறுவர். (1) மாயாவாதிகள், கடவுள் நம் மனம் மொழி களுக்கு எட்டாமல் அப்பாற்பட்டு, வாக்கு மனாதீதமாக நிற்பர் என்பர். (2) நையாயிகர் கடவுள் உணரப்பெறும் பொருளே, வாக்கு மனாதீதம் என்றல் பொருந்தாது என்பர். (3) பாதஞ்சலர், கடவுட் பொருள் பாவனைக்கு எட்டக்கூடிய கோசரப் பொருளே என்பர். (4) சமவாதசைவர், ஆன்மாக்களுக்குப் பசுத்து வம் நீங்கியவழி, ஆன்ம ஞானத்திற்குக் கடவுள் கோசரம் ஆவர் என்பர். (5) சிவாத்துவித சைவர், கடவுட் பொருள் ஆன்மாவிற்கு பெத்த நிலையில் மட்டுமேயன்றி, முத்திநிலையினும் கோசரமாதல் இல்லை என்பர். இவ்வாறு இவர்களெல்லாம் கூறுகின்ற பல்வேறு கருத்துக் களும், ஆராய்ந்து முடிவு செய்தற்கு உரியன வாக உள்ளன.

## (1) மாயாவாதிகள் :

கடவுளாகிய முதற்பொருள், வாக்கு மனாதீதமாய், நம்மால் உணரப்பட இயலாத பொருள் என்று மாயாவாதிகள் கூறுவர். கடவுள் உணரப்படாத பொருள் என்றால், அவர் இருந்தும் அவரால் நமக்கு ஆவது ஒரு பயனும் இல்லை. அவரும் நம்பால் வந்து சேரமாட்டார்; நாமும் அவர்பால் சென்று சேர்தல் இயலாது. அத்தகைய ஒரு கடவுட் பொருளை உண்டு என்றல், ஆகாயத்தாமரையும், ஆமை மயிர்க் கம்பளமும் உண்டு என்பது போன்ற பயனில் போலிக் கூற்றே ஆகும்.

உணராத பொருள் சத்து என்னின்,
ஒருபயன் இல்லை; தானும்
புணராது, நாமும் சென்று
பொருந்துவ தின்றாம்; என்றும்
தணவாத கருமம் ஒன்றும்
தருவதும் இல்லை; வானத்து
இணரார்பூந் தொடையும், யாமைக்கு
எழுமயிர்க் கயிறும் போலும்!
—சித்தியார்.

## (2) நையாயிகர் :

கடவுளாகிய முதற்பொருள், நம் மன மொழி மெய்களுக்கு அப்பாற்பட்டது (வாக்கு மனாதீதம்) என்றல் பொருந்தாது: அது நம் மால் உணரக்கூடிய பொருளே என்று நையாயி கர்கள் கூறுவர். நம்முடைய அறிவு சிற்றறிவும் சுட்டறிவும் ஆதலால், அதுகொண்டு அறியப் படும் பொருள்களெல்லாம் அசத்தாய், அழி படும் தன்மையனவாகும். ஆதலின் அழிதல் இல்லாத சத்துப் பொருளாகிய கடவுள், நம் அறிவினால் அறியப்படக் கூடிய பொருள் அன்று.

''அசத்தாம்! சுட்டி
உணர்பொருள் ஆன எல்லாம்!'' (1)

''உண்டுபோல் இன்றாம் பண்பின்
உலகினை அசத்தும் என்பர்!'' (2)

''அசித்தாம் மனத்தினால்
தேர்வது எல்லாம்'' (3)

## (3) பாதஞ்சலர் :

முதற்பொருள், நம்முடைய சிற்றறிவு சுட்டறிவுகளுக்கு எட்டாததாயினும், நம்மு டைய பாவனைக்குக் கோசரம் ஆகும் என்று, பாதஞ்சலர்கள் கூறுவர். முதற்பொருள் பாவனைக்குக் கோசரமாகும் எனின், அப் பாவனைதான் நான்கு வகைப்படும். அவற்றுள்

நீ கூறும் பாவனை, மனம் முதலியவற்றோடு கூடிநின்று பாவிக்கும் பாவனையோ அவற்றோடு கூடாது நின்று பாவிக்கும் பாவனையோ? இரண்டும் இன்றிப் பாவிக்கும் பாவனையோ? இம் மூவகையும் அல்லாமல், பசித்தவன் உண்டதாகப் பாவிக்கும் பாவனைபோல, உணராத பொருளை உணர்ந்ததாக வைத்துப் பாவகம் செய்வதாகிய பாவனையோ என்று பற்பல ஐயங்கள் நிகழும்.

மனம் முதலியவற்றோடு கூடி நின்று பாவிக்கும் பாவகம் என்னின், அஃது அறிவினால் அறியப்பட்ட சுட்டே யாதலால், முதற்பொருள் அசத்தாய் முடியும். மனம் முதலியவற்றோடு கூடாமல் நின்று, பாவிக்கும் பாவனை என்னின், மனம் நீங்கிய வழி ஆன்மாவிற்கு அறிவு நிகழுமாறு இல்லை. மனத்தோடு கூடியும் கூடாமலும் நின்று பாவிக்கும் பாவகம் என்னின். அங்ஙனம் மனத்துடன் கூடியும் கூடாமலும் நின்று செய்யக்கூடிய பாவகம் என்பது எதுவும் இல்லை. இம் மூவகையும் அன்றிப் பசித்தவன் உண்டதாகப் பாவிக்கும் பாவகம் போலச் செய்யும் பாவகம் என்னின், அது வெறும் பாவனை மாத்திரமே அன்றி அதனால் ஒரு பயனும் இல்லை. இவ்வாற்றால் கடவுள் பொருள் பாவனைக்குக் கோசரமாகும் என்று கூறுதல் பொருந்தாது.

''பாவகமேல், தான்அசத்தாம்; பாவனாதீதம் எனில்,
பாவகமாம்; அன்றுஎன்னில் பாழ்அதுவாம்;—பாவகத்தைப்
பாவித்தல் தான்என்னில் பாவகமாம்; தன்அருளாற்
பாவிப் பதுபரம்;இல் பாழ்''

—சிவஞானபோதம்

''பாவிப்ப தென்னிற் பாவம்;
பாவகம் கடக்கிற் பாவம்;
பாவிக்குமது நான் என்னில்;
பாவகம்; பாவம் கெட்டுப்
பாவிப்பது என்னில் பாவம்;
பாவனை இறந்து நின்று
பாவிக்கப் படுவ தாகும்
பரம்பரன் அருளி னாலே''

## (4) சமவாதசைவர் :

கடவுளாகிய முதற்பொருளைத், தம்மைப் பற்றியுள்ள பசுத்துவம் நீங்கியவழி, ஆன்மாக்கள் தம்முடைய அறிவினால் அறிதல் இயலும் என்று சமவாதசைவர்கள் கூறுவர். அறியும் பொருளும், அறியப்படும் பொருளும் வெவ்வேறானவை ஆதலால், ஆன்மா முதற் பொருளைத் தன்னுடைய அறிவினால் அறிவதற்கு, முதற்பொருள் ஆன்மாவில் வேறல்லன். மற்றும், முதற் பொருள் ஆன்மாவிற்குச் சமமாதல் இன்றித் தூல சூக்கும முறையில், அதன் அறிவிற்கு உள்ளுமாய்க் கலந்து நிற்றலின், முதற்பொருளை ஆன்மா அறிதல் இயலாது. அன்றியும், ஆன்ம அறிவு எதனையும் தானே தன்னியல்பில் அறிய வல்லது அன்றி, முதற்பொருளின் துணை கொண்டே எதனையும் அறியும் இயல்புடையது. ஆதலால், பசுத்துவம் நீங்கியவழி, ஆன்மாக்கள் தம்முடைய அறிவினால் தாமே முதற்பொருளை அறிதல் இயலாது.

அந்நியம் இலாமை யானும்,
அறிவினுள் நிற்ற லானும்,
உன்னிய எல்லாம் உள்நின்று
உணர்த்துவன் ஆத லானும்,
என்னது யான்என்று ஓதும்
இருஞ்செருக்கு அறுத்த லானும்,
தன்அறிவு அதனாற் காணும்
தகைமையன் அல்லன் ஈசன்!

## (5) சிவாத்துவிதசைவர் :

இனி, முக்திநிலையில் முதற்பொருளாகிய சிவம் மட்டுமே உள்ளதாக, ஆன்மாவானது தான் என வேறு இன்றிச் சிவத்துடன் ஒன்றிக் கலந்து விடுவதனால், ஆன்மாக்கள் பெத்த நிலையில் மட்டும் இன்றி, முத்தி நிலையிலும், சிவமாகிய முதற்பொருளை அறிதல் இல்லை என்று சிவாத்துவிதசைகள் கூறுவர். உடலும் உயிரும் ஒன்றிக் கலந்து நிற்பினும், உடல் உடலே, உயிர் உயிரே, உடல் உயிராகாது, உயிர் உடலாகாது. அதுபோல முத்திநிலையில் ஆன்மா சிவத்தோடு கலந்து ஒன்றி நிற்பினும், சிவம் சிவமே, உயிர் உயிரே, சிவத்தில் கலந்து ஒன்றி நிற்கும் உயிர் இல்லாமல் அழிந்து போவது யில்லை. அதனாலேயே ''ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர் ஆருயிர் ஈருருக்கொண்டு ஆனந்த வெள்ளத்திடைத் திளைத்தால் ஒக்கும்'' என்று, மணிவாசகர் திருக்கோவையாரில் அருளிச் செய்தபடி, ஆன்மாவானது முக்திநிலையில் சிவத்தினை உணர்ந்து, அதன் இன்பத்தை இனிது நுகர வல்லதாகின்றது. ஆதலின் முதற் பொருளை முக்தி நிலையிலும் ஆன்மா அறிதல் இயலாது என்று, சிவாத்துவிதசைவர்கள் கூறுதல் பொருந்தாது.

''அதுவென்னும் ஒன்றன்று; அதுஎன்று வேறே
அதுஎன்று அறிஅறிவும் உண்டே;—அதுஎன்று
அறிய இரண்டலலன்; ஆங்கறிவுள் நிற்றல்
அறியும் அறிவே சிவமும் ஆம்''

—சிவ ஞான போதம்

''ஒன்றெனும் அதனால், ஒன்றென்று
உரைப்பதுண்டு; ஆகை யாலே
நின்றனன் வேறாய்த் தன்னின்
நீங்கிடா நிலைமை யாலே
பின்றிய உணர்வுக்கு எட்டாப்
பெருமையன்; அறிவின் உள்ளே
என்றும்நின் றிடுத லாலே
இவன்அவன் என்ன லாமே!''

—சிவஞான சித்தியார்

## ஆறும் சூத்திரம் :

இங்ஙனம் மாயாவாதிகள்-நையாயிகர்கள்-பாதஞ்சலர்கள் - சமவாதசைவர்கள் - சிவாத்துவிதசைவர்கள்-ஆகிய பலரும் கூறும் கருத்துக்களை ஆராய்ந்து, கடவுளாகிய பதிப்பொரு

ளுக்கு உரிய சிறப்பியல்பு எனும் இலக்கணம் இன்னதென்று, ஆறும் சூத்திரத்தில் சிவஞான போதம் தெளிவுற உணர்த்துகின்றது. அது வருமாறு:—

**''உணர்உரு அசத்துஎனின், உணராது இன்மையின்,**
**இருதிறன் அல்லது சிவசத்து ஆம்என,**
**இரண்டு வகையின் இசைக்கும் மன்உலகே''**

*(1)* இந்நூற்பாவுக்கு உரிய எழுவாயாக, மேலே ஐந்தாம் நூற்பாவில் வரும் 'தம் உணர்வின் தமி' என்னும் தொடரை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். 'தம் உணர்வின் தமி' எனினும்,கடவுள்-முதற்பொருள்-பதிப்பொருள்-சிவம் எனினும் ஒக்கும்.

*(2)* இந்நூற்பாவினை ''முதற்பொருள் ஆகிய இறைவன், உணர் உரு எனின், அசத்து; உணராது எனின் இன்மையின்; இருதிறனும் அல்லது சிவசத்து ஆம்என, இரண்டு வகையினும் இசைக்கும் மன் உலகு'' என்று கொண்டு கூட்டி, விரித்துரைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

158634

**ஆறும் சூத்திரப் பொருள் :**

பதியாகிய முதற்பொருள், அளவைகளால் அறியப்படும் இயல்புடையது என்றால், அங்ஙனம் அறியப்படும் உலகப்பொருள்கள் போல, அழிபொருள் ஆகிய அசத்து ஆகும். எவ்வாற்றானுமே அறியப்படாத இயல்பை உடையது என்றால், அங்ஙனம் அறியப்படாத முயற்கோடு, ஆமை மயிர்க்கம்பளம் என்பன போலச் சூனியமாய் அசத்து எனப்படும். ஆகலான் உணரப்படுதல், உணரப்படாமை ஆகிய இந்த இரண்டு கூறுபாடும் அன்றி, பாசஞான பசுஞானங்களால் ஒருவாற்றான் அறியப்படாமையும்; பதிஞானம் என்னும் சிவஞானம் ஒன்றால் மட்டுமே அறியப்படுதலும் ஆகிய இந்த இரண்டு வகையாலும், சிவமாகிய சத்தாய் (சித்துச்சத்தாய்) உள்ளது முதற்பொருள் என்று, மெய்யுணர்வின் நிலைபெற்று உயர்ந்தோர் கூறுவர்.

**அருஞ்சொற்பொருள் :**

1. உணர்உரு : அறியப்படும் பொருள், அநுபவஞானத்திற் புலனாகும் பொருள்.

2. உணராதது : அறியப்பட முடியாததாகிய பொருள்.

3. இன்மை : சூனியம்; அசத்து, பாழ்.

4. இன்மையின் : இல்லையாகிய சூனியம் (அசத்துப் பொருள்) ஆகிவிடுதலால்.

5. சிவசத்து : சிவமாகிய சத்து. சத்து : உட்பொருள். சிவசத்து எனினும், சித்துச் சத்து எனினும் ஒக்கும். சித்துப் பொருள்கள் மூன்று வகைப்படும். சித்துச்சத்து—பதி. சித்துசடசத்து—பசு. சடசித்து—பாசம். இவற்றுள் பசுவையும் பாசத்தையும் நீக்குதற்குப் பதிப் பொருளைச் சித்துச் சத்து என்னும் பொருளில், சிவசத்து என்றார். சித்து சத்து என்னும் இரண்டினுள் இறைமைத் தன்மைக்குரிய ஏனைய எல்லாக் குணங்களும் அடங்கும்.

6. மன்னுலகு : மெய்யுணர்வின் நிலைபெற்று உயர்ந்தோர் (மன்-நிலைபெற்ற. உலகு - உயர்ந்தோர். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது தொல்காப்பியம். இசைக்கும்—கூறுவர்; செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று).

**பதிபசு பாசம் :**

*(1)* இறைவனாகிய பதிப் பொருள், யாவற்றினும், யாவையினும் வேறாய் நிற்பினும், ஒன்றிக் கலந்து உடனாக இருந்து இயக்கி நிற்கும் அறிவுப் பொருள் ஆதலின் சித்தாயும்; என்றும் ஓர் இயல்பாய் நிலைபெற்று உள்ளது ஆதலின் சத்தாயும் விளங்குதலால், சித்துப் சத்து எனப்படும். சித்துச்சத்து எனினும், சிவசத்து எனினும் ஒக்கும். சித்து-அறிவுப் பொருள். சத்து-உள்பொருள்.

*(2)* பசுக்களாகிய ஆன்மாக்கள், பாசம் ஆகிய அசத்தோடு கூடி அசத்தாயும், பதியாகிய சத்தோடு கூடிச் சத்தாயும், சார்ந்ததன்வண்ணமாய் நிற்கும் தன்மையதாதலின் சதசத்து எனப்படும். சத்து-நிலையாக உள்ள பொருள். அசத்து-நிலையில்லாதபொருள்.

*(3)* பாசம் என்னும் மலமாயை கன்மங்கள், அறிவில்லாத பொருள்களாய்ச் சடமாகிய அசித்தாயும், ஒரு தன்மைத்தாய் நில்லாமல் அவ்வப்போது தம் ஆற்றல்களில் மேற்பட்டும் அடங்கியும் மாறிவரும் நிலையில் பொருள்களாய் அசித்தாயும் இருத்தலால், 'அசித்து அசத்து' எனப்படும். அசித்து-அறிவில் பொருள். அசத்து-நிலையில் பொருள்.

**முடிவுரை :**

இந்தச் சிவஞானபோதத்து ஆறும் சூத்திரத்தின் பொருளை, முழுவதும் அடியொற்றி விளக்குவதாக அமைந்துள்ள, பின்வரும் சிவஞானசித்தியார் செய்யுள், அன்பர்கள் அனைவரும் அறிந்து மகிழத்தக்கதாகும்.


''அறிவுறும் பொருளோ? ஈசன்
அறிவுறா தவனோ? என்னின்,
அறிபொருள் அசித்து அசத்துஆம்;
அறியாதது இன்றாம்; எங்கும்
செறிசிவம் இரண்டும் இன்றிச்
சித்தொடு சத்தாய் நிற்கும்;
நெறிதரும் சித்தின் முன்னர்,
அசத்தெலாம் நின்றி டாவே''

—சித்தியார், 240


**(சிவஞானபோதம், பொதுஅதிகாரம் முற்றுப்பெற்றது)**

**—தொடரும்**


TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEAR
1978
MADRAS-8




கும்பகோணத்திற்கு அருகில் உள்ள
திருவிண்ணகர் ஒப்பிலியப்பன் திருக்கோயில் உற்சவர் திருவுருவம், பூமி தேவியுடன்.



அருள்மிகு ஜனக நாராயணப் பெருமாள், இரு தேவியருடன்
சோழ வந்தான், மதுரை மாவட்டம்.



பழநி அருள்மிகு திருவாவினன் குடிக்கோயிலில் நிகழ்ந்த சங்காபிடேக விழா நிகழ்ச்சியின் காட்சியும், அக்கோயிலின் திருக்குடநன்னீராட்டு ஆண்டு நினைவுப் பெருவிழாவில், நமது அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், ஐ. ஏ. எஸ். அவர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துதலும்; உடன் இருப்போர் திரு. எஸ். பி. இராமநாதன் செட்டியார், பி.ஏ., மதுரைத் துணை ஆணையர் திரு. கே. சிதம்பரம், பி. ஏ., முதலிய பெருமக்கள். [14—7—1978].



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.